வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN




194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 தை திங்கள் 6-ம் நாள் (19—1—1964) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 3 | இதழ் 34

# மீண்டும் துவேஷப் பிரசாரம்

## சிங்களப் பகுதிகளில் தமிழரை எதிர்த்து நடவடிக்கைகள்

தமிழ் பேசும் மக்களைக் கீழ்த்தரமாகத் திட்டியும், அவர்களை இந்த நாட்டைவிட்டு ஓட்டிவிட வேண்டு மென்றும், இல்லாவிட்டால் அடித்து வதைத்து, துப்பாக்கியால் சுட வேண்டும் என்றும் சில சிங்கள வகுப்புவாதிகள், சிங்களப் பிரதேசங்களிலும் மலைநாட்டிலும் தீவிரமாக வகுப்புவாதப் பிரசாரம் செய்து வருவதாக நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன.

### சிங்களத் திணிப்பு

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் சிங்கள அமுலுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் தென்படுவதாக நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன. விசாரணைப் பகுதி போன்ற இடங்களிலும், நிர்வாகப் பகுதிகளிலும் சிங்கள ஊழியர்கள் கடமையாற்றுவதால் தமிழ் பேசுவோர் சங்கடங்களுக்குள்ளாவதாகத் தெரிகிறது.

ஒரு பிரபல வைத்தியர் யாழ்ப்பாணமிருந்து கொழும்பு வருவதற்கு இலவசப் பிரயாணச் சீட்டு முற்றிலும் சிங்களத்தில் வழங்கப்பட்டதனால், அந்த டாக்டர் தமது பிரயாணத்தின் போது சங்கடப்பட நேர்ந்ததாம்.

கச்சேரியில் காணி விடயமாக போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஒரு பிரமுகர் எழுதிய கடிதத்துக்கு சிங்களத்தில் பதில் அனுப்பப்பட்டதாகவும் அறிகிறோம்.

கொழும்பில் உள்ள பல இலாகாக்களிலும் சம்பளப் பட்டியல், முன்பணப் பட்டியல்கள் சிங்களத்தில் எழுதப்படுவதைத் தொடர்ந்து கிளர்ச்சிகள் ஏற்படுவதால் ஓரளவு சிங்கள அமுலில் தயக்கம் தென்படுகிறதாம்.

பலவந்தமாகப் பல தமிழ் ஊழியர்களை சேவையிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையும் விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

தமிழரசுக் கட்சிப் போராட்டக் குழுவினர் தமிழ்ப் பிரதேசங்களில் நிலமையை நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றனர் என்றும், விரைவில் போராட்டத்திட்டங்கள் வெளியிடப்படும் என்றும், எக் கணமும் நேரடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கலாம் என்றும் தமிழரசுக் கட்சி மேலிடம் அறிவித்துள்ளது.


நாடற்றவர்களுக்கு எதிராகவே இத்தகைய பிரசாரங்களைச் செய்வதாகக் கூறிக்கொண்டு தமிழ் பேசும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் எதிராக இன வெறியைத் தூண்டிவிடும் அளவுக்கு பிரசாரம் நடைபெறுகிறது.

ஊவா மாகாணத்தில் அண்மையில் இத்தகைய இனச் சண்டை மூட்டும் பணியில் சில பௌத்த பிக்குகள் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் ஈடுபட்டிருந்ததாயும், இதையிட்டு பொலீசாரிடம் பல தடவைகள் முறையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றும் நமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

#### 'நாம்-சிங்களவர்'

"நாம்-சிங்களவர் இயக்கம்" என்ற பெயரில் வெளி

(9-ம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தினர்க்காக டாக்டர் ஜே. ஏ. ஞானப்பிரகாசம் சமைத்த விபுலாநந்த அடிகளாரின் சிலை 14-1-64 மாலை, ஸ்ரீமத் சுவாமி நடராஜாநந்தாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டபோது எடுத்த படம். படம்: ராஜா ஸ்ருடியோ.

## தமிழ் பிள்ளைகளின் கல்விக்கு பேராபாயம்

### நாட்டில் பரவலாக தமிழொழிப்பு நடக்கிறது

மலைநாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்குப் பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. தென்னிலங்கையிலும், ஏனைய சிங்களப் பிரதேசங்களிலும் கொழும்பிலும் கூட பல பாடசாலைகளிலிருந்த தமிழ்ப் பிரிவுகளுக்கு மூடுவிழா நடைபெற்று வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## தடுப்பு முகாமில் சிங்களம்

கொழும்பு — கொம்பனி வீதியிலுள்ள தடுப்புக்காவல் முகாம மனித சஞ்சாரத்திற்குத் தகுதியற்ற தென்பதைப் பல பத்திரிகைகள் அவ்வப்போது எடுத்துக் கூறியுள்ளன. 300க்கும் மேற்பட்ட சந்தேகப் பிரஜைகள், 30 பேர்கூட வாழப் போதுமானதற்ற இடத்தில் வாழும் அவல நிலையை சுதந்திரனும் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளது.

இந்த முகாமின் சீர்கெட்ட நிலையை நேரில் சென்று கவனித்த இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவரும் நல்லூர் பிரதிநிதியுமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் குடியகல்வுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு முகாமின் நிலையில் பல சீர்திருத்தங்களையும் புதிய கட்டிடங்களையும் உருவாக்கியுள்ளார்.

நாகநாதன் அவர்கள் தலையிட்டின் பின்னர் முகாமில் இரு புதிய கட்டிடங்களும் குளிக்க கூடுதலாகத் தண்ணீர்க் குளாய்களும் அமைக்கப்பட்டுள்ளன.

11-1-64ல் மீண்டும் தடுப்புக் காவல் முகாமிற்கு விச

(8-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் சிங்களக் குடியேற்றம்

அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் நூற்றுக்கு நூறு வீதம் சிங்களவர்களையே குடியேற்றிவிட அரசாங்கம் அந்தரங்கத் திட்டம் தீட்டிவருவதாகத் தெரிகிறது. சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் காணியற்ற இஸ்லாமியர்களையும் வஞ்சிக்க அரசாங்கம் முனைந்துள்ளதால் மக்கள் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மூதூர் தொகுதிக்குள்ளடங்கிய அல்லைக் குடியேற்றத்திட்டத்தில் பெருவாரியாகச் சிங்களவர்கள் ஏற்கனவே குடியேற்றப்பட்டதால், தமிழ் பிரதேசமாகப் பண்டுதொட்டு விளங்கி வந்த அப்பிரதேசம் சிங்களப் பிரதேசமாக மாறிவிட்டது. மேற்கொண்டும் அதே பகுதியில் ஏராளமான சிங்களவர்களைக் குடியேற்றி அப்பகுதியை முற்றாகச் சிங்களப் பிரதேசமாக மாற்றிவிட அரசாங்கம் அந்தரங்கமாகத் திட்டமிட்டுச் செயலாற்றி வருவதாகத் தெரிகிறது.

அல்லைக்கு அண்மையிலுள்ள ஈச்சிலம்பற்றை என்ற தமிழ்க் கிராமத்தில் காணியற்றவர்கள் என்ற வகையில் ஆக பன்னிரண்டு பேர் மட்டும் உள்ளனர். இவர்களுக்கு மட்டும்தான் சாக்குக்காக அல்லைத் திட்டத்தில் குடியேற வசதி அளிப்பதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். சுற்றுவட்டாரத்தில் பல்லாயிரக்கணக்கான இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவர்கள் காணியின்றி இருந்தும் கூட, அவர்களுக்கு குடியேறும் வாய்ப்பை அரசாங்கம் அளிக்கப் போவதில்லையாம்.

ஏற்கனவே அல்லையில் குடியேறிய சிங்களவர்களின் சொந்தக் காரர்களுக்கே முதல் சலுகைகள் வளங்கவும், பின்னர் வேறு பகுதிச் சிங்களவர்களுக்கு வாய்ப்பளிக்கவுமே அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்கிறது.

காணி அமைச்சின் இத்தகைய முடிவு மூதூர் தொகுதியிலுள்ள முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பரபப்பை ஏற்படுத்தியிருப்பதாக நமது நிருபர் தெரிவிக்கிறார். மூதூர்த் தொகுதியில் வாழும் இஸ்லாமிய இந்து, கிறிஸ்தவ சமூகத்தவர்களைச் சிறுபான்மையினராக்கவே அரசாங்கம் திட்டமிட்டுச் செயல் புரிகிறது என்று அவர்கள் குமுறிக் கொண்டுள்ளனர் என்றும் நமது நிருபர் அறிவித்துள்ளார்

1963ம் ஆண்டின்

**சிறந்த நாடகக் கலைஞர் யார்?**

(12ம் பக்கம் பாருங்கள்)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு வந்துற்ற துயர் துடைக்க களம் நோக்கி விரைவீர்

## சேய்த் தமிழர்க்கு தாய்த் தமிழ் கவிஞர் அழைப்பு

கிழக்கு மலரணையில் தூங்கிக்
கிடந்து
விழித்தான்; எழுந்தான்;
விரிகதிரோன் வாழி!
அழைத்தார்கள் அன்பால்
திராவிடர்கள் உம்மை!
மொழிப்போர் விடுதலைப்போர்
மூண்டனவே இங்கே!
விழிப் பெய்த மாட்டீரோ!
தூங்குவீரோ மேலும்?
அழிப்பார் தமிழை! அடிமையிற்
சேர்ப்பார்!
ஒழிப்பீர் பகையை! நொடியில்
மறவர்
வழித் தோன்றும் மங்கையீர்,
காளையரே வாரீரோ!

ஈழத் தமிழகத்தில் மூண்டு விட்ட அறப்போர்க் களத்துக்கு, நீடுதுயில் நீக்கி விரையுமாறு, கன்னியரை காளையரை செஞ்சொற் கவிஞனொருவன் தீந்தமிழ் கவிதை தீட்டி திருப்பள்ளி யெழுச்சி பாடுகிறான் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? இல்லை. எழுச்சிமிகு இக் கவிதை அடிகளுக்குச் சொந்தக்காரன் சேய்த் தமிழ் நாட்டுக் கவிஞன் அல்ல, தாய்த் தமிழ் நாட்டுக் கவிஞன் பாரதிக்கு ஒரு தாசன் பாரதிதாசன்!

> புரட்சிக் கவிதைகள் மூலம் புதுமையையும் எழுச்சியையும் புரட்சியையும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உருவாக்கியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அன்னாரின் கவிதைக் கடலில் மூழ்கி எழுச்சிமிகு கவிதைகளை காலத்திற்கு ஏற்றமுறையில் தந்துள்ளார் தாமரைமணாளன். வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் புடைத்தெழுந்துள்ள எழுச்சியை மேலும் தட்டிவிடக்கூடிய முறையில் அமைந்துள்ளது இக்கட்டுரை. விசை ஒடிந்த தேகத்தில் வன்மைபெற இதுபோன்ற கட்டுரைகள் வரவேற்க படுகின்றன.

நஞ்சு நிகர் இந்தியினை நாட்டித் தமிழமுதை வெஞ் சேற்றுப் பாழ்ங் கிணற்றில் வீழ்த்த வரும் வடவர் ஆதிக்கத்தை எதிர்க்கப் போர்க் குரல் எழுப்புகிறார் கவிஞர். இந்தியின் இடத்தில் சிங்களம், வடவர் ஆதிக்கத்துக்குப் பதில் சிங்களவர் ஆதிக்கம், என்று வைத்துப் பார்த்தால், கவிஞரின் அழைப்பு சேய்த் தமிழ் நாட்டுக் கன்னியர்க்கும் காளையருக்கும் அற்புதமாகப் பொருந்துகிறது!

### பாரதிக்குப் பின்

பாரதிக்குப் பின் தமிழ் மக்களது உள்ளங்களில் மண்டிக்கிடந்த அடிமை மோகத்தைப் போக்கடித்து, தமிழ் மொழிப்பற்றை, தமிழ் இனப்பற்றை, தமிழ் நாட்டுப்பற்றை மூட்டிவிட்ட பெருமை முழுதும் கவிஞர் பாரதிதாசனைச் சாரும்.

### தாமரைமணாளன்

தமிழ் மொழியும், இனமும், தமிழ் நாடும் சீரோடும் சிறப்போடும், பேரோடும் புகழோடும் வாழக் காலமெல்லாம் கனவு கண்டவர் பாரதியார். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், 'தமிழ்த்திருநாடு தனைப் பெற்ற, எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா' என்றும், 'விதியே, விதியே தமிழச் சாதியை என்செய நினைத்தாய் எனக்குரையாயோ' என்றும், 'தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள், தெய்வங்கண்ட கவிகள் பிறந்திருக்கிறார்கள்' என்றும், தனது பாட்டாலும் எழுத்தாலும் அக்கனவை நனவாக்கப் பாடுபட்டவர்.

பாரதியாரின் தமிழ் தேசியம், பாரத தேசியத்திற்கு அரணாக முரணாக அமையவில்லை யென்பது உண்மையே. பாரத மணித் திருநாட்டின் ஒரு அங்கமாகவே தமிழ் திருநாட்டைக் கண்டவர் பாரதி. ஆனால் இஃது அவரது குற்றமல்ல. அவர் வாழ்ந்த காலமும் சூழ்நிலையும் அ;ப்படிப்பட்டது இதை மறந்து அவரது தமிழ் தேசியத்தை மறைத்தும் குறைத்தும் பேசி, அற்ப மகிழ்ச்சியடையப் பார்க்கிறார்கள் ஒரு சிலர். அப்படிப்பட்டவர்களுக்காக கழிவிரக்கப்படுவதைவிட வேறு வழியில்லை.

### சுதந்திரப் பயிர்

பாரதிக்குப் பிறகு வந்த பாரதிதாசன் தமிழ் தேசியத்தைப் பாரத தேசியத்துக்கு முற்றிலும் முரணாக அமைத்தார். கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், தமிழும் மொழி வழி பிரிந்து, இனவழி ஒன்று கூடும் சுதந்திர திராவிடத்தைக் காண முனைந்தார். அவரது பாடல்களின் ஒவ்வொரு அடியிலும் இந்தத் தேசியக் கனல் கொப்பளிப்பதைக் காணலாம். அவரது உயிர்த்துடிப்புள்ள பாடல்களே நாடென்னும் பயிர் தமிழ் மக்கள் இதயங்களில் முளைவிடுவதற்கு மழையாகவும், வெப்பமாகவும் இருந்தன இருந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

கவிஞரின் அதே பாடல்கள் ஈழத் தமிழ் மக்களது உள்ளங்களிலும் ஒரு சுதந்திரத் தமிழரசுப் பெயர் முளைவிட்டுப் வளர்வதற்கு மழையாகவும் வெப்பமாகவும் பயன்படும் என்பதிலும் ஐயமில்லை.

கொற்றமும், கொடியும் கொண்டு பண்டு பாரை யாண்ட தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக அடிமைத் தளையில் மூழ்கிக்கிடக்கிறார்கள். உண்டு உடுத்து இரண்டுகால் மாடு போல வாழ்வதே வாழ்வு என்று எண்ணுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு சுதந்திரத்தின் அருமையும், பெருமையும் தெரியவில்லை. அதைப் பெறும் வழியும் புரியவில்லை. இதை அழகான ஒரு கவிதையால் விளக்குகிறார் கவிஞர்

தித்திக்கும் பழம் தின்னக்
கொடுப்பார்;
மதுரப் பருப்பு வழங்குவார்
உனக்குப்;
பொன்னே, மணியே,
என்றுனைப் புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே
அதோ பார்!
உன்னுடன் பிறந்த சின்ன
அக்கா,
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங்கீற்றுப் பொன்னூசல்
ஆடிச்
சோலை பயின்று சாலையில்
மேய்ந்து
வானும் மண்ணுந்தன்
வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச்
சதமோ?
அக்கா அக்கா என்று நீ
அழைத்தாய்,
அக்காவந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம்
கிளியே?

தியாகத்தின் முடிவிலேயே சுதந்திரம் ஆரம்பமாகிறது. அதற்குமுன் அடிமை வாழ்வு வாழ்வோர் தாம் அடிமைகள் என்பதை உணர வேண்டும். அப்படி உணர்ந்து [illegible] அவர்கள் பாதி [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

சில விசேஷ மருந்துகள்

**பாலபந்து** (விளக்கெண்ணெய்) குழந்தைகளுக்குண்டாகும் கரப்பான், சொறி சிரங்குகள், மாந்தம், கணை, பூச்சிக் கோளாறுகள், கக்குவான் இருமல், இளைப்பு, இருமல், நெஞ்சு சிறுகிறுப்பு, மலச்சிக்கல், விதை வீக்கம் முதலிய எல்லா பால ரோகங்களுக்கும் சிறந்தது. ஒரு மாதக் குழந்தையிலிருந்து, 12 வயது வரைக்கும் கொடுக்கலாம்.

அளவு : 1 சொட்டு முதல் 10-15-20 சொட்டுவரை

விலை : ½ அவுன்ஸ் சீசா ரூ. 2-25

**S. N. குரு தைலம்** இம் மருந்தின் குணங்கள் எவருக்கும் தெரியும்படி பிரசித்தமானது. அநேக வருத்தங்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும் வெளிக்கும் பாவிக்கத் தகுந்தது.

விலை : டப்பா 1 ரூ. 2·00

**விரேசன மாத்திரை** விரேசனத்திற்கு விசேஷமான மருந்து. காலையில் 1—2 மாத்திரை சாப்பிட்டு தண்ணீர் குடித்தால் பேதியாகும்; வெந்நீர் குடித்தால் நின்றுவிடும். விரேசனத்திற்கு "இவ்வளவு நல்ல மருந்து வேறு கிடையாது.

விலை : 25 மாத்திரை ரூ. 3-00

**பிரஹத் ஜாத்யாதிகிருதம்** (வெளிப் பிரயோகத் திற்கு மட்டும்) வெட்டுக்காயம், குழிப் புண்கள், சொறி சிரங்குகள், இரத்த வாதப் புண்கள், (எக்ஸிமா) கரப்பான், மர்மங்களிலுண்டாகும் புண்கள், முதலிய நாள் பட்டதும் புதியதுமான எல்லா விதப் புண்களுடைய, வலியும், சீழ்வடிவதும், வீக்கமும், விரைவில் நிறுத்தி காயச் செய்கிறது. இம் மருந்தால் ஆறாத புண்கள் கிடையாது.

விலை : 1 அவுன்ஸ் 2-25

**எஸ். என். குரு மெடிக்கல் ஹால்,**

80, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.

## கவிதைப் பூங்கா

### மொழி காத்திடுவோம்!

—க திருச்செல்வம்—

சங்குக் கழுத்தினில் மாலையிட்டு—மஞ்சம்
சாய்ந்து மயங்கிக் குழல் கோதி—அவள்
குங்குமக் கன்னத்தில் முத்தமிட்டு--இதழ்
கூடிச் சுவைத்துக் கிடப்போரே—தினம்
இங்கு குரங்குகள் ஆட்சியிலே—தமிழ்
ஏங்குகையிலே, உளம் தேம்புகையில்—இளம்
மங்கையர்கள் சுகம் தான் பெரிதோ—எங்கள்
மாத்தமிழாள் சுகம் தான் பெரிதோ?

தேனை நிகர்த்த சுவை உடையாள் - இளந்
தென்றல் தரும் சுகம் ஈந்திடுவாள்—தொடு
வானை நிறைத்த புகழ் உடையாள்—இந்த
வையகத்தின் முதற்பேரெழிலாள்—பெருந்
தானைபல கொண்டு தாரணியில்—ஒளிர்
தங்க வதனத்துப் புன்னகையாள்—இங்கு
பூனை நிகர்த்தவர் ஆட்சியிலே—சிறை
போன வளாய் நின்று வாடுகிறாள்!

சிங்கத்தமிழ்க்குலம் தேய்ந்திடுமோ—சில
சிங்களரால் குலை சாய்ந்திடுமோ - ஒளி
மங்கித் தமிழ் மொழி மாய்ந்திடுமோ—புகழ்
மாண்டிடுமோ, கொடி தாழ்ந்திடுமோ—கடல்
பொங்குதல் போல் இளஞ் சிங்கங்கள் —சேர்ந்து
புறப்படுவோம், தடை போக்கிடுவோம்—உடன்
எங்கள் உரிமைக்குப் போரிடுவோம்—துயர்
ஏற்றிடினும் மொழி காத்திடுவோம்!

### வீரம் எங்கே

—"பாண்டியூரன்"—

முறமொரு கையில் ஏந்தி
மோதிய புலியை வென்ற
அறவுரு அன்னைத் தெய்வம்
ஆக்கிய தமிழா! சுத்த
மறவனே புன்தாய்க்(கு) இன்று
வந்தது பகைவர் தொல்லை!
உறக்கமா உனக்கு; அன்னை
ஊட்டிய வீரம் மண்ணா?

வேங்கைபோற் பாய்ந்து வீணர்
விலாவினை யொடித்துக் கொட்டி
தேங்கிய பிணத்தின் மீது
தேருலாச் சென்று கானில்
தூங்கிய கழுகும் பேயும்
துயர்பசி தீர்த்தாய்! இன்று
தூங்கிடும் உனக்கு அந்தத்
துணிவுதான் எங்கே யப்பா?

நாற்றிசை யுலகில் அன்று
நம்மவர் நாவா யூர்ந்து
காற்றையும் கொடிய சூறைக்
கடற்கொதிப் பதையும் வென்று
வேற்றுநாட் டரசை வீழ்த்தி
விண்புகழ் பெற்றார் என்றால்;
ஊற்றிலே வளர்ந்த உந்தன்
உயிருமோர் உயிரா இன்று?

பனிபடர் இமயந் தன்னிற்
பாய்புலி பொறித்தோ மென்றாய்!
தணலிலே வெந்தாலும் என்
தமிழுடன் சாவேன் என்றாய்!
நனிவளர் தாய் நாட்டிற்கு
நானுயிர் தாறேன் என்றாய்!
துணிவுடன் உரைத்த வாய்மைத்
தோள்வலி எங்கே யின்று?

கங்குலும் குளிரும் வெய்யோன்
கருகலும் காடும் மேடும்
பொங்குசெங் குருதி யாறும்
புயலெனும் பகைவர் நாடும்
எங்குதான் சென்றாலும் என்
இமைதுளி புறங்கா தென்றாய்!
மங்கிடா(த) உனது மானம்
வடித்த அவ்வாய்மை எங்கே?

போர்எனக் கேட்ட போது
புதுமணப் பந்தல் விட்டு
வார்குழல் மங்கை யூட்டும்
மதுவிதழ் மறந்தாய் அன்று;
கார்முகிற் கூட்டம் போலக்
களத்திலே வீரம் பெய்தாய்!
ஆர்வமேன் இன்று சிச்சி
அடுக்களைக் கிரையாய்ப் போச்சு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வே. சம்பந்தபிள்ளை,**
**காங்கேசன்துறை**

கே: வடக்கு-கிழக்கு மாகாணங்களிற் சிங்களத்தில் நிர்வாகம் நடைபெறுவிட்டாலும், எங்களுக்கு அன்னிய மொழியாகிய ஆங்கிலத்தில் நடைபெறுகிறது. தமிழரசுக் கட்சியினர் இதையும் எதிர்த்து, தமிழில் நிர்வாகம் நடத்தும்படி போராட்டத்தை நடத்தாமல், ஏன் தற்காலிகமாகத் தள்ளிப் போட்டுள்ளனர்?

ப: சிங்கள அமுலை எதிர்க்கும் போராட்டமே இது. அமுல் நடைபெற்றுலே போராட்டம் தொடரும். சிங்களத் திணிப்பை முறியடித்துவிட்டால் ஆங்கிலத்தை விரட்டுவது மிக எளிது.

ஃ

**ந. அரசு, பதுளை**

கே: சிங்களப் பத்திரிகைகள் தங்கள் மொழிக்காகவும், இனத்திற்காகவும் பாடுபடுவதைப் போல் சில தமிழ்ப் பத்திரிகைகள் பாடுபடுவதில்லையே ஏன்?

ப: பாடுபடாததோடு நின்றுல் பரவாயில்லையே! பணத்துக்காகத் தமிழினத்தையே காட்டிக் கொடுக்கின்றனவே!

ஃ

**செல்வி ஜயந்தி தோமஸ்,**
**மட்டுநகர்**

கே: பணமிருக்கும் மனிதரிடம் மனமிருப்பதில்லையே?

ப: மனமிருந்தால் பணம் அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளும்; எனவே மனமிருப்பதில்லை.

ஃ

**எஸ். கே. சூரியம்,**
**வீரமுனை**

கே: என்னை ஒரு சிங்களப் பெண் காதலிக்கின்றுள், நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளலாமா?

ப: செய்து கொள்ளுங்கள், அப்பெண்ணைத் தமிழச்சியாக்க முடியுமென்றால்.

ஃ

**ஆ. குணம்,**
**ஊர்காவற்றுறை**

கே: மூன்று வருடங்களாக எனக்காகக் கண்ணீர் வடித்தவள் இன்று என்னை வெறுப்பதன் காரணம் என்ன?

ப: மூன்றுண்டுகளாக வடித்து வடித்து, கைவசமிருந்த கண்ணீர் முழுவதும் வற்றிப் போய்விட்டதாக்கும் இனி வேறு வழி கிடையாதிருக்கலாம்.

கே: காதல் எதுவரை?

ப: கலியாணம் வரை.

ஃ

**கு. செல்வநாயகம்,**
**ஏழாலை, சுன்னுகம்.**

கே: ஒரு 10 வயது பையனைக் கொண்டு, 'காலம் சென்ற பிரதமர் எனக்குக் கனவில் தோன்றி, மக்களை அம்மையார் திருக்கூட்டத்தை ஆதரிக்கச் சொல்லும்படி சொன்ன'தாகக் கரடி விடுவித்தும், நிக்கவரெட்டிய உப தேர்தலில் மண் கவ்வியது ஏன்?

ப: 'காலஞ்சென்ற கதைகள்' எல்லாம்காலஞ்சென்று விட்டன அவை சிங்கள மக்கள் மத்தியில் இனி உயிர் பெற முடியாது.

ஃ

**அல்மெடா,**
**கொழும்பு-12**

கே: "காதல்" சிறப்புடையதெனக் கூறும் மாந்தர், நாய்கள் போன்ற விலங்கினங்கள் மத்தியிலும் காதல் நிகழ்வதாக எழுதுகிறுர்கள். இத்தால், "காமம்" என்ற சொல் மெருகிடப்பட்டு, காதல் என்ற மோஸ்தராகின்றது, இதுதானே உண்மை நிலை குயுக்தியாரே?

ப: மெருகிடப்பட்ட காமம் காதலன்று. காதலும் காமமும் இரு வேறு உணர்ச்சிகள். ஆனல் காமத்தின் அடிப்படையிலேயே காதல் எழ முடியும். காமம் தொடர்ந்து செல்லும்—காதல் இடையில் பட்டுவிடும்.

**க. இராமகிருஷ்ணன்,**
**பம்பலப்பிட்டி**

கே: கந்தோரில் என்னுடன் வேலை செய்யும் ஒரு பருவ மங்கை என்னைக் காதலிக்கின்ற மாதிரி நடித்துப் பல உதவிகளைப் பெறுகின்றுள் இவளுக்குக் கடைசியில் எப்படிப்பட்ட பாடம் ஒன்று கற்பிக்க வேண்டும்?

ப: கடைசியில் என்ன இன்றே கற்பியுங்கள். அது தான், நடிப்பைக் கைவிட்டு மனப்பூர்வமாகக் காதலிக்கும்படி அவளைத் தூண்டுவது, இல்லையேல், உதவிகளை நிறுத்துவது.

ஃ

**ஆ. வெள்ளையம்மா,**
**எவிங்டன் தோட்டம்**

கே: ஒழுக்கம் கெட்டு நீதி நேர்மையற்ற முறையில் வாழ்க்கை நடத்தி வரும் சிலர் ஒழுக்கம் தவருமல் நீதி நேர்மையுடன் வாழ்ந்து வருபவர்களின் வாழ்க்கையில் குற்றம் கண்டுபிடிக்க முயல்வது ஏன்?

ப: தங்களின் குற்றங்களை மறைக்கக் கையாளும் உபாயம் இது.

ஃ

**செல்வி மங்களேஸ்வரி,**
**மல்லாகம்**

கே: "பெண்புத்தி பின் புத்தி" என்று சொல்லுகிறுர்களே ஏன்?

ப: பின் நிகழக்கூடியதை முன் உணரும் புத்தியுடைத் தவர்கள் என்பதை எடுத்துக்காட்ட......

**குமாரச் செல்வன்,**
**ஏழாலை-மேற்கு**

கே: இந்தித் திணிப்பை எதிர்த்துச் சட்டம் எரிக்கப் போகின்றேம் என்றவுடன் "அறிஞர் அண்ணு"வை மாநில அரசாங்கம் கைது செய்தது. சிங்களத் திணிப்பை எதிர்த்துச் சட்டத்தைத் தமிழரசுக் கட்சி கொளுத்த, அம்மையார் திருக்கூட்டம் வாயடைத்து நிற்பதேன்?

ப: அது மட்டுமா? எரிப்பு, சிங்கள அமுலை நேரடியாக நடத்த முடியாமல் திணற வைத்து விட்டதே.

கே: மொழி வெறிபிடித்த அரசாங்கம், சிங்களத் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத் தினத்தன்று தாராளமனப் பான்மையுடன் நடந்து கொண்டதாக, யாழ். மாவட்டச் சிங்கள அதிபர் பத்திரிகைகளுக்குக் கூறியதன் பொருளென்ன?

ப: அடக்கு முறையை அள்ளி வீசாததுதான் அவரது 'தாராளமாக்கும்!'

ஃ

**அ. சிவப்பிரகாசம்,**
**ஏழாலைமேற்கு**

கே: அவிசாவளைப் பிரதிநிதி தற்பொழுது என்ன செய்கிறுர்?

ப: கொழும்பில் நடந்த வர்த்தக ஊழியர் சங்கம் நடத்திய வேலை நிறுத்தத்தின்போது "மௌனம் கலக ......

## எட்டப்பா, உனக்கு இறுதி எச்சரிக்கை

—"ஆரையூர் அமரன்"—

காட்டிக் கொடுக்கிற எட்டப்பா—உன்
கட்டுக் கதைஏட்டைக் கட்டப்பா
நாட்டைக் கெடுப்பதை விட்டப்பா—வெளி
நாட்டுக்குக் கம்பியை நீட்டப்பா

மூட்டைச் செயலினை விட்டப்பா—உன்
மூட்டை முடிச்சினைக் கட்டப்பா
சாட்டை அடிவிழும் முன்னப்பா—உன்
சீட்டுக் கிழிந்திடும் பின்னப்பா

கோடிப் புறமாகச் சென்றப்பா—நீயும்
கும்பிட்டு வாழ்கிறுய் நின்றப்பா
பேடித் தனமிதைச் செய்தப்பா—இன்னும்
சோடித்துச் சொல்லுறுய் பொய்யப்பா

பட்டம் பதவிகள் கேட்டப்பா—நீயும்
பந்தம் பிடிப்பது ஏனப்பா?
பட்டப் பகல்போல இன்றப்பா—உன்
திட்டம் தெரிந்தது நன்றப்பா

கொட்டி முழக்கிய வீரப்பா—மனக்
கோட்டை இடிவது பாரப்பா
கெட்டித் தனமெலாம் வீணப்பா—நாடு
கேலிதான் செய்யுது காணப்பா

ஏமாளிக் கும்பலைக் கூட்டப்பா—உன்
கோமாளிக் கூத்தினைக் காட்டப்பா
கோடரிக் காம்பாக நின்றப்பா—தமிழ்
குலத்தைச் சிதைப்பதேன் கொன்றப்பா

திட்டிய வாயினைப்பூட்டப்பா—தமிழ்
தேசம் விழித்தது கேட்டப்பா
மூட்டாள் தனத்தினை விட்டப்பா—ஒரு
மூலை முடுக்கினில் ஒட்டப்பா

துட்டுக்குத் தாளம்நீ போட்டப்பா—செய்த
தொண்டினை இன்றுடன் விட்டப்பா
வெட்கத்தைக் கக்கத்தில் வைத்தப்பா—உன்
வேடம் கலைத்துநீ ஓடப்பா.

தேர்தலுக்குப்பின் 'புதிய அரசியல் நிலைமை" ஒன்று ஏற்பட்டிருப்பதாகப் பொரளைப் பகுதியில் பேசிக் கொண்டு திரிகிறுராம்.

ஃ

**ஜெயராணி-சபாபதிப்பிள்ளை,**
**மல்லாகம்**

கே: குயுக்தி மாமியின் அரட்டைக் கச்சேரியைக் கேட்டு சிரித்து வயிறு புண்ணுகிவிட்டது. இதற்கு மருந்தைக் கூறும்.

ப: சிரிப்பை நிறுத்தும்—புண் ஆறிவிடும்.

ஃ

**இ. பேரின்பநாயகம்,**
**களுவாஞ்சிக்குடி**

கே: தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கும் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் தமிழர்களின் மண்டைக்குள் இருப்பது என்ன குயுக்தியாரே?

ப: ஒன்றுமில்லை. அவர்களின் மூளை ஏற்கனவே முழங்காலுக்கு இறங்கிவிட்டது.

கே: நிக்கவெரட்டிய தேர்தல் முடிவைப் பார்த்தால் இலங்கையில் இனி கண்ணிருக்கு மதிப்பில்லை என்பது எனது அபிப்பிராயம்...?

ப: கணவன் இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு மனைவி கண்ணீர் விட்டால், அது நீலிக் கண்ணீர் என்பது என் அபிப்பிராயம்!

ஃ

**மங்களேஸ்வரி-செல்வத்துரை,**
**மல்லாகம்**

கே: பெண்கள் காலமெல்லாம் கன்னியாகாவே இருக்க முடியுமா?

ப: முடியுமோ, முடியாதோ, ஏன் அப்படி இருக்க வேண்டும்?

கே: சிறிமா எப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு வருவார்?

ப: அகில இலங்கைக்கும் பிரதம மந்திரியாகிய பிறகு!

**திருவாளர்**
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

**பூ. புலேந்திரராசா,**
**நல்லூர்**

கே: எனது நண்பன் "யாழ் முரசு" என்ற பத்திரிகை ஒன்றை துவங்கவிருக்கிறுன்!

ப: நல்ல பெயர்—முரசு முழங்கட்டும்! ஆனல் இடையிலே ஓய்ந்துவிடலாகாது.

ஃ

**எம். எம். மர்ஜினு,**
**கிண்ணியா**

கே: மூதூர் இரண்டாவது எம் பி. மஜீதுக்கு வரும் சிங்களக் கடிதங்களை யாரிடம் போய் அவர் விளங்கிக் கொள்கின்றுர்?

ப: அவர் அரை மந்திரிகளை அடிக்கடி பேட்டி காண்பது இதற்காகத்தானே!

கே: மஜீதைவிட, முகம்மதலிக்கு, சிங்கள மக்களிடம் அதிக ஆதரவு இருப்பதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: சொந்த இனத்தின் நலன்களைக் கவனிக்க முடியாதவர் பிற இனத்தின் நலன்களைக் கவனிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்தவர்களாக்கும் அந்தச் சிங்களவர்கள்!

ஃ

**பெ. அந்தோனிப்பிள்ளை,**
**பஞ்சாலைத் தோட்டம்**

கே: எங்களது கேள்விக்குத் தங்களது பதிலைத் தாங்கிவரும் "கேட்டுப்பாருங்கள்" என்ற பகுதியைத் தங்கட்குத் தந்து உதவி வரும் அப்பத்திரிகையின் (சுதந்திரன்) ஆசிரியரவர்களைத் தங்கள் மூலம் பேட்டிகாண நான் மிகவும் விரும்புகிறேன். பேட்டி காணும் நாளை நிச்சயப்படுத்தி எனக்குத் தெரிவிப்பிரா குயுக்தியாரே?

ப: தயவு செய்து சுதந்திரன் அலுவலகத்துக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.





சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3000 தமிழ்ப்பிள்ளைகளுக்கு படிக்கவசதியில்லை

## மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்கள்

## பாடசாலைகள் பகிஷ்கரிப்பு: பதுளையில் பெரும் கிளர்ச்சி

**பதுளையில் "பாடசாலை புனரமைப்புத் திட்டம்" பெற்றோர்களைக் கலந்தாலோசிக்காமல் எதேச்சாதிகாரமாகத் திடீரென அமுல் நடத்தியதின் விளைவாக ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிக்களும் ஏற்பட்டன. இதனால் பதுளை நகரக் கல்லூரிகளில் கல்விபயின்று வந்த சுமார் 3000 தமிழ் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் இன்னும் எந்தப் பாடசாலைகளுக்கும் செல்லாமல், பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும்வரை காத்திருக்கின்றனர். அவர்களின் பெற்றோர் தொடர்ந்து கிளர்ச்சி செய்கின்றனர்.**

**இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர். நாகநாதன் பதுளைக்கு விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்து திரும்பியுள்ளார்.**

பதுளையில் பாடசாலை புனரமைப்புத் திட்டம் எவ்வித அறிவிப்புமின்றித் திங்கட்கிழமை (6-1-64) காலையில் அமுல் நடத்தப்பட்டது.

இதனால் தமிழ்ப் பெற்றோர்கள் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர்.

இதுவரை கத்தோலிக்கப் பாடசாலையாக இருந்த புனித பீட்ஸ் கல்லூரியைப் பதுளை மகா வித்தியாலயத்துடன் இணைக்குமுகமாகப் பாடசாலை சென்ற மாணவ மாணவிகள் வெளியேற்றப்பட்டனர்.

தர்ம தூதாக் கல்லூரித் தமிழ் மாணவர்கள் உட்பிரவேசிக்காமல் கதவுகள் மூடப்பட்டன.

இதனால் தமிழ்ப் பெற்றோர்கள் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். புனித பீட்ஸ் கல்லூரி மாணவர்கள் இந்தப் புனரமைப்பு அநீதியை எதிர்த்துப் போராட்டமும் நடத்தினர்.

புனித ஊர்சுலாஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் 'எங்கள் பழைய வண. சகோதரியே வேண்டும்' என்பன போன்ற பல கோரிக்கைகள் அடங்கிய அட்டைகளைத் தூக்கிப் பிடித்தவண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டும் சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்டார்கள்.

இவ்வார்ப்பாட்டத்தின் போது பல மாணவிகள் உணர்ச்சிவயப்பட்டு அழுத காட்சி பார்ப்போர் மனதைக் கரைக்கும் வண்ணம் இருந்தது.

சிலர் ஆர்ப்பாட்டத்தின் போது மயக்கமுற்றனர்;

புனித பீட்ஸ் கல்லூரித் தமிழ் மாணவர்கள், பதுளை இந்துக்கல்லூரி, ஊவாக் கல்லூரி ஆகியவற்றுக்கு மாற்றம் செய்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மற்றக் கல்லூரிகளில் ஆர்ப்பாட்டமும் பகிஷ்கரிப்பும் நடைபெறுகையில் இக்கல்லூரித் தலைமை ஆசிரியரும் மற்றும் சில ஆசிரியர்களும் பாடசாலை நடத்த முற்பட்டுள்ளனர்.

இதை முறியடிக்கவே இந்துக்கல்லூரி மாணவ மாணவிகள் பாடசாலையைப் பகிஷ்கரித்துள்ளனர். (தனித் தமிழ் மாணவ மாணவிகளை கொண்ட ஒரே பாடசாலை இதுவாகும்.)

பல கல்லூரி மாணவ மாணவிகளைத் தங்களுடைய பாடசாலைக்கு மாற்றம்செய்வதை எதிர்த்து, ஊவாக் கல்லூரித் தமிழ் மாணவர்களும் வெளி நடப்புச் செய்துள்ளனர்.

மாணவர்களின் நடமாற்றமின்றி நகரம் சோபை இழந்து காணப்படுகிறது.

எல்லாப் பாடசாலைகளும் மாணவர்களின்றிப் பாதுகாப்புக்காக அனுப்பிய பொலீசாரும்; ஆசிரியர்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இக்கல்லூரிகளில் படித்த சிங்கள மாணவர்கள் கூட பாடசாலையில் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் நாள் இத்திட்டத்தை அமுல் நடத்த, பண்டாரவளை உதவி வித்தியாதிபதி திரு. பி. பி. எம். சேனநாயக்கா, சப் இன்ஸ்பெக்டர் திரு. குணபால, பதுளை எம். பி. திரு. பி. எச். பண்டார ஆகியோர் முற்பட்டனர்.

### எம். பி.க்கு மாணவர்கள் பதிலடி

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்தப் போவதாகவும் தான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டதாகவும், தமிழ் மக்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்த எம். பி. யின் சவாலுக்கு மாணவர்கள் பதிலடி கொடுத்தனர்.

இத்திட்டம் வகுத்துக் கொடுத்ததே குறிப்பிட்ட தலைமையாசிரியராகத் தான் இருக்க வேண்டும் என்ற கருத்து மக்களிடம் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

முதல்நாளுக்குப் பின் இப்போராட்டம் வலுப்பெற்றுள்ளது. இப்போராட்டத்திற்கு ஓர் முடிவுகாணும் வரை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்ற வைராக்கியத்துடன் காணப்படுகின்றனர்.

இந்த அநீதியான புனரமைப்புத் திட்டம் தமிழ் மாணவ, மாணவிகளையே நேரடியாகப் பாதித்துள்ளது. இன்று சுமார் 3000 தமிழ் மாணவ, மாணவிகள் கல்வி வசதிகள் அபகரிக்கப்பட்டதால் வீதியில் நிற்கின்றனர்.

அவர்கள் சிறந்த பாடசாலைகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, வசதிகளற்ற பாடசாலைகளுக்குத் தள்ளப்படுகின்றனர். இந்த அநீதியை எதிர்த்துப் பெற்றோர்களும், தமிழ் மாணவமாணவிகளும் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இப்பாடசாலைப் புனரமைப்புத் திட்டம் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வசதிகளைப் பிடுங்குவதற்காக வகுப்புவாத அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பது பதுளையில் தெளிவாகியுள்ளது.

### தோட்டப் பிள்ளைகளுக்கு இடமில்லை

அத்துடன், பதுளையை அடுத்துள்ள தோட்டங்களிலிருந்து பதுளைப் பாடசாலைகளில் சேர வந்த பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப் பாடசாலை அதிபர்கள் மறுத்துவிட்டனராம்.

தோட்டப் பாடசாலைகளில் ஆரம்பவகுப்புகளுக்கு மேல் படிக்க வசதியில்லை. நகரப் பாடசாலைகளிலும் அவர்களுக்கு இடமளிக்க மறுக்கின்றனர். அவர்கள் எங்கு சென்று படிப்பது?

இன அடிப்படையில் பிள்ளைகளுக்குப் படிக்க வசதிகள் மறுப்பது எந்த நாகரீக நாட்டிலுமில்லாத கொடிய அநீதியல்லவா?

பதுளையில் மட்டுமின்றி மலைநாட்டில் இதர நகரங்களிலும் இதே பாரபட்சமான நடவடிக்கைகள்தான்

(13-ம் பக்கம் பார்க்க)

## மலை நாடு

## வீழ்ந்துழன்ற தொழிலாளர்கள் வாழ்ந்துயர வழியமைத்த வல்லுனர்
# கோதண்டராமன் நடேசைய்யர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**சக்தீ அ. பாலையா**

ஒப்பந்தக் கூலிகளாக வல்லாது நிரந்தர உரிமையுடன் இடங்கொண்ட வீர மரபினராகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்று பட்டுத் தமது பலத்தால் உழைப்புக்கேற்ற ஊதியமும் வாழ்க்கை வசதிகள், சுகாதார வசதிகள், கல்வி வசதிகள், முதலியவைகளைப் பெற சங்கத்தின் மூலம் போராடவேண்டுமென்பதே அவர் கருத்தாகும்.

மலையகத்தின் முதற் தொழிற் சங்கப் பிதாவாக மதிக்கப்படும் நடேசைய்யர், மலையகத் தொடர்புள்ள கலைஞர்களையும், கவிஞர்களையும், அறிஞர்களையும், எழுத்தாளர்களையும் அன்புடனும் கனிவுடனும் கௌரவித்தார். அவர்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டார், அவர்களின் அறிவுரைகளை மகிழ்ந்து வரவேற்றார். அதனால் மக்களின் இதய வேதனையை, உரிமைக் குரலை, சுதந்திரத் தாகத்தை அவர் நன்கு உணர முடிந்தது.

இப் பெரும்பண்பினாலும், பழக்கத்தினாலும் மலையக மக்களை முன்னேற்றும் செயல்களில் துணிந்து ஈடுபட்டார்.

### தேசிய காங்கிரசில் இந்தியப் பிரதிநிதி

திரு. நடேசைய்யர் தென்னிந்தியாவிலுள்ள கும்பகோணத்தில் பிறந்தவர்.

1921ம் ஆண்டு இலங்கைக்கு பிடவை வர்த்தகர்களின் பிரதிநிதியாக வந்தார்.

கொழும்பில் வசித்த நடேசைய்யர் தமிழ் மக்கள் சகல துறைகளிலும் பிற்போக்கான நிலையிலிருப்பதைக் கண்டார். இவர்களுக்காக யாருமே துணிந்து செயல்பட எழாத நிலையிலிருப்பதை எண்ணி நொந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் முதன் முதலாக இலங்கையில் சேர். பொன்னம்பலம் அருணாசலம் தலைமையில் 'இலங்கை தேசிய காங்கிரஸ்' தொடங்கப்பட்டது. அதில் இந்தியர்களின் பிரதிநிதியாக திரு. நடேசைய்யர் கலந்து கொண்டார்.

அதன்பின் மலையகமக்களுக்காகவும், பொதுவாகத் தமிழினத்துக்காகவும், தமிழ்த் தினசரி பத்திரிகைகளை, ஆரம்பித்து நடத்தியவர் திரு. நடேசைய்யரே.

இவரால் நடத்தப்பட்ட "தினத் தபால்" "தேசபக்தன்" ஆகிய பத்திரிகைகள் முதன் முதலாக இலங்கையில் தமிழர்களின் உரிமைகளை வற்புறுத்தியதுடன் தமிழ் மக்களையும் எழுத்துலகில் ஈடுபட வைத்தன.

### மலையக அறிஞர்கள்— 2

இக்காலத்தில் நடேசைய்யர், மலையகத்தில் பல பாகங்களுக்கும் சென்று தோட்டத் தொழிலாளரின் நிலைமையை ஆராய்ந்தார்.

சிறு சிறு துண்டுப் பிரசுரங்கள் மூலமாகத் தொழிலாளர்கள் தமது சமூக வாழ்க்கையிலும் எப்படி முன்னேற வேண்டும் எப்படிப் பழக வேண்டும் என்ற ஒழுங்குகளைப் பாடல்களாலும் எழுத்து வன்மையாலும் பரப்பினார்.

நடைபாதையில் நடப்பது எப்படி என்பதிலிருந்து புகைவண்டிகளில் பிரயாணஞ் செய்வது வரையில். அவரது துண்டுப் பிரசுரங்கள் போதித்தன. மலையக சமூக சேவையாளரான திரு. வ. ஞானபண்டிதனுடன் நெருங்கிய தொடர்புடையராகவும் இணைந்து சமூக சேவைகளில் ஈடுபட்டார்.

திரு. நடேசைய்யர் தலைசிறந்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமாவார். "நீ மயங்குவதேன்," "தோட்டத் தொழிலாளி," "வெற்றி உனதே" என்ற நூல்களைத் தோட்டத் தொழிலாளர்களின் எழுச்சிக்காகவும், கண் விழிப்பிற்காகவும், உரிமைகளுக்காகவும் முதன்

(13-ம் பக்கம் பார்க்க)



தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வசதிகளை அபகரித்த பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தை எதிர்த்து பதுளை புனித ஊர்ஸ்லாஸ் மாணவிகள் ஆர்ப்பாட்டம் [illegible] (இடது)
புனரமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களும், பெற்றோரின் ஒரு பகுதியினரும். (வலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் மட்டும் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்

## பெடரல் கட்சி எதிர்ப்பில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது

## தமிழ் நாட்டு கொம்யூனிஸ்டு இதழின் தரம் கெட்ட தலையங்கம்

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் சகல பத்திரிகைகளும் இலங்கை அரசு தமிழ் பேசும் மக்கள் மீது சர்வாதிகார ரீதியில் சிங்களத்தைத் திணிப்பதை வன்மையாகக் கண்டித்து எச்சரிக்கையும் செய்துள்ளன. ஆனால், இந்திய கொம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் தினப் பத்திரிகையான 'ஜனசக்தி' (சென்னை) 'இலங்கை அரசின் புத்தாண்டுப் பரிசு' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில், ஆட்சியாளருக்குத் துதிபாடியதுடன், தமிழ் பேசும் மக்களின் விடுதலை முயற்சியையும் வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும் தமிழ் பேசும் மக்கள் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று போராட்டம் நடாத்துவதாக எண்ணி, பிரச்சினையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அந்த ஏடு அபிப்பிராயம் தெரிவிக்க முற்பட்டது நகைப்பிற்கிடமானதாகும்.

'இலங்கை அரசின் புத்தாண்டுப் பரிசு' என்ற தலைப்பின் கீழ் இந்திய கொம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் நாட்டு தினசரிப் பத்திரிகையான ஜனசக்தி (3—1—64) எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தின் விபரம் வருமாறு:

சிங்களமொழி இலங்கையின் ஆட்சி மொழியாவது குறித்து இலங்கை மக்கள் அனைவருமே அளவிலா மகிழ்ச்சியடைவார்கள். கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாக அன்னிய மொழியாகிய ஆங்கிலமே இலங்கையின் ஆட்சி மொழியாக இருந்து வந்துள்ளது. புத்தாண்டு அந்நிலைக்கு முடிவு கட்டி தாய் மொழியாம் சிங்களம் அரியணை ஏறுவதைக் கண்டது.

இலங்கையின் மக்கட் தொகையான சுமார் ஒரு கோடி பேர்களில் 80 லட்சம் பேர் சிங்கள மொழி பேசுபவர்கள். மீதி 20 லட்சம் பேர் தமிழ்மொழி பேசுபவர்கள். சிங்களம் ஆட்சி மொழியானாலும் எல்லா சமூகத்தினரும் அவரவர் மொழியிலேயே சர்க்காருக்குக் கடிதங்கள் எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது சகல சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளும் என்றும் பாதுகாக்கப்படும் என்று இலங்கைப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார். சிங்களம் ஆட்சி மொழியாகும் அதே சமயத்தில் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு உத்தரவாதம் வேண்டும் என்று கோருவது சரியாகும். ஆனால் அதற்கு மாறாக, பெரும்பான்மை மக்களின் விருப்பங்களைப் புறக்கணித்து அவமதிக்கும் முறையில், சிங்களம் ஆட்சி மொழியாவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதோ, ஆங்கிலமே நீடிக்க வேண்டுமென்று கோருவதோ விவேகமாகாது. சிங்களம் ஆட்சிமொழியாவதை இலங்கையிலுள்ள பெடரல் கட்சி எதிர்ப்பதும், சட்ட எரிப்புகளில் ஈடுபடுவதும் மிகவும் கண்டிக்கத்தக்கது.

### வரலாறு

இந்திய கொம்யூனிஸ்டுக் கட்சியின் கடந்தகால வரலாறு நம்மவர்க்குத் தெரியாததல்ல இந்திய சுதந்திரப் போராட்ட காலங்களில் ஆங்கில [illegible] யத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்து சுதந்திரப் போராட்டத்தை முறியடிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்கள். அண்மைக் காலத்தில் சீனா இந்தியா மீது ஆக்கிரமிப்பு நடத்திய பொழுது தேசத்துரோகிகளாக மாறி நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தைச் செவ்வனே செய்து வந்தார்கள். அவர்களின் ஐந்தாம் படை வேலையை அறிந்த பாரத அரசு பலரைத் தடுப்புக் காவலில் வைத்தது. இன்னும் சிலர் தடுப்புக் காவலில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### புதிய பாணி

சீன ஆக்கிரமிப்பின் வேகம் குறைந்ததும் கொம்யூனிஸ்டுக்கள் காங்கிரசுடன் இரண்டறக் கலக்கும் முயற்சியில் முனைந்து வருகிறார்கள். கடந்த ஆண்டு நடைபெற்ற சகல இடைத் தேர்தல்களிலும் அழையா விருந்தினராகச் சென்று காங்கிரஸ் மேடைகளில் தோன்றியுள்ளார்கள். இப்பொழுது தமிழ் நாட்டில் நடைபெறும் நகர சபைத் தேர்தல்களில் காங்கிரசுடன் வலியச் சென்று தேர்தல் ஒப்பந்தம் என்ற பெயரில் காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளில் மட்டும் போட்டியிடுகிறார்கள். இவையனைத்தும் சீன ஆக்கிரமிப்பின்போது நடந்து கொண்ட முறைக்கு பிராயச்சித்தமா? அல்லது காங்கிரசுடன் இரண்டறக் கலந்து, காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி, பாரதத்தை சீனாவிற்கு தாரை வார்த்துக் கொடுக்கலாமா என்ற அரசியல் தீர்க்கதரிசனமற்ற நப்பாசையா? என்று பாரத மக்கள் இவர்களைப் பார்த்து எள்ளிநகையாடுகிறார்கள்.

### தேசத் துரோகிகள்

இத்தனைக்கும் மேலாக தென்னாட்டு மக்கள் வடவர் ஆதிக்கத்தை, இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்த்துச் செயல்படுகையில் தமிழ் நாட்டு கொம்யூனிஸ்டுகள் இந்தித் திணிப்புக்கு ஆலவட்டம் வீசி வரவேற்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா தலைமையில் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்.

இத்தகைய தேசத் துரோகிகள், இன விரோதிகள் ஆகிய தமிழ் நாட்டு கொம்யூனிஸ்டுகள் இலங்கைத் தமிழர் போராட்டத்தைக் கண்டிக்க முன்வந்திருக்கிறார்கள்.

[illegible] உடல். 500 அங்கத்தவர்களைக் கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் 28 கொம்யூனிஸ்டு உறுப்பினர்களே உள்ளனர். 205 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்நாட்டுச் சட்டசபையில் 2 கொம்யூனிஸ்டுகளே உள்ளனர். இத்தனை தூரம் பாரத மக்களால் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டவர்கள் இவர்கள்.

### நமது நாட்டவர்

இந்திய கொம்யூனிஸ்டுகள் நிலை இதுவென்றால், நமது நாட்டில் உள்ளவர்கள் நிலை மேலும் விசானிக்கத்தக்கதாக உள்ளது. தமிழ் நாட்டுத் தோழர்களுக்கு சிறிதும் சளைத்தவர்கள் அல்ல இவர்கள். குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள விரல்விட்டு எண்ணக் கூடிய அளவு கொம்யூனிஸ்டு தோழர்கள், தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்திலும், ஏளனம் செய்யும் இழிதொழிலும் முனைந்திருக்கிறார்கள்.

### வகுப்புவாதிகள்

தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்டத்தைப் பற்றி அண்மையில் ஒரு தமிழ் கொம்யூனிஸ்டுப் பிரமுகர் கருத்துத் தெரிவிக்கையில் 'தமிழரசார் மீண்டும் மனித சங்காரத்திற்குத் தயாராகுகிறார்கள்' என்று கூறியுள்ளாராம். ஆனால் ஆட்சியாளரின் வகுப்புவாதச் செயல் முறை பற்றி சிறிது கண்டனமாவது தெரிவிக்கிறார்களா என்றால் இல்லை. அதை அவர்களிடம் எதிர்பார்ப்பதும் தவறு. இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சியின் மொழிக் கொள்கைக்கும் சிறுபான்மையோர் சம்பந்தப்பட்ட ஏனைய கொள்கைக்கும், ஆட்சியாளரின் கொள்கைக்கும் எத்தகைய வேறுபாடும் கிடையாது. எனவே அவர்கள் எங்ஙனம் ஆட்சியாளரின் போக்கைக் கண்டிக்க முடியும். இவர்களும் ஒரு காலத்தில் ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சியுடன் இரண்டறக் கலந்து செயல்பட்டவர்கள் அல்லவா?

இத்தகைய இனவுணர்வு சிறிதும் இல்லாத பாதம் தாங்கும் கொம்யூனிஸ்டுகளுக்கு உலக அரங்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் உரிய முறையில் பாடம் புகட்டத் தவறமாட்டார்கள்.

### மருத்துவ மேதை மறைந்தார்

யாழ்ப்பாணத்தின் முதுபெரும் குரவரும் மருத்துவ மேதையும் அறநிலையங்களுக்கு அள்ளிக் கொடுத்த வள்ளலுமான மருத்துவ கலாநிதி பி. சுப்பிரமணியம் (பி. எஸ்.) 12-1-64 அன்று காலமானார். 91 வயதான இவர் 60 வருடகாலம் வைத்திய சேவை புரிந்துள்ளார். அறிவுக் கூடங்களுக்கும் அறநிலையங்களுக்கும் வாரி வளங்கிய வள்ளலான இவர், இறப்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னரும் தனது கடமையில் தவறாது நாடிவந்த நோயாளர்களுக்கு சிகிச்சையளித்துள்ளார். அரசாங்க சேவையில் இருந்த காலத்தில் நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றி பரவலாக நாட்டு மக்களின் அன்புக்குப் பாத்திரமாகியுள்ளார். எத்தகைய வேறுபாடுமின்றி சகலரையும் சமனாக மதித்து சேவை செய்து, மருத்துவ சேவைக்கு இலக்கணமாக விளங்கினார். மருத்துவ மேதையாகப் பணிபுரிந்த போதும் தமிழ் இலக்கியத்திலும் நிறைந்த புலமை பெற்று விளங்கினார். தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள இன்னலைத் துடைக்க அவரின் குடும்பம் முன்னின்று உழைத்தது. கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் இவர்களில் மூத்தவர். இன்று உடுவில் பிரதிநிதியாக விளங்கும் திரு. வி. தர்மலிங்கம் இவரின் வளர்ப்பு மகனாவர். தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை இவரின் மிக நெருங்கிய உறவினராவர். மேலும் அமைதியான முறையில் இத்துறையில் தொண்டாற்றுபவர் பலர் உளர். இன விடுதலைப் போராட்டங்களுக்கு அள்ளி அள்ளி வழங்கியவர் அமரர் சுப்பிரமணியம் அவர்கள். யாழ்ப்பாணத்தில் விடுதலைப் போர் சம்மந்தமான வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கூட்டங்களில் பல இவரின் தலைமையில் நடைபெற்றுள்ளது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி உள்ளவரை — திருநெல்வேலி சைவப்பிரகாச வித்தியாசாலை உள்ளவரை — தங்கம்மா மருத்துவமனை உள்ளவரை — சுப்பிரமணியம் பூங்கா உள்ளவரை — அவர் வாரி வழங்கிய இதர அறநிலையங்களும் கல்விச்சாலைகளும் உள்ளவரை அவர் நாமம் வாழும். அவரின் மரணம் மருத்துவ உலகிற்கும் தமிழ் பேசும் இனத்தின் எதிர்கால விடுதலைப் போருக்கும் ஓர் பேரிழப்பாகும்.

[இவரின் தொண்டினையும் பணியினையும் விளக்கி விரிவான கட்டுரை அடுத்த இதழில் வெளியாகும்]

### பூங்குன்றன்

### திருமலை நகர சபை

#### தலைவராக டாக்டர் சிவானந்தம் தெரிவு

திருமலை நகராண்மைக் கழகத்தின் தலைவராக டாக்டர் எஸ். சிவானந்தம் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழரசுக் கட்சி ஆதரவாளரான டாக்டர் சிவானந்தத்துக்கு 4 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. பா. நேமிநாதனுக்கு 2 வாக்குகளும் கிடைத்தன.

இது புதிது!
இது முதல்தரமான!
ஹன்சயா
கல்வனைஸ்ட் தகர வாளிகள்

★இலங்கையில் செய்யப்பட்டது
★பாவனைக்குச் சிறந்தது
★சிக்கனமானது

'அன்னம்' அடையாள கல்வனைஸ்ட் வாளிகளையே கேளுங்கள்.

சென்ற் அந்தனீஸ் இண்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத மொழியில் பிரயாணச் சீட்டு

## தமிழுக்கு வந்துற்ற....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள். அதற்குப்பின் அவர்களது சுதந்திரத் தாகத்தை, உரிமை வேட்கையை அடக்கி ஒடுக்கிவிட முடியாது. அதைத் தெளிவாகச் சொல்லுகிறார் கவிஞர்.

..............................

நாட்டை அழிப்பது கூடும்-அலை
கடலையும் தூர்ப்பது கூடும்
மேட்டை அகழ்வதும் கூடும்-விரி
ஏட்டையும் நூலையும் தடுப்பது
கூடும்-உரிமை
எண்ணத்தை மாற்றுதல்
எப்படிக் கூடும்?

..............................

..............................

அடக்குமுறை செய்திடல்
முடியும்-கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு
முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல்
முடியும்-உணர்
வொடுக்குதல் எவ்வாறு
முடியும்?

அடக்குமுறை கட்டவிழ்க்கப்படும், ஒடுக்கு சிறைக்குள் தலைவர்களைத் தள்ளிப் பூட்டி வாட்டிய பின்னும் தமிழினத்தின் சுதந்திரவுணர்வையும், உரிமை உணர்வையும் தடுக்க முடியாது போய் விட்டதற்கு மீண்டும் இன்று ஒலிக்கும் அறப்போர் முரசம் சான்றல்லவா?

### வீரத் தமிழன்

'பெரிது மானம், உயிர் பெரிதில்லை. பெற்ற தாயைப் பிறராள விடுவோன் தமிழன் அல்லன், தமிழன் அல்லன்' என்பது கவிஞரின் தீர்ப்பு. 'திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த ஒரு மானத் தமிழனை, வெங் கொடுமைச் சாக்காடில் விளையாடும் தோள் கலையுடைய வீரத் தமிழனை' கவிஞரின் கண்கள் தேடியலைகின்றன. தென்றிசையைப் பார்க்கின்றார், சிந்தையெல்லாம் தோள்களெலாம் பூரிக்கின்றன. கங்கையைப் போல் காவிரிபோல் கவிதையொன்று மடை திறந்து பாய்கிறது.

'அன்றந்த லங்கையினை ஆண்ட
மறத் தமிழன்
ஐயிரண்டு திசை முகத்தும்
தன்புகழை வைத்தோன்!
குன்றெடுக்கும் பெருந்தோளான்
கொடை கொடுக்கும்
கையான்!
குள்ளநரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம்!
என் தமிழர் மூதாதை! என்
தமிழர் பெருமான்
இராவணன் காண்! ...............
வெஞ்சமரில் சாதல்வர
நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையை,
தமிழ் மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை
வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன்; மறந்தவரைச்
சழக்கரெனச் சொல்வேன்!
வீழ்ச்சியுறு தமிழகத்தில்
எழுச்சி வேண்டும்!
விசை ஒடிந்த தேகத்தில்
வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப்
பொறாமை தன்னைத்
தொகையாக எதிர் நிறுத்தித்
தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை, மறச் செயல்கள்
மிகவும் வேண்டும்!
கடல் போலச் செந்தமிழைப்
பெருக்க வேண்டும்!

..............................

மறத் தமிழன் இராவணன் அன்று ஆண்ட இலங்கையில் தமிழினம் தாழ்த்தப்படுவதைப் பார்த்து விட்டு

[illegible]ங்களஞ் சேர் தென்னாட்டு
மக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல்
விளைத்தால்
சங்காரம் நிஜமெனச் சங்கே
முழங்கு!

என்று சங்கநாதம் ஒலிக்கிறார்.

### கவிஞரின் கனவு

வருங்காலத்தை கவிஞர்கள் கற்பனையில் கண்டு மகிழ்வதுண்டு. நமது கவிஞரும் இதற்கு விதிவிலக்கல்ல.

'என்னருந் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னறுங் கலைஞானத்தில்
பராக்கிரமத்தில், அன்பால்
உன்னத இமமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல்
எந்நாளோ?'

என்றும்

'தறுக்கினாற் பிற தேசத்தார்
தமிழன்பால் — என் —
நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றஞ் செய்தா
ராதலால் விரைந்தன்னாரை
நொறுக்கினார் முதுகெலும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்த சொல் கேட்டின் பத்திற்
குதிக்கும் நாள் எந்நாளோ?'

என்றும்கற்பனைப்புரவியைத் தட்டிவிட்டு ஆசைக் கனவுகள் காண்கிறார் கவிஞர்.

கவிஞரின் இக் கனவுகள் ஒரு நாள் பலித்தேவிட்டன. அப்போது—

'தமிழ் நாடெங்கும் தடபுடல்!
அமளி!!
பணமே எங்கணும் பறக்குது!
............

..............................

சமுத்திரம்போல அமைத்த
மைதானம்!
அங்கே கூடினர் அத்தனை
பேரும்!
குவித்தனர் அங்கொரு கோடி
ரூபாய்!
வீரத்தமிழன் வெறிகொண்
டெழுந்தான்!
உரக்கக் கேட்டான்; 'உயிரோ
நம் தமிழ்?'
அகிலம் கிழிய ஆம்! ஆம்!
என்றனர்!!
ஒற்றுமை என்றான்; 'நற்றேன்'
என்றனர்.
காதல் ததும்பும்
கண்ணாளென்றனைக்
கோதை ஒருத்தி கொச்சைத்
தமிழால்
புகழ்ந்தாளென்று, பொறாமல்
சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென
விழித்தேன்
அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு
நானிருந்தேனே!'

### புதிய தமிழகம்

நாம் தமிழர், நமது நாடு இது, நமது கொடி இமய வெற்பின் முடியில் பட்டொளி வீசிப் பறந்த காலம் ஒன்றிருந்தது. அந்த நாள், மீண்டும் வரும். எங்கள் திருநாட்டில் எங்கள் ஆட்சி பூத்திடும், பொலிந்திடும், ஏனென்றால் 'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க, நந் தமிழர் உள்ளத்தில், வையம் நடு நடுங்கும், வெந்தணல் ஒன்று விரைந்து வளர்வதை' காண்கிறார் கவிஞர்.

நேற்று வரை அடிமைகளாய், அநாதைகளாய், ஆமைகளாய், ஊமைகளாய், உலகில் வாழ்ந்த மக்கள், இன்று நாடாளும் பொழுது, கொற்றமும்-கொடியும், குடையும் கோலும் கொண்டு நாடாண்ட தமிழினம்; நாடு என்றால் என்ன? மன்னன் என்றால் யார்? அமைச்சு எப்படி அமைய வேண்டுமென்று இலக்கணம் கூறிய தமிழினம், உலகச் சந்தைகளுக்கெல்லாம் பட்டும்-பருத்தியும், அகிலும்-தேக்கும், கோவா மலை ஆரமும்-கோத்த கடல் ஆரமும் கொண்டு குவித்த தமிழினம் மட்டும் நெடுநாள் அடிமைத் தனத்தில் வாழவா போகிறது? இல்லையென்று அடித்துச் சொல்கிறார் நமது கவிஞர்.

'தமிழனுக்கு வீழ்ச்சியில்லை,
தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு,
தமிழ் மக்கள்,
தமிழ் என்னும் பேருணர்ச்சி
இந்நாள் போலே
தமிழ் நாட்டில் எந்நாளும்
இருந்ததில்லை!

..............................

பிறந்துள்ளார் தமிழறிஞர்
ஆதல் வேண்டும்
வருந் தமிழர் வையத்தை
ஆளவேண்டும்'

### களம் விரைவீர்

சொல்லுவது எளிது. செயலில் செய்ய வேண்டாமா? தமிழ் நாட்டு கன்னியரே காளையரே! தமிழன் உயர்வுக்கு தலைகொடுக்கப் பொன்னான சந்தர்ப்பம் உங்களுக்குக் காத்திருக்கிறது. இதோ மீண்டும் கவிஞரின் உருக்கமான அழைப்பைக் கேட்டுக் கொண்டே அறப்போர் களம் விரைவீர்!

'பூட்டிய இரும்புக் கூட்டின்
கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே
வெளியில்வா!
எலி என உன்னை இகழ்ந்தவர்
நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப்
புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள்
என்றே
சிம்புட் பறவையே சிறகைவிரி,
எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்!
திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை
ஆட்சியா?
..............................
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம்
பற்றி
நமக்குள உரிமை தமக்கென்
பாரெனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம்
எங்கே?
மொழிப்பற் றெங்கே?
விழிப்புற்றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால்
இறப்போம் என்றும்
புகழ்ச்சி யேஎம் பூணும் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ்
மரபே
கைதிருப்பைக் காட்ட
எழுந்திரு!
[illegible]
நல்கிட எழுந்திரு!

## வழங்குவது அநீதியாகும்

## நிதிமந்திரிக்கு எ. வி. சங்க செயலாளர் வேண்டுகோள்

'தமிழ் அரசாங்க ஊழியர்க்கு லீவு (ரயில்வே) இலவசச் சீட்டுகள், அவர்களுக்குப் புரியாத மொழியான சிங்களத்தில் கொடுக்கப்பட்டு வருகின்றன. இது பெரும் அநீதியாகும். இவர்களிற் பெரும்பாலோர், ஆங்கிலம் மூலமே சேவைக்கு ஏற்கப்பட்டனர். ஆகவே, இவர்களுக்கு அளிக்கப்படும் லீவு (ரயில்வே) இலவசச் சீட்டுகள் ஆங்கில மொழியில் கொடுக்கப்படுவதே முறையானதும், மனிதாபிமானதுமாகும்.'

இவ்வாறு, நிதி மந்திரிக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'லீவு (ரயில்வே) இலவசச் சீட்டுக்கள் எழுதப்பட்டுள்ள மொழியும், சிங்களத்தில் தகுதி காணு ஊழியர்களின் சேவை காலமும் இரண்டு வெவ்வேறான பிரச்சினைகள் என்பதை நீங்கள் உணருவீர்களென நாம் நம்புகிறோம். சேவை காலத்தில் இருக்கும் வரைக்கும், சிங்களத்தில் தேர்ச்சியடையாத ஊழியர்களுக்கு, அவர்களுக்கு உரிய உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்படவே வேண்டும்.

தமக்குப் புரியாத மொழியில் கிடைக்கப் பெறும் இச் சீட்டுக்களில், இதன் காரணமாக, சிங்களத்தில் தகுதி காணு ஊழியர் பல தவறுகளைத் தெரியாமல் விட்டு விடக் கூடும். புறப்படும் அல்லது அடையும் இடம், பிள்ளைகளின் பால் (ஆண், பெண்), இத்தகைய குறிப்புக்களைத் தவறாக அவர்கள் எழுதிவிட இடமுண்டு. இத் தவறுகள் காரணமாக, இவர்கள் சட்டத்துக்கு முரண்பட்டு நடக்கக்கூடும். கடைசியில், இவர்கள் பிரயாணமே தடைப்பட்டு விடும். ஒரு ஊழியருக்கு, அவருக்குப் புரியாத மொழியில் இச் சீட்டுக்களை அளிப்பதால் உண்டாகும் தொல்லைகள் இவை.

கொலைத் தண்டனையை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளிகளுக்கும், தமது மதச் சடங்குகளைத் தமது சொந்த மதச் சார்பாகவே செய்து கொள்ள உரிமை உண்டு. இதே ரீதியில் அரசாங்க ஊழியர் விஷயமாகவும், விவாதத்துக்காக, நாம் குறிப்பிடவேண்டியுள்ளது. எங்கள் சங்க அங்கத்துவர்களைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட சில காரணங்களுக்காக, அவர்களால் தமது சேவையில் ஏற்பட்டுள்ள மாற்று விதிகளுக்கு இணைய சேவையாற்ற முடியாதிருக்கின்றது. இதை யிட்டு அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய — மேற்கொண்டிருக்கும்— நடவடிக்கை பிறிதொரு பிரச்சினை. ஆனால், இவ்வூழியர் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை, அவர்கள் தமது லீவு (ரயில்வே) இலவசச் சீட்டுக்களுக்கு விண்ணப்பித்து, பெற்றுக் கொள்ள உரிமையுள்ளவராவர்.

ஆகவே, சிங்களத்தில் தகுதிகாணு ஊழியர்களுக்கு ஆங்கிலத்திலேயே லீவு (ரயில்வே) இலவசச் சீட்டுக்களைக் கொடுக்க வேண்டுமென எல்லா இலாகா அதிபர்களுக்கும் நீங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். இதனால், இவ்வூழியர்க்கு மனிதர் என்ற முறையில் சாதாரண மரியாதையை அளிப்பதுடன், அரசாங்க ஊழியர் என்ற முறையில் அவர்கள் தாம் அனுபவிக்க வேண்டிய உரிமைகளையும் இடையூறின்றி அனுபவிக்க அனுமதித்ததுமாகும்.'

## சந்தியில்....

கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த ஒருமுஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் வட இலங்கைக்குச் சென்றிருந்தாராம். அங்குள்ள ஒருபிரபல சோதிடரிடம் தனது சாதக பலாபலன்களையிட்டுஆராய்ச்சி நடத்தினாராம். சோதிடர் தமது கருத்தை வெளியிடும் போது, 1964 மத்தியில் சாதகரின் அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிடும் என்று கூறினாராம். இதனால்தானோ என்னவோ, அப்பிரமுகர் பத்திரிகைகளில் தானும் ஒரு 'தேசபக்தன், இன உணர்ச்சி கொண்டவன், மொழிப் பற்றுடையவன்' என்றெல்லாம் கருத்து வெளியிட்டு வருகிறார்.

***

வேறு ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினருக்கு 'இந்தப் பழம் புளிக்கும்' என்ற எண்ணம் — அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் ஏற்பட்டு விட்டது. அரசாங்கத்துக்கு வால் பிடித்தேனும் பல 'சாதனைகள்' செய்துவிடலாம் என்று மனக்கோட்டை கட்டி வந்தார். தான் செய்த துரோகச் செயல்கள் யாவும் தம்மையே குழி தோண்டிப் புதைத்து விடும் என்ற பயம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

அவர் இதுவரை தம்மினத்துக்காகச் செய்த தொண்டுகளிலெல்லாம் தலையாய தொண்டு என்ன தெரியுமா? தமது பிரதேசத்தில் நெல் ஆலைகள் வைத்திருக்கும் தம்மினத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், நெல்லுக்குத்தும் கோட்டா கலாவதியாகாமல் பார்த்துக் கொண்டதுதான். பல நெல் ஆலை அதிபர்கள் ஊழல்கள் காரணமாகப் பிடிபட்டும் கூட இவருடைய கருணையினாலும் பெருந்தன்மையினாலும் கடாட்சம் பெற்றுள்ளனராம்.

***

வட பகுதியிலுள்ள கல்வி அதிகாரி ஒருவர் அரசாங்கத்துக்கு அடிவருடி, ஆரிய சிங்கள உடையில் காட்சியளித்து, சிங்கள பௌத்த தாசனாகவெல்லாம் மாறி, பல 'இருட்டு' வேலைகளில் ஈடுபட்டிருந்தார். எவ்வளவோ இனத் துரோக வேலைகள் புரிந்தும் இவருடைய பதவி காலம் நீடிக்கப் படாது போகவே, தானும் 'தமிழன் தான்—தமிழ் அபிமானி தான்' என்று கூறி, எல்லாவற்றுக்கும் மேலாகத் தான் ஒரு தமிழரசு வாதியும் கூட என்று கூற ஆரம்பித்து விட்டாராம். 'நான் தமிழரசு வாதி என்ற படியினால் தான், தமிழரசு எம். பி. கள் கேட்ட உதவியெல்லாம் செய்து கொடுத்தனான்' என்றும் கூறித் திரிகிறாராம். பாவம்.

—அம்மான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மற்றொரு சைப்பிரசாக மாற நேரிடலாம்

# தனித் தமிழ் நாடு கோரிக்கை வலுப்பெறும்

## சிங்கள அமுல் பற்றி தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் எச்சரிக்கை

சிங்களத்தோடு தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்க ஆளவந்தார் தவறினால் நாடு மற்றொரு சைப்பிரசாக மாற நேரிடலாம் எனறு தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் "தமிழ் நாடு" தினச் செய்தி இதழ் தனது ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. அதே போன்று தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் ஏனைய பத்திரிகைகளும் இலங்கை அரசினர் தமிழ் பேசும் மக்களுக்கு தினே தினே இழைத்துவரும் இன்னல்களை எடுத்துக்கூறி, ஆட்சியாளரை எச்சரிக்கை செய்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறோம்.

"பொருந்தாத வாதங்கள் பேசி, தமிழுக்கு உரிமை மறுத்து, அம்மொழி வழங்குவோரை இரண்டாந்தரக் குடிகளாக்க முயலாமல், சிங்களத்தோடுதமிழுக்கும்சமச் சிறப்பு அளிக்க இலங்கை அரசினர் முற்படுதலே அறமாகும். அதை அவர்கள் உணராவிட்டால், எதிர்காலத்தில் இலங்கை மற்றொரு சைப்பிரசாக மாற நேரிடலாம்."

இவ்வாறு, 3-1-64 'தமிழ் நாடு' (சென்னை) இதழ், ஈழத் தமிழரின் துக்க நாள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில் எச்சரிக்கை செய்திருக்கிறது. அத் தலையங்கத்தின் முழு விபரம் வருமாறு:

புத்தாண்டு முதல் நாளிலிருந்து இலங்கை முழுவதற்கும் சிங்களம் தனி ஆட்சி மொழியாக்கப் பெற்றுள்ளது.

இந்த அடாத செயல் நடைமுறைக்கு வந்த தினத்தை இலங்கைத் தமிழர்கள் துக்க நாளாகப் புறக்கணித்து இருக்கின்றனர்.

அத்துடன், சிங்களத்தை மட்டும் இலங்கையின் தனி ஆட்சி மொழி என்று அறிவிக்கும் சட்டத்தை அவர்கள் அரசு அலுவலகங்கள் முன்னிலையில் எரித்து இருக்கின்றனர்.

ஈழத் தமிழர்கள் மேற்கொண்ட இந்நடவடிக்கைகள், சிங்கள ஆட்சியாளருக்கு எரிச்சல் ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

என்றாலும், இலங்கைத் தமிழ்க் குடிகளின் உணர்ச்சியை உள்ளவாறு அறிந்து கொள்ளக்கூடிய நெறி நிலையாளர்கள், அவர்களைச் சிறிதும் குறைகூற முற்படமாட்டார்கள்.

தமிழகத்தை அடுத்துள்ள இலங்கைத் தீவின் மொத்த மக்கள் தொகை 96 இலட்சம் ஆகும்; இதில் தமிழர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்திற்கும் கூடுதலாக விளங்குகிறது; அதாவது, இலங்கையின் மொத்த மக்களில் 27 சதவிகிதத்தினர் தமிழர் ஆவர்.

மேலும், தமிழர்கள் இலங்கை முழுதும் சிதறுண்டு இராமல் அத்தீவின் வடக்கு, வட கிழக்கு மாநிலங்களில் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். அதனினும் சிறப்பாக, அவர்கள் தாய் மொழியான தமிழ், உலக மொழிகளிலேயே ஒப்புயர்வற்ற இனிய மொழியாகத் திகழ்கிறது.

இந்நிலையில், சிங்களத்தோடு தமிழையும் இலங்கையின் ஆட்சி மொழியாக ஏற்பதே தேசிய செயலாகும். அல்லது குறைந்த அளவு, தமிழர் பெரும்பான்மை வாழும் மாநிலங்களிலேனும் அவர்களுடைய தாய் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும்.

ஆனல், இவ்விரு முறைகளையும் விடுத்து, இலங்கை முழுவதற்கும் சிங்களத்தை மட்டும் திருமதி பண்டாரநாயக்காவின் அரசு ஆட்சி மொழியாக்கி இருக்கிறது. இதற்கு அந்த அம்மையார் கூறும் காரணம் எல்லாம், இலங்கையில், சிங்களம் பேசுவோர் அதிகமாக இருக்கின்றனர் என்பதும், அம்மொழியை அத்தீவின் தனி ஆட்சி மொழியாக்க அவருடைய கணவர் ஏற்கனவே வாக்குறுதி அளித்துவிட்டார் என்பதுமே ஆகும்.

ஆனல், தமிழர்களுடைய மொழி உரிமையும், அதன் அடிப்படையில் வளர்ந்த அரிய கலை நாகரிகமும், சிங்களவரின் வெறும் பெரும்பான்மைக்கும், காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்காவின் விருப்பத்திற்கும் அடிமைப்பட்டன அல்ல.

மக்களாட்சி முறையில், சிறுபான்மையோர் தமது மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றிற்குச் சம உரிமை கோர, எத்தகைய தடையும் கிடையாது.

இதற்குக் குடியரசு நெறி செல்லும் சுவிட்சர்லாந்தும், கனடாவும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. 74 சத விகித மக்கள் ஜெர்மன் மொழி பேசுபவராக இருந்த போதிலும், இருபது சத விகிதத்தவர் வழங்கும் பிரெஞ்சையும், ஐந்து சத விகிதத்தவரின் தாய் மொழியான இத்தாலியத்தையும் கூட ஆட்சி மொழிகளாக விரும்பி ஏற்றுள்ளனர்.

அவ்வாறே கனடாவில், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட பெரும்பான்மையோர் வழங்கும் பிரெஞ்சையும் ஆட்சி மொழியாக்கி ஒற்றுமை சிறக்க வாழ்கின்றனர்.

### ஆனந்தவிகடன்

தமிழரின் உரிமை என்ற தலைப்பில் 12-2-64 ஆனந்தவிகடன் (சென்னை) இதழ் எழுதியுள்ள உபதலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் சென்ற 165 வருட காலமாக ஆட்சி மொழியாக இருந்து வந்த ஆங்கிலம் விரட்டப் பட்டு, இவ்வாண்டு துவக்கத்திலிருந்து சிங்களம் ஆட்சி மொழியாக்கப் பட்டிருக்கிறது.

ஈழத்தின் ஒரு கோடி ஜனத்தொகையில் 70 சத விகிதத்தினர் சிங்களவர்கள் தான். எனவே சிங்களம் அங்கு ஆட்சி மொழியாக வேண்டியது நியாயமே. ஆனல் ஈழத்தின் பழங்குடி மக்களான 30 லட்சம் தமிழர்களைக் கட்டாயப் படுத்துவது முறையாகாது. அதிலும் அவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் போன்ற வட கிழக்குப் பகுதிகளில் ஒதுங்கி வாழ்வதால் அதற்கு அவசியமுமில்லை. தமிழையே தாய் மொழியாகக் கொண்ட இவர்கள் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்த காரணத்தால் சிங்களத்தை அதிகமாகப் பயின்றிருக்க முடியாது. எனவே இலங்கையெங்கும் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கிய போதிலும் தமிழ் பகுதிகளில் நிர்வாகத்தைத் தமிழில் நடத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. சட்ட ரீதியாகத் தமிழுக்கு இரண்டாவது ஸ்தானம் கொடுத்து விட்டால் மட்டும் போதாது. நிர்வாக இயந்திரம் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கும் ஆர்வத்தில் தமிழர்களுக்கு தொல்லை அளிக்காமல் இருக்க வேண்டும்.

சில ஆண்டுகள் முன்பு சிங்கள வெறியர்கள் தூண்டுதலால் அங்கு மொழிப் பிரச்சினை இரத்தக் களரியாக மாறியதை யாரும் மறந்திருக்க முடியாது. மீண்டும் வெறுப்புணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் நிர்வாக சௌகர்யத்துக்காக மட்டும் ஆட்சிமொழிச் சட்டம் தீவிரமாக அமுல் நடத்தப் படமாட்டாது என்ற நம்பிக்கையில் பெடரல் கட்சி போராட்ட யோசனையைக் கைவிட்டதையும் வரவேற்கிறோம்.

### தினமணி

"சிங்களம் அரசாங்க மொழியாவதற்கான முழுத் தகுதியை இன்னும் அடைந்தாகவில்லை. அதில் போதிய அனுபவமில்லாத 2,500 அதிகாரிகள் பதவிகளிலிருந்து விலகுகிறார்கள். அவர்களில் 1,100 பேர் சிங்களவர்கள் என்பது பொருள் படைத்த நிலவரம்.

"எழுபதாயிரம்குமாஸ்தாக்களில் இருபதாயிரம் பேரால் சிங்களத்தைப் பயன்படுத்த இயலாது. அதில் போதிய தகுதியைப் பெறுவதற்கு இரண்டு வருடக் கெடு வைத்திருக்கிறார்கள்.

இவ்வளவு பிரதிகூலமான சூழ்நிலை இருந்தும், அவசர அவசரமாக தமிழிடம் துவேஷம் காட்டி, நல்லாட்சியின் தேவைகளை மறந்து, நீதி நெறியை மதிக்காமல், 'சிங்களம் ஒன்றுதான் இனி ஆட்சி மொழி' என்று விதி செய்திருப்பது, நாட்டின் நிலையான நன்மைக்கு உகந்தது அல்ல.

தமிழர்களுக்கு இழைக்கப் பட்டுள்ள இந்த அநீதியானது, மனித உரிமைகளைப் பற்றிய ஐ. நா. சாசன விதி முறைகளுக்கு முற்றிலும் புறம்பானது!

எனவே, இலங்கைத் தமிழர்கொதிப்படைந்திருப்பது இயல்பே. தமது அதிருப்தியைத் தெரிவித்த தமிழர்கள் மீது புது வருடப்பரிசாக அடக்குமுறையை ஏவிவிட்டிருக்கிறார்கள். இது கசப்பையும், போராட்ட உண்ர்வையும் வளர்க்கத்தான் செய்யும்.

"எனவே, நிலைமை மிஞ்சி விடுவதற்கு முன், இந்த உணமையை நன்குணர்ந்து, தவற்றைத் திருத்திக்கொள்ளும் விவேகம் இலங்கை சர்க்காருக்கு உதயமாகுமா என்பதுதான் கேள்வி."

இவ்வாறு, 'இலங்கையில் அநீதி' என்ற தலைப்பில், 3-1-64 'தினமணி (சென்னை) இதழ் எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; மேலும் அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"இலங்கை வாழ் தமிழர்களுக்கு அந்நாட்டு சர்க்கார் ஒரு புது அநீதியை இழைத்துள்ளனர். 'சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருந்து வரும்' என்ற சட்டத்தைப் புது அநீதியை வருடத் துவக்கத்தில் அமுலுக்குக் கொண்டு வந்துவிட்டனர்.

இது அடியோடு நியாயமற்றது என்று பல வருடங்களாகத் தமிழர்கள் வற்புறுத்திக் கூறி வந்துள்ளனர்; ஆனல், அதிகாரம் செலுத்துபவர்களின் காதுகளில் அது ஏறவில்லை!

'தமிழில் எழுதும் கடிதங்களுக்குத் தமிழில் அரசாங்கப் பதில் கிடைக்கும்' என்ற சிறிய சலுகை மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

பல பல நூற்றாண்டுகளாக புழக்கத்தில் இருந்துவரும் தமிழ் மொழியைச் சிங்களத்துடன் சம அந்தஸ்துள்ள கூட்டு அரசாங்க மொழியாக்காதது அடிப்படையான அநீதி.

அப்படிச் செய்வதில் சிரமமெதுவும் இருக்கக் காரணமில்லை. இரு மொழிகளிலும் விவகாரத்துக்கு வேண்டிய பரிச்சயம் உள்ளவர்கள் நிறைய இருக்கிறார்கள். போகப் போக அத்தகையோரின் எண்ணிக்கையையும், தகுதியையும் வளர்த்துக்கொள்ளலாம்.

பள்ளிக்கூடங்களிலும், காலேஜுகளிலும் தாய் மொழியில் விரிவான பயிற்சியும், மற்ற மொழியில் விவகார ஞானத்துக்கு வேண்டிய அளவு போதனையும், ஒருசேர நடைபெறச் செய்வது மிக மிகச் சுலபம்.

இம்மாதிரி செய்ய மறுத்தது, இலங்கை மக்களின் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை நிச்சயமாகப் பாதிக்கவே செய்யும்.

தமிழ் மொழி இரண்டாந்தர அந்தஸ்தைப் பெறுவதும், தமிழர்கள் அதே மாதிரி இரண்டாந்தரக் குடிகளாக இருந்து வரும்படி நிர்ப்பந்திப்பதும், எதிர்காலத்தில் பலவிதத் தொல்லைகளை விளைவிக்கும்.

'தமிழர்வாழ் பகுதிகள் தனியரசாகப் பிரிந்து விட வேண்டும்' என்ற கோரிக்கை, இப்போதைய அநீதியின் காரணமாக வலுவடையத்தான் செய்யும். இதன் விளைவுகளைக் குறைத்து மதிப்பிடுவது நியாயமாகாது. நல்லெண்ணத்துடன் கூட மறு பரிசிலனை செய்வது தான் இலங்கை சர்க்காரின் குறைந்த பட்சப் பொறுப்பு.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான் முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஜனவரி மாதம் 19-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## கல்வி உரிமைக்கு ஆபத்து

பாடசாலைப் புனரமைப்புத் திட்டம் பதுளையிலே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். சுமார் 3000 தமிழ் பிள்ளைகள் பாடசாலைகளை பகிஷ்கரித்துள்ளனர்.

இரு பெரிய கல்லூரிகளில் நடைபெற்று வந்த தமிழ் வகுப்புகள் மூடப்பட்டு விட்டன. உயர்தர மகளிர் கல்லூரியினின்று தமிழ் பேசும் மாணவிகள் வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு வேறு மூன்று பாடசாலைகளில் இடம் தருவதாகக் கூறப்பட்டது. இதுதான் ஆட்சியாளரின் புனரமைப்புத் திட்டம்.

சிறப்புமிக்க கல்லூரிகளிலிருந்து தமிழ் பேசும் பிள்ளைகளை அகற்றி கல்வி வசதிகள் குறைந்த பாடசாலைகளுக்கு அனுப்புவதை மாணவ, மாணவிகளும் பெற்றோரும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இது முற்றிலும் பாரபட்சமான நடவடிக்கையாகும். வகுப்புவாத அடிப்படையில் இப் புனரமைப்பு செயல்படுத்தப்படுகிறது. சிங்கள வகுப்புவாதிகள் இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் தீவிரம் காட்டுகின்றனர். இதன் மூலம் தமிழ் பேசும் பிள்ளைகளின் எதிர்காலத்தை நாசமாக்க வழி ஏற்படுமல்லவா?

தேசியக் கல்வித் திட்டத்துக்கு வெள்ளை அறிக்கை வருகிறதாம். அந்த அறிக்கை வருமுன்பு இத்திட்டத்தை ஏன் அமுல் நடத்த வேண்டும்? "மலையக மக்கள் கள்ளத் தோணிகள் — அவர்களின் கல்வி உரிமையைப் பறியுங்கள்" என்ற சில தீவிரவாதிகள் கூச்சலுக்கு அரசாங்கம் அடிபணிந்து விட்டதென்பதையே காட்டுகின்றன இந்த வகுப்புவாத நடவடிக்கைகள்.

பெற்றோர்களின் சம்மதமின்றி, தாங்கள் நினைத்த போதெல்லாம் பிள்ளைகளை ஒரு பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்கு மாற்ற ஆட்சியாளருக்கு உரிமை கிடையாது. அது ஐ. நா. சாஸனத்தின் அடிப்படைக் கொள்கைக்கே மாறானது. பிள்ளைகளின் படிப்பு பற்றி எந்த மாறுதலைச் செய்தாலும் பெற்றோரைக் கலந்தே செய்யவேண்டும். அதுவே ஜனநாயகம்.

பதுளையில் "புனரமைப்பு" என்னும் வகுப்புவாதத் திட்டத்தின் பிடியிலிருந்து தங்களின் பிள்ளைகளை விடுதலை செய்ய பெற்றோர் பெரும் கிளர்ச்சி செய்கின்றனர் தமிழ்ப் பிள்ளைகளை ஒதுக்கும் இந்த அநீதி இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே மலைநாட்டுப் பெற்றோர் விழிப்புடன் இருத்தல் வேண்டும். அவர்கள் ஒரே அமைப்பின் கீழ் ஒன்று திரண்டு கல்வி உரிமைக்காகப் போராட வேண்டிய வேளை வந்து விட்டது.

இவ்வாண்டில் தோட்டப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள பதுளைப் பாடசாலைகள் மறுத்துவிட்டன என்று ஒரு செய்தி கூறுகிறது. இது அரசாங்கத்தின் ஆணையாம்.

மலையகத்திலும் இதர நகரங்களிலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இடம் கிடையாதென கையை விரிக்கின்றனர். இதுவும் அரசாங்கத்தின் கட்டளையாகும்.

பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்கச் சென்றால் "பிரஜாவுரிமையை நிரூபியுங்கள்" என்று கேட்கின்றனர். இது அரசாங்கத்தின் சுற்றறிக்கையாம். ஏற்கனவே பாடசாலைகளிலுள்ள தமிழ் வகுப்புகளும் தேசியக் கல்வி என்ற பெயரால் மூடப்படுகின்றன.

தோட்டப்பிள்ளைகளென்றால் நகரப் பாடசாலைகளின் கதவுகள் மூடப்படுகின்றன; இதனால் இவ்வாண்டில் மலையகத்தில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் கல்வி பயில வசதியின்றி தெருவில் நின்று தவிக்கின்றனர்.

தோட்டப் பாடசாலைகளிலே 5ம் வகுப்புக்குமேல் படிக்க வசதியில்லை. நகரப் பாடசாலைகளில் படிக்கவோ குடியுரிமை நிரூபிக்கவேண்டும். சுமார் 10 லட்சம் தோட்ட மக்களின் குடியுரிமையைப் பறித்துக் கொண்ட பிறகு, அந்த உரிமையை அவர்கள் எப்படி நிரூபிக்க முடியும்?

தோட்டச் சிறார்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் இந்நடவடிக்கையை இவ்வாண்டில் மிகத் தீவிரமாக அமுல் நடத்துகின்றனர். மலைநாட்டை வளமாக்கி, தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை உழைத்துக்கொடுக்கும் பாட்டாளி மக்களின் பிள்ளைகளுக்கா இந்தக் கதி? பிரதம மந்திரியின் சோஷலிஸம் இதுதானா?

"மலைநாட்டு மக்களுக்கு நாங்களே பிரதிநிதிகள்" என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் தலைவர்கள் இந்த அநீதியை எதிர்த்துப் போராடுவார்களா? தோட்டப் பிள்ளைகளின் கல்வி உரிமையைப் பாதுகாக்க அவர்கள் இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன? தோட்டச் சிறார்களின் கல்வி விஷயத்தில் அவர்கள் என்றாவது சிரத்தைகாட்டியதுண்டா? தோட்ட மக்கள் கல்வி அறிவு பெறுவதில் அவர்கள் ஏன் அஞ்ச வேண்டும்?

சந்தாப்பணத்தைச் சேகரிப்பது மலையக மக்களுக்குச் செய்யும் சேவையல்ல. ஆட்சியாளருக்கு அடிவருடித் தங்களின் பதவியையும், வர்த்தகச் சலுகைகளையும் பாதுகாத்துக்கொள்வதால் தோட்ட மக்களுக்குப் பயன் ஏற்படாது.

பிள்ளைகளின் கல்வி உரிமை பறிக்கப்படுவதைப் பார்த்தும், பாராததுபோல் மழுப்பிவிட்டு வாளாவிருத்தல் காங்கிரஸ் தலைவர்களுக்குச் சரியன்று. தோட்ட மக்களின் உரிமைகளிலும் நலன்களிலும் அவர்களுக்கு உண்மையில் அக்கறையிருந்தால், துணிவுடன் முன் வரட்டும். தமிழ்ப் பெற்றோர்களைத் திரட்டி கல்வி உரிமையைக் காக்கப் போராட்டங்களை நடத்தட்டும். செய்வார்களா?

வாய்ச் சொல் வீரர்கள் செயலில் இறங்க அஞ்சுவார்கள் என்பது எமக்குத் தெரியும். செயலில் இறங்கினால் தியாகம் செய்ய வேண்டும். பதவிகளையும், சலுகைகளையும் உதறித்தள்ளவேண்டும். அதற்கு அவர்கள் நிச்சயம் தயாரில்லை. இது பகிரங்க இரகசியம்.

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியதால் தான் தோட்டத் தமிழர்கள் எல்லா மனித உரிமைகளையும் எதிர்ப்புக் காட்டாமலேயே இழந்துவிட்டனர். இனியாவது அவர்கள் சொந்த சக்தியின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். சந்தர்ப்பவாதத் தலைமையை உதறித் தள்ளவேண்டும்.

குடியுரிமை தொடக்கம் கல்வி உரிமை வரை எல்லா உரிமைகளையும் பெற்றே தீருவோம் என்று மலையக மக்கள் உறுதிபூண வேண்டும். அதற்கு அவர்கள் ஒரே அணியில் ஒன்று திரளவேண்டியது அவசியமாகும். இதைச் செய்ய இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

உரிமைகளை இழந்து தவிக்கும் இந்த நெருக்கடியான வேளையிலே, அவர்களுக்கு நல்ல வழிகாட்டும் ஒளி ஒன்று தோன்றுகிறது. அதுதான் தமிழரசுக் கட்சியின் அரசியற் தலைமை—இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தொழிற் சங்கத் தலைமை.

இது நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவதற்காகத் தளராது போராடும் தலைமை. மகாத்மா காந்தியின் அஹிம்சைக் கொள்கையைச் சிரமேற்கொண்டுள்ள தலைமை.

இத்தலைமை ஒன்றே மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டக் கூடியது. இதனை ஏற்று, ஒரே கொடியின் கீழ் [illegible] துவதே இழந்த உரிமைகளைப் [illegible] வழி என்பதை மலையக மக்களுக்கு வலியுறுத்திக் கூறுகின்றோம்,

வட இலங்கை

## தமிழ் மக்களின் சிங்கள ஆர்வம்

## பட்டாளத்தாரிடம் பாடம் கேட்கின்றனராம்

"வட இலங்கைத் தமிழ் மக்கள் எவ்வளவு ஆர்வமாகக் சிங்கள மொழியைப் படிக்கின்றனரென்றால், அனேகர் மாலை நேரங்களில் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டுள்ள பட்டாளத்தாரிடம் சிங்களப் பாடம் கேட்டுக் கொள்கின்றனர்"

இவ்வாறு "லங்கா தீப" பத்திரிகை 9-1-64ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"தமிழரசுவாதிகள் சிங்கள மொழிக்கு எதிராக எவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுத்தாலும் கூட, யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தமிழ் மக்கள் மிகத் தீவிரமாகச் சிங்களம் படிக்க ஆரம்பித்துள்ளனர் என்று தெரிகிறது.

சிங்களம், படிக்க விரும்புகிறோம் என்று பகிரங்கமாகக் கூறினால், வகுப்புவாதிகளான தங்கள் சகோதரத் தமிழர்களால் இடைஞ்சல் ஏற்படுமென்று அவர்கள் கூறுகின்றனர்."

### வருமானவரி இலாகாவும் சிங்களமும்

"தனிச் சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் எவ்வளவுதான் கூச்சலிட்டாலும், வருமான வரி இலாகாவைப் பொறுத்த வரையில் அது கேலிக்கூத்தாகியுள்ளது" என்று "லங்காதீப" 11-1-64ந்திகதி எழுதியுள்ள அரசியல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை இது பற்றி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"வருமானவரி இலாகாவின் அலுவல்கள் தமிழில் நடைபெறுவதாகவே பத்திரிகைகளில் வெளியாகும் அறிக்கைகள் கூறுகின்றன. ஆயினும் அதனை ஒரு தொழில் நுட்ப இலாகாவாக ஒதுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

தற்போது அங்கு சில அலுவல்கள் சிங்களத்தில் நடைபெறுகிறதென்றால், அந்தப் பெருமை அங்கு பணியாற்றும் சிங்களமொழி ஆர்வமுள்ள அதிகாரிகளையும் முன்னாள் கமிஷனரையுமே சாரும்.

சிங்களத்தில் பணியாற்றக் கூடிய அதிகாரிகளை ஒதுக்கி வைத்தல் இதுவரை இந்த இலாகா கையாண்டு வந்த கொள்கையாகும்.

சிங்கள மொழிப் பற்று மிக்கவரும் எழுத்தாளருமான திரு. டி. பி. இலங்கரத்ன வருமான வரி "தொழில் நுட்பமுள்ள இலாகா" என்று ஒதுக்குவதற்கு இடமளிக்க மாட்டாரென்று நம்பப்படுகிறது. அப்படி ஒதுக்கப்பட்டால் அரசாங்கத்தின் மீது பெரும் அதிருப்தி ஏற்படும்.


சிங்களத்தில் கடமையாற்ற விரும்புகிறவர்களைத் தூரப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்து தண்டனை வழங்குவதற்கான ஒரு ஏறபாடும் நடைபெறுகிறது.

இந்த நிலைமை நீடிக்க அனுமதித்தால் தேசிய வருமானவரி இலாகாவிலிருந்து

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள இதழ்களில்...

### அவரது முதற் கடமை



"தவஸ" சிங்களத் தினசரியில் 4-1-64ந் திகதி முதற் பக்கத்தில் முதற் படமாக "அரசாங்க அதிபரை வரவேற்கிறார்" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட படம் இது.

யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆட்சிமொழி எதிர்ப்பு—தமிழரசு இயக்கம் நடைபெற்ற மறுதினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய யாழ்ப்பாண சுயேச்சை எம். பி திரு அல்பிரட்துரையப்பா முதன் முதலாக எடுத்த நடவடிக்கை கச்சேரிக்குச் சென்று, புதிய அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரவைக் கைகுலுக்கி வரவேற்றதுதான்" என்று படவிளக்கம் சிங்களத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### දිනපති පිළිගනී

යාපනයේ සිංහල රජභාෂා විරෝධී පෙළපාළි ව්‍යාපාරය පැවැත්වූ පසුවදා කොළඹ සිට පැමිණි යාපනයේ ස්වාධීන මහජන මන්ත්‍රී ඇල්ෆ්‍රඩ් දුරෙයිඅප්පා මහතා පළමුවෙන් කළේ යාපනයේ කච්චේරියට ගොස් නව දිසාපති නෙවිල් ජයවීර මහතාට අතට අත දී පිළිගැනීමයි.

## தடுப்பு முகாமில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் செய்த டாக்டர் நாகநாதன் அவர்கள், முகாமின் சுகாதார நிலையில் சிறு சிர் திருத்தங்களைக் கண்ட போதிலும் நிர்வாகத்தில் உள்ள பல ஊழல்களை குடியகல்வுத் திணைக்களத்தாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். குறிப்பாக சந்தேக நபர்கள் என்று கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு வருபவர்களிடம் எடுக்கப்படும் வாக்கு மூலங்கள் சிங்கள மொழியில் பதியப்படுகிறது. வாக்கு மூலத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளாமல் சந்தேகநபர்கள் கையெழுத்திடவேண்டுமென்று பலாத்காரப்படுத்தப்படுகிறார்களாம். எனவே வாக்கு மூலங்கள் சந்தேக நபர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் எழுதப்பட வேண்டுமென்று டாக்டர் நாகநாதன் அவர்கள் உரிய அதிகாரிகளை கேட்டுள்ளார் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொகவந்தலாவையில்

# மூன்று தமிழ் தொழிலாளர்கள் கைது

## இ. தொ. கழகத் தலைவர் முயற்சியால் இருவர் விடுதலை

கள்ளக் குடியேற்றக்காரர் என்று மலைநாட்டிலும் தொழிலாளர்களைக் கைது செய்யும் பணியில் பொலீசார் முனைந்துள்ளனர். பொகவந்தலாவையில் அண்மையில் மூன்று தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, தொழிலாளர் கழகத் தலைவா டாக்டர் நாகநாதன் முயற்சியினால் இருவர் விடுதலையாக்கப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவையிலுள்ள பொகவண குரூப்பைச் சேர்ந்த லின்ஸ்ரட் தோட்டத்தில் பணி புரியும் திருவாளர்கள்: கத்தக்காரன், ராமசாமி, மருதுடையான் ஆகிய மூன்று தொழிலாளர்களையும், கடந்த 9ம் திகதி அட்டன் பொலீசார் திடீரெனக் கைது செய்துள்ளனர். அவர்கள் 'கள்ளத்தோணி' கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர்.

அட்டன் பொலீஸ் உதவி அதிபர் இம்மூவரையும் விசாரணை எதுவும் செய்யாமலே கொழும்பு தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவர்களையிட்டு எதுவிதமான விபரங்களையும் தெரிந்து கொள்ளவோ, வேலை செய்யும் தோட்டத் துரையிடம் விசாரிக்கவோ பொலீசார் எதுவித முயற்சியும் எடுக்காமலே கொழும்புக்கு மூவரையும் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

மூவரில், திரு. கத்தக்காரன் என்பவர் கடந்த மாதம்பொலீசாரால்கள்ளக் குடியேற்றக்காரர் என்று கைது செய்யப்பட்டு, பின்னர் போதிய சான்றுகள் காண்பித்ததன் பேரில் விடுதலை செய்யப்பட்டவர். இது பற்றிய விபரங்களை அட்டன் பொலீஸ் அதிகாரியிடம் கூறியும், அவர் செவிமடுக்கவில்லை எனத் தெரிகிறது.

தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன், பொகவந்தலாவை இ. தொ. க. பிரதிநிதி திரு. எத்திராஜ் ஆகியோர் போதுமான சான்றுகளுடன் கொழும்பை அடைந்து கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனிடம் புகாரிட்டதன் பேரில், அவர் குடியகலவுத் திணைக் களத்துடனும், பொலீஸ் இலாகாவுடனும் தொடர்பு கொண்டும், நேரில் முகாமுக்குச் சென்றும் நிலைமையைப் பரிசீலனை செய்தார்.

பொலீஸ் மேலதிகாரியிடம், தோட்டத் தொழிலாளர்களை பொலீசார் மிருகத்தனமாகவும், மனிதாபிமானத்துக்கப் பாற்பட்ட விதமாகவும், அநீதியாகவும் நடாத்துவதையிட்டு வன்மையாகக் கண்டனம் தெரிவித்தார்.

கண்டிப் பொலீஸ் அதிபர் மூலம் அடுத்த நாள் நடவடிக்கை எடுப்பதாகப் அதிகாரி கூறியதன் பேரில் திரு. எதிராஜ், திரு. கோவிந்தன் ஆகியோர் கண்டி சென்றும், பொலீஸ் அதிகாரியைக் காண முடியாமல் மீண்டும் கொழும்பை அடைந்தனர். டாக்டர் நாகநாதன் மீண்டும் பொலீஸ் அதிகாரிகளின் அசிரத்தையைச் சுட்டிக்காட்டியதன் பேரில், தவறுக்காகப் பொலீஸ் அதிகாரி டாக்டரிடம் மன்னிப்புக் கோரினர்.

கண்டிக்கு மீண்டும் திரும்பிய திரு. எதிராஜ், திரு. கோவிந்தன் ஆகியோர் கொடுத்த உண்மைத் தகவல்களின் பேரில் திரு. கத்தக்காரன், திரு. மருதுடையான் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். வேறு சில தகவல்கள் கிடைத்ததும் திரு. இராமசாமியை விடுதலை செய்து விடுவதாகவும் அதிகாரிகள் வாக்களித்துள்ளனர்.

ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் கைது செய்து விடுதலை செய்யப்பட்டவர்களிடம போதுமான அத்தாட்சிகள் இருந்தும் கூட அவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுகிறார்கள். மன்னாரில் இது மாதிரி அடிக்கடி ஏற்படுவதாக நமக்குச் செய்திகள் கிடைத்து வருகின்றன.

## மீண்டும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைப் பிரதிநிதி ஒரு இயக்கத்தை நிறுவி மலையகம் எங்கணும் தீவிரப் பிரசாரத்தி லீடுபட்டு வருகிறார். தமிழ் பேசும் மக்களின்பால் துவேஷத் தீயை மூட்டுவதும், கத்தோலிக்க மதத்தவர் மீது அபாண்டங்களைச் சுமத்துவதும் தான் இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்:

இலங்கையிலே இல்லாத 'நாம்-தமிழர் இயக்க'த்தை இங்கு இருப்பதாகக் கூறிக் கொண்டு சிங்களவர்களிடம் பொய்ப் பிரசாரத்தின் மூலம் இனத்துவேசத்தையும் உருவாக்க முனைந்து வருகிறார்கள் வெலிமடைப் பிரதிநிதியும் அவர்தம் சகாக்களும்.

வெலிமடைப் பிரதிநிதியும், சகாக்களும் செய்யும் துவேஷப் பிரசாரத்தினைத் தெரிந்தும், அதனால் நாட்டினில் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளையிட்டு அறிந்தும் அரசாங்கம் எதுவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல் தட்டிக் கொடுத்து வருவதாகவே தெரிகிறது.

அண்மையில் பதுளையில் நடைபெற்ற 'நாம்-சிங்களவர் இயக்க, ஊர்வலத்தின் போது "தமிழனை வெட்டு, குத்து, சுடு" என்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டு பல சிங்கள வகுப்புவாத வெறியர்கள் ஆட்டம் போட்டதாகவும் தெரிகிறது. பதுளை நகரிலுள்ள பல தமிழ்க்கடைகள் மீது கற்கள் வீசப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அரசாங்கம் உடனடியாக இத்தகைய துவேஷ இயக்கங்களைத் தடை செய்யாவிட்டால் மீண்டும் ஒரு இனக் கலவரம் விரைவில் உருவாகும் என்று மலைநாட்டு மக்கள் பீதியடைந்துள்ளனர்.

## தமிழ் பிள்ளைகளின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

நாடற்றவர்கள் என்ற பட்டத்தைச் சூட்டி இந்நாட்டில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்த தமிழ் மக்களின் குழந்தைகளுக்கு மனிதாபிமானம் கொஞ்சமுமின்றி கல்வி போதிக்கும் வசதியினைப் பிடுங்கிவிட அரசாங்கம் மறைமுகமாகத் திட்டம் தீட்டி வருவதாக அறிகிறோம்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பல பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுகளுக்கு மூடுவிழாச் செய்யப்பட்டுவிட்டதால் ஆயிரக்கணக்கான . மாணவர்கள் கல்வி வசதியை இழக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

பொகவந்தலாவை, தலவாக்கலை, பதுளை, அட்டன் போன்ற இடங்களில் தமிழ்ப் பிரிவுகள் மூடப்படுவதுடன் மலைநாட்டுத் தமிழ் மக்களின் குழந்தைகளுக்கு அனுமதிமறுக்கப்பட்டும்வருகிறது. கல்வி அதிகாரிகளின் இந்த மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து நியாய பூர்வமான உரிமைகோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டங்களை முறியடிக்க பொலீசார் ஏவப்படுகிறார்கள். அத்துடன் சிங்கள வகுப்புவாதிகளின் காடைத்தனத்துக்குள்ளும் தமிழ் மாணவர்களும் பெற்றோரும் ஆளாக்கப்படுகிறார்கள்.

கொழும்புக்கு அணித்தாகவுள்ள கோட்டேயில் [illegible] யன் கல்லூரி [illegible] காரணமாகத் தமிழ்ப் பிரிவை ஒழித்தது. ஆர்ப்பாட்டம் நடாத்திய மாணவர்களும் பெற்றோரும் காடையர்களால் கல்கொண்டு தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய தகவல் எமக்குக் கிடைத்துள்ளது. பல மாணவ மாணவிகள் படுகாயமுற்றதாகவும் அறிகிறோம்.

பதுளையில் நடைபெறும் காடைத்தனமும் மிருகத்தனமும் நமது வர்ணனைக்கு அப்பாற்பட்டது. (4ம் பக்கம் விபரம் பார்க்கலாம்)

பதுளை நகரத்தில் தொடர்ந்து நடைபெறும் பாடசாலை மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொழிலாளர் கழகத் தலைவரும், தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் நேரடியாகப் பார்த்து வந்துள்ளார்.

சிலாபத்தில் உள்ள ஒரே கல்லூரியான சென்ட் மேரிஸ் கல்லூரியிலும் தமிழ் வகுப்புகளுக்கு மூடுவிழாச் செய்யப்பட்டதால் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள் மேல்படிப்பு வசதிகளை இழந்து தவிக்கின்றனர்.

அரசாங்கம் கல்விச்சாலைகளைச் சுவீகரித்துக் கொண்டதன் உண்மையான பலாபலன் என்னவென்பதை இன்று பரிபூரணமாக உணர முடிகிறது, என்று இந் நடவடிக்கைகளை [illegible] னர்.

## சிங்களமும் பதவி உயர்வும்

கொழும்பு அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் ஊழியர் ஒருவர் போதியளவு சிங்கள அறிவு இருந்தும் சிங்களத் தகுதிகாண் பரீட்சை எதற்கும் தோற்றாது இருந்தார். இப்பொழுது அவர் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சிங்களப் பாடத்திற்குத் தோற்றியுள்ளார். மேலும் இதுவரை சிங்களத் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றத் தவறியமைக்குக் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு அவர் மேற்கூறிய பரீட்சைக்குத் தோற்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளாராம்.

அவரின் இந்த மன மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் அவருக்கு அண்மையில் கிடைக்கவிருக்கும் பதவி உயர்வேயாகும் என்று தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் மத்தியில் கதைக்கப்படுகிறது. கிடைக்கவிருக்கும் பதவி உயர்வு, இவருக்கு மேல் நிலையில் உள்ள முப்பதிற்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பின் தள்ளியே வழங்கப்படுவதாக நமது நிருபருக்கு அஞ்சலக வட்டாரத்திலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

## தமிழ் மக்களின்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களம் அடியோடு வெளியேற்றப்பட்டுவிடும்.

1963 டிசம்பர் 31ந் திகதி தாங்கள் அமர்ந்திருந்த அதே ஆசனங்களில் சிங்கள-விரோதிகள் இன்றும் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் வழக்கம் போல ஆங்கிலத்திலேயே கடமையாற்றுகின்றனர்.

சிங்களம் கற்றவர்கள் சிங்களத்தில் கடமையாற்றுகின்றனர். ஏனையோர் சிங்களம் தெரியாதென்று கூறி கடமையாற்ருதிருக்கின்றனர், பொது மக்களின் கடிதங்கள் நூற்றுக்கணக்கில் பதிலளிக்கப்படாமல் குவிந்து கிடக்கின்றன."


வித்தியாதிபதியால் G. C. E. பாடப் புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கோர் பொதுத் தேர்வுகளுக்குப் பயன்படுத்திய

**தமிழ் மொழி விளக்கம்**

ஆக்கியோன்

க. கயிலாயநாதன் B. A., Dip. in Ed.

துணை அதிபர், இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

திருத்திப் பெருப்பிக்கப்பட்ட புதிய பதிப்பு!

விலை ரூபா 3/50

**மனக்கவலை தீர வேண்டுமா?**

எந்த விதமான மனக் கவலைகள், கரைச்சல்கள், இருப்பினும் அவைகளை விபரமாக எழுதுங்கள். உங்கள் காரணங்களை மந்திர சக்தியின் மூலம் நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டா.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கம்பளை.



**ரிஷி**

**அஜமாமிச லேகியம்**

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தெளிவு

## யூ. எல். தாவூத்

மாலைக் கதிரவனின் மஞ்சள் வெய்யில் கொஞ்சங் கொஞ்சமாக மங்கி மறைந்தது. வானிலே முழுத் திங்கள் தன்னிகர் இல்லை எனும்படி இறுமாப்புடன் தோன்றிப் பூமியை ஏறிட்டு நோக்கியது.

அப்போது என் செவிக் கெட்டிய செய்தி என்னிதயத்தை இறுக்கிப் பிழிந்து உயிரையும் துளைத்துச் சென்றது.

கதிஜாவுக்குக் கலியாணமாம்,

என்னுள்ளத்தில் ஆயிரம் ஊசிகளைக் கொண்டு குத்துவது போன்ற வேதனை மனத்தில் ஏக்கமும், சோகமும் கப்பிக்கொண்டன.

வானத்தில் விண்மீன்கள் நடனமாடின. சந்திரன் தனது வெண்கதிர் கற்றையால் இரவுப் பெண்ணின் இருளென்ற முக்காட்டை நீக்கிக் கொண்டிருந்தான்.

ஆனால்—

என்னிதயத்தைக் கப்பிக் கிடக்கும் இருள் நீங்குமா?

இந்தத் திருமணம் நடைபெறுமா? இதைக் கதிஜா விரும்பியிருப்பாளா? ஏன் விரும்பமாட்டாள். அவளைப் பற்றி நினைக்க எனக்கு உரிமையில்லை; துணிவில்லை. எனக்கு தைரியமிருந்தால் அவளுக்கு வாழ்வளித்திருக்கலாம். நான் பெற்றோருக்கு அடங்கிய பிள்ளை. தந்தையின் பண ஆசை கதிஜாவை என்னிடமிருந்து பிரிக்கிறது.

அப்துல் காதரை அவளுக்கு மாப்பிள்ளை பேசுகிறார்களாம் இதை எண்ணும் போதே என்னுள்ளம் கல்லில் விழுந்த கண்ணாடிப் பாத்திரமாகச் சிதறுகிறது, அவமானம் இதயத்தைத் துண்டு துண்டாக நறுக்கித் தள்ளுகிறது.

நாற்பது வயதைத் தாண்டி அரைக்கிழவனாகி விட்ட காதர் இரண்டாந் தாரமாகக் கதிஜாவை மணக்கப் போகிறான்.

வட்ட நிலாப் போன்ற எழில் கொஞ்சுமுகம், விண் மீனைப் போன்ற மினு மினுக்கும் விழிகள், கனியுதட்டில் வீசுகின்ற ஒளிச் சிரிப்பு, கடலில் கிடைச்காத முத்துப் பற்கள் இத்தகைய கட்டழகு சொட்டும் கதிஜா அந்த அரைக் கிழவனிடம் என்ன இன்பத்தைக் காணப் போகிறாள்?

என்னைப்போன்ற கோழைகள் வாழுமட்டும் இது நடைபெறத்தான் செய்யும். நெஞ்சில் உரமுள்ள மனிதனாக நானிருந்தால் அவளின் வாழ்வுக்கு வழிவகுத்திருக்க மாட்டேனா? நான் அவளை நெஞ்சார நேசிக்கிறேன். அவளோடு வாழ்க்கை நடாத்தக் கனவு காண்கிறேன். ஆனால்—

பெற்றோரின் பண ஆசை குறுக்கே நிற்கிறது. செல்வச் செருக்கு சிருஷ்டிக்கும் வழியில் எனது ஆசைகள் முறியடிக்கப் படுகின்றன. பெண்ணை விட அவள் கொண்டு வரும் பணக்குவியலிலேயே என் தந்தைக்குக் கண்.

கதிஜாவை நான் மணந்து கொண்டால் கல்வீடு கிடைக்காது. எல்லாவற்றிற்கு மேலாகப் பெற்றோரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டும். எனவே பெற்றோருக்கடங்கிய பிள்ளையாகிவிட்டேன். இந்நிலையில் அவள் இன்னொருவனின் மனைவியாகப் போவதை எண்ணி நான் ஏன் வருந்த வேண்டும்.

ஏழ்மையில் பெண்கள் பிறப்பது கூடாதா? பணக்காரர் ஏழைப் பெண்களை மணக்கக்கூடாதென்று எந்த மார்க்கமும் கூறவில்லையே.

கதிஜா ஏழைதான். ஆனால் சேற்றில் மலர்ந்த செந்தாமரை. சிப்பிக்குள் விளைந்த முத்து. வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புகள் அனைத்தும் அவளிடம் நிரம்பியிருக்கின்றன.

கதிஜாவை மணந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை என்னுள்ளத்தில் நிரம்பி இருக்கிறது. ஆனால் மனம் விரும்பியவளை மணக்கப் போகிறேன் என்று கூறத்துணிவில்லை. பெற்றோரின் சீற்றம் — தந்தையின் செல்வச் செருக்கு. என்னாசைக்குத் தடைவிதிக்கிறது.

அதன் பயன்...

எனது ஆசைக் கொடி அறுபடப் போகிறது. எனதுள்ளம் கவர்ந்தவள் இன்னொருவனின் மனைவியாகப் போகிறாள். என் இதயம் துயரச்சமுத்திரத்தில் அமுங்கிச் செயலற்றுக் கிடக்கிறது

சுவர்க் கடிகாரம் மணி இரண்டடித்து ஓய்ந்தது. வானத்துச் சந்திரனை மேகம் மறைத்துக் கொள்ள எங்கும் இருள். ஊரெங்கும் அமைதியில் மூழ்கிக் கிடக்கிறது. எங்கோ மூலையில் நாயொன்று ஊளையிடும் சத்தம். வெளி வாயிலுக்கு வருகிறேன். வெறிச்சோடிக் கிடந்த தெரு என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. மீண்டும் படுக்கையில் விழுகிறேன். உடம்பைத்தான் படுக்க வைக்க முடிந்ததே தவிர உள்ளத்தைப் படுக்க வைக்க முடியவில்லை. நிம்மதி என்னை விட்டுத் தூர விலகி நிற்கிறது. நெஞ்சக் கடலில் கடந்த கால எண்ணங்கள் மூட்டி மோதிச் சிதறுகின்றன.

●

கதிஜாவின் நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. துள்ளித் திரிந்த இளம் உள்ளத்திலேயே அவள் குடியேறி விட்டாள். இளமையில் அந்த இளம் உள்ளத்தோடு பழகிய நாட்கள் நெஞ்சில் ஆழப்பதிந்திருந்தன. அவள்தான் எனக்கேற்றவள் என்ற எண்ணம் என் மனத்தில் உறைந்து போயிருந்தது. அந்தப் பெண் மலரைக் கொண்டு தான் வாழ்வை மணங் கமழச் செய்வதென என்றோ முடிவு செய்து விட்டேன்.

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன.

ஒரு நாள் தந்தை அன்போடு என்னை அருகில் அழைத்தார்.

'நம்மூர் காசீம் போடியா மகளை உனக்குக் கலியாணம் பேச எண்ணியுள்ளேன். நல்ல இடம், நம்மிட அந்தஸ்துக்கேற்ற சீதனம் கிடைக்கும். உனக்கு விருப்பந்தானே?' தந்தை கேட்டார்.

'எனக்கு அந்தப் பெண் வேண்டாம்' தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூறினேன்.

'என்ன அது, பெரிய வீடு. கை நிறைந்த சீதனம், காணி, பூமி இவைகளோடு வரும் பெண் வேண்டாமா?' அவரின் குரலில் ஆத்திரம் தொனித்தது.

'நான் நமது அடுத்த வீட்டுக் கதிஜாவை மணந்து கொள்கிறேன். எங்கேயோ' பார்த்தபடி உள்ளத்திலுள்ளதைக் கூறி விட்டேன்.

தந்தையின் கண்களில் பொறி பறந்தது. உணர்ச்சி குமுறிக் கொப்பளித்தது. 'நாலு சல்லிக்கு வழியற்றவளையா முடிக்கப் போகிறாய்' தந்தையின் வாயிலிருந்து பீரங்கி வெடித்தது.

'அவள் ஏழைதான் வாப்பா. ஆனால் பெண்ணுக்குப் பெருமையளிக்கும் பண்புகளெல்லாம் அவளிடம்...' நான் முடிக்கவில்லை. தந்தை குறுக்கிட்டார்.

'உன்னைவிட அவளைப் பற்றி எனக்கு அதிகம் தெரியும். நீ படித்த படிப்பு வாப்பாவின் சொல்லை மீறிப் பேச வைக்குது. நீ நல்லா இருக்க வேணுமென்றுதான் நான் இதை ஒழுங்கு செய்ய எண்ணினேன். நீ எனக்குப் புத்தி சொல்லப் பார்க்கிறாய். நான் சொல்கிறபடி கேட்காவிட்டால் நீ எனக்குப் பிள்ளை இல்லை'. தந்தையின் சொற்களில் ஆவேசமும் கண்டிப்பும் கலந்திருந்தன. அவரின் முடிவு என்னிதயத்தில் எண்ண அலைகளை ஏற்படுத்திற்று.

மௌனமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

அவருக்கு இதுவரை நான் ஒரு முடிவுந் தெரிவிக்கவில்லை. சில நாட்களாக நான் மௌனமாக இருப்பதில் தந்தைக்கு ஒரு வகைத் திருப்தி. எனக்காக ஏங்கியிருக்கும் ஒரு உள்ளத்தில் நம்பிக்கை ஒளியை ஏற்றி வைப்பதா? அல்லது தந்தையின் கட்டளைக்குப் பணிவதா? என்னுள்ளம் கேள்விப் புயலில் சிக்கித் தவித்தது.

என் தந்தையின் முடிவு கதிஜாவின் பெற்றோருக்குத் தெரிந்து விட்டது. இதன் பின்புதான் கதிஜாவுக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கதிஜா பணக்காரப் பெற்றோருக்குப் பிறந்திருந்தால் அவளின் அழகுக்கும், குணத்திற்கும் ஏற்ற வாலிபனொருவனைக் கணவனாகப் பெற்றிருப்பாள். ஆனால் கலியாணச் சந்தையில் அழகையும், குணத்தையும் விடப் பணம் முக்கிய இடம் பெற்று விட்டதே.

தெருக்கோழிகள் சுருதி கூட்டிக் கூவி நடு இரவின் பயங்கரத்தைத் தெரிவிக்கின்றன.

நிம்மதியின்றிப் படுக்கையில் புரண்ட நான் எப்படியோ கண்களை மூடுகிறேன்.

கதிஜாவுக்குக் கலியாணம் நடந்தேறுகிறது. காதர் அவளை மனைவியாகப் பெற்று விட்டான்

நாட்கள் நகர்கின்றன.

கதிஜாவுக்கும் கணவனுக்குமிடையில் ஏதோ பிணக்கு என்ற செய்தி என் செவிக்கு எட்டுகிறது. கலியாணத்தின் பிறகு அவளின் போக்கே மாறிவிட்டதாம். எந்நேரமும் கண்ணீரும், கம்பலையுமாகக் காட்சியளிக்கிறாளாம். கணவனோடு முகங் கொடுத்துப் பேசுவதில்லையாம். அவர்களின் குடும்ப வாழ்வில் ஏற்பட்ட இடைவெளி வளர்கிறது.

கதிஜா ஜுரமென்று படுக்கையில் வீழ்கிறாள்.

நாட்கள் வாரங்களாகி மறைகின்றன.

அவளின் நோய் குறையவில்லை; கூடிக் கொண்டே வந்தது. உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கமே நோய்க்குக் காரணமென்று டாக்டர் கையை விரிக்கிறார். அவளைப் பார்ப்பதற்காக அவளின் வீட்டுக்குச் செல்கிறேன். கதிஜா படுக்கையில் துவண்டு கிடக்கிறாள். காய்ச்சல் அனலாய்த் தகிக்கிறது. அடிக்கடி இருமுகிறாள். அவளின் உடல் மெலிந்து கண்களிரண்டும் குழிவிழுந்து விட்டன.

அவளின் கண்களை உற்று நோக்கினேன். அங்கே வழக்கமான குறுகுறுப்பு இல்லை. அவளது கன்னக் கதுப்பிலே இளமைக் கவர்ச்சி இல்லை. என்னைக் கண்டதும் அவளின் கண்களில் நீர்முட்டி மோதிச் சிதறுகிறது. பக்கத்தில் இருந்த மருந்தைக் கிளாசில் ஊற்றுகிறேன்.

"கதிஜா"

"என்ன மச்சான்" கஷ்டப்பட்டு அவளின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவருகின்றன.

"இந்த மருந்தைக் குடித்துவிடு. விரைவில் வருத்தம் குணமாகி விடும்." மருந்தை அவளிடம் நீட்டுகிறேன்.

அவளின் இதழ்கள் அசைகின்றன. தொண்டை கரகரக்கிறது. நீர் சிந்தும் கண்களோடு என்னை நோக்குகிறாள். விவரிக்க முடியாத துயர எண்ணங்கள் அவளின் விழிவழியே நீர் மணிகளாகச் சொரிகின்றன.

'மச்சான் இந்த மருந்தெல்லாம் என்னைக் குணப்படுத்தாது. நான் பிழைக்க மாட்டேன். எனக்காகச் சிரமப்படாதீர்கள். அவளின் குரலில் உறுதி தொனிக்கிறது. அவள் மறுபக்கம் திரும்பிப் படுக்கிறாள்.

அதற்கு மேல் என்னால் அங்கே நிற்க முடியவில்லை. நடைப்பிணமாக வீடு வந்து சேர்கிறேன்.

மறுநாள்...

கதிஜா இறந்து விட்டாள். அவளின் இறுதி யாத்திரையில் நானும் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

கதிஜாவின் உடலைப் புதைகுழியில் வைத்து மண்ணால் மூடுகிறார்கள். பின் மௌலவி சாகிப் பிரார்த்தனை செய்கிறார்.

'ஆண்டவனே! இறந்து போன ஆத்மாவுக்குச் சாந்தியளிப்பாயாக. அந்த ஆத்மாவை நல்லடியார்களின் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வாயாக.' அவரின் பிரார்த்தனைக்கு அனைவரும் ஆமீன் (ஆமன்) கூறுகின்றனர்.

நானும் முணுமுணுக்கிறேன்.

'ஆண்டவனே! எங்கள் மதத்திலிருந்து இந்தச் சீதனம்

(15-ம் பக்கம் பார்க்க)


## 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம் கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரயடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சங்கங்கள் கவனிக்குமா?

1-1-64 தொடக்கம் சம்பளப்பத்திரமும் அத்துடன் அனுப்பப்படும் கடிதங்களும் சிங்களத்தில எழுதப்பட வேண்டுமெனவும் மத்திய மாகாண உதவி வித்தியாதிபதியவர்கள் அறிவித்துள்ளார்கள். எங்கள் பாடசாலையில் 1-1-63 தொடக்கம் சிங்கள ஆசிரியர் கடமையாற்றுகிறார். இந்நிலையில் நாம் என்ன செய்வது? வழமைபோல் ஆங்கிலத்திலேயே சம்பளப் பத்திரம் எழுதி அனுப்பியுள்ளோம். இதனை ஸ்தாபனரீதியாக எதிர்ப்பது தவிர வேறு வழியில்லை. சில பாடசாலைகள் கட்டாயத்தின் பேரில் சிங்களத்தில் சம்பளப்பத்திரம் எழுதத் தொடங்கினுல் எங்கள் உரிமைகள் பறிபோவதோடு காட்டிக்கொடுத்தவர்களாகவும் மாறிவிடுவோம். அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் சிங்களத்தில் சம்பளப் பத்திரம் தயாரித்தால் சம்பளம் எடுப்பதில்லையென தீர்மானித்துள்ளது.

வட மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் தமிழிலேயே சம்பளப் பத்திரங்கள் எழுதுகின்றன. மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளும் தமிழிலேயே சம்பளப்பத்திரங்கள் எழுதி வருவதாக அ. இ. அரசினர் பாடசாலை த. ஆ. சங்கக் காரியதரிசி திரு. மகாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண முற்ற வெளிக் கூட்டத்தில் கூறியுள்ளார்கள். அப்படியானுல் ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளும் குறிப்பிட்ட ஒரு திகதியிலிருந்து தமிழில் எழுதினுலென்ன? எனவே சங்கங்கள் எல்லாம் ஒருமித்து நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து சம்பளப் பட்டியல்களைத் தமிழில் எழுதுவதைத் தொடங்கவேண்டும். அவற்றிற்கு முன்னேடியாக ஆசிரிய சங்கங்கள் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. குறிப்பிட்ட திகதியிலிருந்து சம்பளப்பத்திரங்கள் தமிழில் எழுதி அனுப்ப வேண்டுமென எங்கள் சங்கம் தீர்மானித்துள்ளதால் போதிய தமிழ் எழுதுவினைஞர்களை ஒவ்வோர் மாகாணக் கந்தோர்களிலும் நியமிக்குமாறு உதவி வித்தியாதிபதிகளைக் கேட்டுக் கொள்ளுதல். சிங்களக் கடிதங்களுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு அனுப்புதல்.

2. தாய்ச் சங்கங்கள் தங்கள் கிளைச் சங்கங்களுக்கும் சகல பாடசாலைகளுக்கும் குறித்த ஒரு திகதியிலிருந்து தமிழில் சம்பளப் பட்டியல்களை எழுதுமாறும் சுற்று நிருபங்களை அனுப்ப வேண்டும்.

3. சிங்களத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டால், எல்லாப் பாடசாலைகளும் எங்கள் சங்கத் தீர்மானத்தின்படி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒரே பதிலைக் கொடுக்கும்படி சகல பாடசாலைகளுக்கும் சங்கம் அறிவிக்க வேண்டும்.

4. தலைமை ஆசிரியர்களும் பிரதம உதவி ஆசிரியர்களும் சிங்களம் படிக்கக் கூடாதெனவும் காரணம் கேட்கப்பட்டால் சங்கத்தின் தீர்மானப்படி எழுதுமாறும் கேட்கப்பட வேண்டும்.

5. இவ்விடயத்தில் அகில இலங்கை அரசினர் பாடசாலைகளை தமிழ் ஆசிரியர் சங்கம் அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம் என்பன ஒன்றுசேர்ந்து ஒரே திகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும். முஸ்லிம் ஆசிரிய சங்கத்தையும் தூண்ட வேண்டும், தமிழர்களின் மற்றைய ஆசிரிய சங்கங்களையும் சேர்த்துத் தீர்மானித்து விரைவில் இதனைச் செய்தல் மிக அவசியமானது.

க. தம்பிராசா
உப தலைவர்
மாத்தளை வட்டாரத் தமிழாசிரியர் சங்கம்

## மக்கள் குரல்

### தமிழரசார் தலையிடுவார்களா?

தோட்டப் பாடசாலைகள் தோன்றிய நாட்களிலிருந்தே, இப்பாடசாலைகளில் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் மிகக் குறைந்த வேதனத்துடன் தொழில் புரிந்து வருகின்றனர். இவர்கள் ஒரு தலைமை ஆசிரியர் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்வதோடன்றி பாலர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையுள்ள எல்லா வகுப்புகளையும் ஒருவரே கல்வி புகட்ட வேண்டிய நிலையிலும் உள்ளனர்.

எஸ். எஸ். சி. சித்தியடைந்து, தோட்டப் பாடசாலையில் கற்பிற்கும் ஆசிரியர்கள் வயது எல்லை இன்றி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைப் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய ஒரே ஒரு சலுகை இவர்களுக்கிருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக இந்தச் சலுகையும் அரசினரால் தடைசெய்யப்பட்டாயிற்று.

இப்போ எவ்வழியிலும் முன்னேறவும் முடியாது, குறைந்த வேதனம் பெறுவதால் வாழவும் முடியாது திண்டாடுகின்றனர். இவ்வாசிரியர்களின் அவலக்குரல் அரசினருக்கோ தமிழருக்கெனப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசாருக்கோ, காதுக்கு எட்டுவதாகத் தெரியவில்லை. தமிழரசார் இவ்வாசிரியர்களின் நிலையுணர்ந்து இவர்களின் வருங்கால வாழ்வு செழிக்க ஆவ வழிவகைகளை வகுத்து நடவடிக்கை எடுப்பார்களா? தோட்ட ஆசிரியர்களின் இன்னல் நீங்கி விடிவுகாலம் வருமா?

ந. டே. குணரெத்தினம்
எட்டப்பொளாத்
தோட்டம்
ஒவிலிகந்தை

### பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும்

சென்ற 29—12—63ம் திகதி சுதந்திரனில் 'மனித உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களுக்கு மண்டியிடுவதா?' என்று தலைப்பட எழுதப்பட்டிருக்கும் கட்டுரை, மானத்தை விற்று வயிறு வளர்க்கும் தன்மானமில்லா தமிழ்த் துரோகிகளுக்கு நல்ல சூடு கொடுப்பதுபோல் அமைந்திருக்கிறது.

'மானத்தை விற்று வாழ்வதிலும் மரணமடைவதே மேல்' என்று கூறியிருக்கிறுரே அவர் யார் என்று பார்த்தேன். சொந்தப் பெயரைக் காணவில்லை. 'அக்கரைமுத்து' என்ற புனைப் பெயர்தானிருந்தது.

'அக்கரைமுத்து' என்ற புனைப் பெயரில் வேறு ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்த ஒருவரை எனக்குத் தெரியும். அவர்தான் இக் கட்டுரையை எழுதியவராக இருந்தால், இப்படியான கட்டுரைகள் எழுத—அதுவும் 'சுதந்திரனி'ல் பிரசுரிப்பதற்காக அனுப்ப அவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்க விரும்புகின்றேன். தன் உள்ளக் கிடக்கைத்தான் பத்திரிகைகள் மூலம் வெளிப்படுத்துகின்றுரா, அல்லது தனது கட்டுரை, பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்பதற்காக, எந்தப் பத்திரிகைக்கு எப்படி எழுதினால் [illegible] பொன்று கூறுகிறுரோ தெரியவில்லை.

எனக்குத் தெரிந்த 'அக்கரைமுத்து'வின் சொந்தப் பெயர் முத்துலிங்கம். அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்திலே 'புதிய சேவையாளர் பழைய சேவையாளர், என்ற பாகுபாடு இன்றி எல்லாத் தமிழ் ஊழியர்களும், சிங்களப் பரீட்சை எதுவும் எடுக்காது இந்த அநியாயமான பாரபட்சமான சட்டத்தை எதிர்க்க வேண்டும்' என்று அவர் கூறினுர். ஆனுல் அப்பொழுதே, சிங்களத்தில் 3ந் தரம் சித்தியடைந்திருந்தார். அடுத்த இரண்டு மாதங்களுள் 5ந் தரத்திற்கு விண்ணப்பஞ் செய்தார்.

'நீர் கூட்டத்தில் படிக்கக் கூடாது என்று கூறிவிட்டு, இப்பொழுது இப்படித் துரோகம் செய்யலாமா?' என்று மற்றவர்கள் கேட்ட போது அது தன் சொந்த விடயம் என்றுர். இதனுல் காரசாரமாகப் பேச்சுவாங்க நேர்ந்தது. உடனே அவர் அதிகாரிகளிடம் போய்த் தான் பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்ததற்காக நாம் அவரைத் தூற்றுவதாக முறையிட்டார்.

அவரிடம் கோடீசுவரன் வழக்கு நிதிக்காக ஒரு ஐந்து ரூபா டிக்கட் வாங்கும்படி கேட்டபொழுது, பத்மநாதன் என்பவரிடம் வாங்கி விட்டதாகக் கூறினுர். என்னிடம் வாய்கிவிட்டதாகப் பத்மநாதனிடம் கூறியிருக்கிறுர். பத்மநாதன் என்னைச் சந்தித்தபோது இவர் குட்டு வெளிப்பட்டது.

இதையிட்டு அவரிடம் கேட்டபோது அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்னைத் தாறுமாறுகத் திட்டினுர். திரு. கோடீசுவரனைத் திட்டினுர். சங்கத்தையும் திட்டினுர். தமிழரசுக் கட்சியையும் திட்டினுர் கடைசியில் தமிழ் மக்களையே தாறுமாறுகப் பேசினுர் எங்களுக்குள் ஏற்பட்ட காரசாரமான பேச்சைக் கேட்டுக் குழுமிய சிங்கள ஊழியர்களிடம் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக நிதிக்குப் பணம் தரவில்லை என்பதற்காக நான் அவருக்கு ஏசியதாகக் கூறினுர். இப்பேற்பட்டவர்தானு 'எம பிரதேசத்தில் வேற்று மொழி பேசுவோரைக் குடியேற்றி இன ஒழிப்பு நடத்தாவண்ணம் முழு மூச்சுக் கொண்டு எதிர்க்க வேண்டும்' என்று கூறுகிறுர்.

தான் சிங்களத்தில் 5ந் தரம் சித்தி அடைந்துவிட்டதாகவும் 8ந் தரத்திற்கு விண்ணப்பஞ் செய்திருப்பதாகவும் தனிச் சிங்களத்தை அமுல் நடத்த உதவ முன் வருவதாகவும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பஞ் செய்து தற்போது அவர் கடமையாற்றும் இடத்துக்கு மாற்றல் எடுத்தார்.

இத்தோடு விட்டாரா? மாற்றலாகிப் போகு முன் இங்கே சகல இடாப்புகளிலும் உள்ள தகவல்களை அழகாகச் சிங்களத்தில் எழுதி வைத்து விட்டார். இவரை இப்படிச் செய்யும்படி எந்த அதிகாரிகளும் கேட்கவுமில்லை. சிங்கள ஊழியர்களும், சிங்களத்தில் செய்ய முற்படவும் இல்லை.

இவருடைய இத்தகைய துரோகச் செயல்களால், வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும், 'எது வரினும் சிங்களம் படிப்பதில்லை' என்று திடசங்கற்பங் கொண்டிருக்கும் மற்றைய தன்மானத் தமிழ் ஊழியர்கள் சுதந்திரனிலே மேற்படி கட்டுரையைக் கண்டு, மேலும் வேதனைக்குள்ளானுர்கள்.

தமிழன்.
கொழும்பு

# நாட்டின் ஐக்கியமே மக்கள் விருப்பம்

## இணுவில் தமிழ்மன்றக் கூட்டம்


'அதிகாரத்தின் மூலம் பாடசாலைகளில் சிங்களத் திணிப்பை அமுல் செய்யலாம் என்று அரசாங்கம் எண்ணினுல் அது ஏமாற்றத்தின் எல்லைக்கே அரசாங்கத்தை அழைத்துச் சென்று விடும். அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கை மாட்டுவால் வளர்த்தி போல வளர்ந்து வருவதினுலேதான் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கத் தொடங்கி விட்டனர். நடைபெற்ற தேர்தல்கள் அனைத்தும் இதை நிரூபிக்கின்றன. அதே நேரத்தில் வட பகுதியில் தமிழரசுக் கட்சியின் பலம் குன்றிவிடாது மென்மேலும் வளர்ச்சியடைவதை வடபகுதி தேர்தல்கள் நிரூபித்து விட்டன. இலங்கையின் பெரும்பான்மை மக்கள் ஐக்கியத்தையே விரும்புகின்றுர்கள் என்பதை அரசாங்கம் உணராது கண் மூடிக்கொண்டே இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றது. பலரைப் பலகாலம் ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்தும் தேசியமயத்திலும் சிங்கள மயத்திலும் மூழ்கி தன் செல்வாக்கை அரசாங்கம் இழந்து கொண்டே போய் விட்டது.'

இவ்வாறு இணுவில் தமிழ் மன்றத்தின் புதுவருட முதல் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மன்றத் தலைவர் திரு. கே.எஸ். ஆனந்தன் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சனசமூக சமாஜ உப செயலாளர் சி. சண்முகலிங்கம், இணுவில் தமிழ் சினிமா ரசிகர் சங்கத் தலைவர் பெ. கனகசபாபதிப் பிள்ளை ஆகியோரும் பேசினர்.

உலகத் தமிழ் மன்றத்துடன் தொடர்பு கொண்டு இணுவில் தமிழ் மன்றத்தின் செயல் முறைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாயும் மன்ற நூல் நிலையத்தை மேலும் விஸ்தரிக்கப் போவதாகவும் மன்றத்தின் 1964ம் ஆண்டு திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மன்றச் செயலாளர் நடராசாவின் நன்றி அறிவிப்புடன் கூட்டம் முடிந்தது.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டின் சிறந்த தமிழ் நாடகம்?

## சிறந்த நடிகர், நடிகையர் தெரிவுக்கான போட்டி

**1963**ம் வருடத்தில் இலங்கையில் அரங்கேற்றப்பட்ட தமிழ் நாடகங்களில் சிறந்தவற்றிற்கும், சிறந்த நடிக நடிகையர்களுக்கும் ஏனைய நாடகத் துறைக் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்க "சுதந்திரன்" தீர்மானித்துள்ளது. தீர்ப்பளிக்கும் கைங்கரியத்தை இரசிகர்களிடமே ஒப்படைத்துள்ளோம்.

இலங்கையின் பல பாகங்களிலும் கடந்த வருடம் பல தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இந்நாடகங்களை ரசிகர்கள் எவ்வாறு மதிப்பிட்டுள்ளனர் என்பதையிட்டு அறிய ஓர் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளோம்.

நாம் அறிந்தவரையில் கொழும்பில்தான் அதிகமான தமிழ் நாடகங்கள் மேடையேறியுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, பதுளை, மன்னார், வவுனியா ஆகிய ஊர்களிலும் வேறு பல இடங்களிலும் நாடகங்கள் நடைபெற்றுள்ளன. சிறு தொகையான நாடகங்களே மேற்படி இடங்களில் நடைபெற்றிருப்பினும் கூட, அவற்றிலும் சிறந்த நாடகம், சிறந்த நடிக நடிகையர், சிறந்த தயாரிப்பாளர், சிறந்த வெளியீட்டாளர், சிறந்த கதாசிரியர் ஆகியோரைப் பொறுக்கி எடுக்கும் பணியினை ரசிகர்களுக்கு அளிக்க வேண்டிய நிலையிலுள்ளோம்.

கீழேயிருக்கும் கட்டத்தைப் பூர்த்தி செய்து ஒரு அஞ்சல் அட்டையின் பின்புறத்தில் ஒட்டி எமக்கு அனுப்பி வைக்க வேண்டியது. எந்த இடத்தில் நாடகம் நடைபெற்றதோ, அந்த இடத்தின் பெயரையும் குறிப்பிடுதல் அவசியம்.

கீழேயுள்ள கட்டத்தில் அனுப்பி வைக்கப்படாத எந்த விடையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

### பரிசுத் திட்டம்

இரசிகர்களிடம் இருந்து கிடைக்கும் விடைகளைக் கொண்டு புள்ளிகள் கணக்கிடப்பட்டே தகுதி கணிக்கப்படும், அதிகமான புள்ளிகளைப் பெறும் நடிகர்களுக்கும், நாடகங்கள் முதலியவற்றிற்கும் கவர்ச்சிகரமான பரிசுகள் "சுதந்திரன்" மூலம் வழங்கப்படும்.

ஏப்ரல் மாதத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கும் விசேட விழாவில் வைத்து மேற்படி பரிசுகள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

பரிசுக்குரிய விடைகளை அனுப்பி வைக்கும் இரசிகப் பெருமக்களுக்கும் பரிசுகள் உண்டு.

### முடிவு திகதி

விடைகள் 4-3-64 வரை ஏற்றுக் கொள்ளப்படும். முடிவுகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலேயே அறிவிக்கப்பட்டுவிடும்.

## நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்..................................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்..................................................

சிறந்த நடிகர்..................................................

சிறந்த நடிகை..................................................

சிறந்த நகைச்சுவையாளர்..................................................

சிறந்த கதாசிரியர்..................................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)..................................................

சிறந்த தயாரிப்பாளர்..................................................

சிறந்த வெளியீட்டாளர்..................................................

ஒப்பம்:..............................

முகவரி..............................

..............................

..............................

என் நினைவில்

## கலாபிமானி ராமேஸ்வரா

கே. பாலச்சந்திரன்

**கலை ஆர்வம் கொண்டு, யாருடைய கண்ணிலுமே தென்படாது இரகசியமாக கலைச் சேவைபுரிந்த கலா ரசிகர் திரு. ராமேஸ்வரா அண்மையில் மறைந்துவிட்டார். அவருடைய சேவையைப்பற்றி, பல வெற்றி நாடகங்களை மேடையேற்றிப் புகழ் பெற்றவரான திரு. கே. பாலச்சந்திரன் இச்சிறு கட்டுரை மூலம் வெளியிடுகிறார்.**

கொழும்பு நாடக உலகுக்கு அறிமுகமான கலை மேதை திரு. ராமேஸ்வரா அகால மரணமடைந்தது கேட்டு கலை உலகம் கண்ணீர் சிந்துகிறது. இலைமறை காய்போல் இருந்து கலைப் பணியினை யாருக்கும் தெரியாமல் புரிந்து வந்துள்ளார். அவர் மறைவு கொழும்பு தமிழ்க்கலை உலகிற்கு பெரியதொரு இழப்பாகும்.



திரு. ராமேஸ்வரா

அந்த இழப்பு, எம்மைப் பொறுத்தவரையில் மிகப் பெரியதாகும். அவரை ஒரு வழக்குரைஞர் என்ற கோதாவில பார்க்கிறவர்களுக்கு அவரது பிரிவு அளவிட்டுச் சொல்ல முடியாதது என்ருல், கலாபிமானி, கலா ரசிகர் என்ற வகையில் பார்க்கிறவர்களுக்கு சொல்லிலே அடங்காததாகும்.

சும்மா வெறுமனே ஓரிடத்தில் முடங்கிக் கொண்டிருந்த எம்மை, ஈழத்து நாடகமேடை சுண்டி இழுத்தது. இயன்றதைச் செய்துவிட்டு ஒதுங்கி விடலாம் என்று நுழைந்த என்னை "தமிழ் நாடக விழா" வகையாகப் பிடித்துக் கொண்டது, 1960ம் ஆண்டில். அன்று என் நினைவில்.........

லயனல்வெண்ட் தியேட்டரில் தமிழ் நாடக விழாவை, "பதியூர் ராணி", "அழாதே கண்ணே", "லண்டன் கந்தையா" ஆகிய நாடகங்களைக் கொண்டு ஐந்து நாட்கள் அரங்கேற்றிவிட்டு கடைசியில் எல்லா வகையிலும் கைநொடித்துப் போய் என்னைப் பார்த்தே, "அழாதே கண்ணே" என்று சகலரும் சொல்லக்கூடிய நிலைமையில் இருந்தபோது, ஒரு நாளில் நடந்த ஒரு நினைவு......

அந்த ஒரு நினைவு நமக்கு ராமேஸ்வரா அவர்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அவரைப் போன்று, எண்ணி இன்னும் நாலைந்து பேர் இருந்ததால் இந்தத் தமிழ் நாடகமேடை — ஏன், இந்தக் கலையுலகமும் சிறந்துவிடாதா என்று உளம் நெக்குருகிறேன்.

தமிழ் நாடக விழாவில் பண விஷயத்தில் நானடைந்த தோல்வியையும், கலை ரசிகர்களின் பராமுகத்தையும் குறிப்பிட்டு எனக்கு அனுதாபம் தெரிவித்து எழுதியிருந்தது ஒரு ஆங்கிலப் பத்திரிகை.

"கொழும்பு-7ல் தானே இத்தகைய உயர்ரக நாடகங்களைப் போட்டார்கள்? கலைக்காவலர்கள் என்று [illegible] கொழும்பு-7 சீமான்கள் அப்

(13-ம் பக்கம் பார்க்க)

## 1963-ல் இலங்கையில் வெளியான தமிழ் படங்கள்

கடந்த வருடம் இலங்கையில் வெளியாகிய தமிழ்த் திரைப் படங்களில் பல நல்ல வெற்றியீட்டியுள்ளன. தமிழகத்தில் வெற்றிக் கொடி நாட்டிய படங்கள் சில இலங்கையில் எதிர்பார்த்த அளவு சிறப்பளிக்க முடியாது போய் விட்டது என்பது என்னவோ உண்மைதான்.

இலங்கை ரசிகர்களைப் பொறுத்த வரையில் தமிழ் பேசும் மக்கள் மட்டும் தமிழ் படங்களுக்கு ஆதரவு அளிப்பதில்லை. அடி பிடி சண்டைக் காட்சிகளைக் கொண்டே இலங்கையின் படங்களின் வசூல் நிர்ணயிக்கப்படுகிறது. இவற்றை சிங்கள ரசிகர்களும் பெரிதும் விரும்பிப் பார்த்து ரசிக்கிறார்கள். அதே சமயத்தில் நல்ல கருத்துப் பொதிந்த படங்களுக்கும் ஆதரவு கிடைக்காமலில்லை.

அன்னை, ஆலயமணி, நெஞ்சில் ஓர் ஆலயம், கப்பலோட்டிய தமிழன், கொஞ்சும் சலங்கை, மணிஓசை, பொலீஸ்காரன் மகள், தாயில்லாப் பிள்ளை, சுமைதாங்கி, பாத காணிக்கை ஆகிய சிறந்த கருத்து படங்கள் கடந்த வருடம் இலங்கை மக்களைக் கவர்ந்தன. மேற்படி படங்கள் தமிழகத்திலும் தனிச் சிறப்புடன் ஓடின. ஆனால் இங்கு இவற்றில் சில படங்களே வெற்றியீட்டியுள்ளன.

இவற்றைவிட தாயைக் காத்த தனயன், வீரத் திருமகன், பணத் தோட்டம், ஆகிய படங்கள் நல்ல வசூலைக் கொடுத்திருக்கின்றன. இதற்குக் காரணமாக அமைந்தவை படங்களில் காணப்பட்ட அடிபிடி சண்டை முதலிய காட்சிகளே. சிறந்த வசனம் பாடல்கள் முதலியவற்றிற்கு அவ்வளவு தூரம் இன்று மதிப்பு இருப்பதாகவும் கருத முடியாது. கருத்தைப் பற்றியும் பெரும் பாலான ரசிகர்கள் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. சலசல்பையே தான் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது புலனாகிறது.

கதை அமைப்பு, நடிப்புத் திறன், கலை உத்தி முதலியவற்றில் சிறந்து விளங்கிய பல படங்களையும் மக்கள் வரவேற்கத் தவறவில்லை. இவை அனைத்தும் சிறப்புற விளங்கியிருந்தும் கூட, நட்சத்திரப் 'பொலிவு' இல்லாத காரணத்தினால் பல படங்கள் வெற்றியளிக்கவில்லை.

### தோட்டக் காரி

கடந்த வருடம் இலங்கைத் தமிழ் திரை உலகத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. இலங்கையில் முதன் முதலாக இலங்கையர்களாலேயே தயாரிக்கப்பட்ட 'தோட்டக் காரி' திரையிடப்பட்டது. வசூலைப் பொறுத்த வரையிலும், கலை அம்சத்திலும் சிறப்புற விளங்காவிட்டாலும் நல்ல முறையில் திரையிடப்பட்ட முதல் படமாகையினால் எப்படியோ சரித்திர முக்கியத்துவம் பெற்று விட்டது.

இலங்கை சினிமா ரசிகர்களுக்கு திரைப்படவிருந்தளிக்கும் சிலோன் தியேட்டர்ஸ், சினிமாஸ் லிமிட்டட், சிலோன் என்டர் டெயின்மென்ட்ஸ், ஒடியன் ஆகிய நிறுவனங்கள் நல்ல படைப்புக்களை அளித்துள்ளன. தமிழகத்தில் வெளியாகும்

(13-ம் பக்கம் பார்க்க)

## 1963ல் நடந்த தமிழ் நாடகங்கள்

1963ம் ஆண்டில் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் மேடையேற்றப்பட்ட தமிழ் நாடகங்களின் விபரங்களை விளம்பரத்தாள்களுடன் எமக்கு அனுப்பி வைக்கும்படி நாடகத் தயாரிப்பாளர்களை வேண்டுகிறோம். நாடகத்தின் பெயர், தயாரிப்பு நிறுவனம், அரங்கேற்றப்பட்ட காலம் முதலிய விபரங்களையும் அனுப்பிவையுங்கள்.

முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
த. பெ. இலக்கம் 1183,
கொழும்பு-12.



நெப்டியூன் ஸ்ருடியோவில் நடைபெற்ற 'தெய்வத் தாய்' படப்பிடிப்பு ஆரம்ப விழாவுக்கு வருகை தந்த திரு. ஏ. வி. மெய்யப்பனை புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அகமும் முகமும் மலர வரவேற்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகப்படுத்துகிறோம் (6)

## கலை ஆர்வம் மிக்க இளம் நடிகர்



### த. தங்கராசா.

மட்டக்களப்பு தெற்கில் கல்முனைக்கு அருகாமையிலுள்ள பாண்டிருப்பு என்னும் பழம் பதியை பிறப்பிடமாகக் கொண்ட திரு. த. தங்கராசா நல்ல முக வெட்டும், சிறந்த நடிப்புத் திறனும் கொண்ட இளம் கலைஞர். திரு. தம்பியப்பா திருமதி நல்லம்மா தம்பதிகளுக்கு இளைய மகனாகப் பிறந்த திரு. தம்பிராசா கல்விப் பொதுத் தராதர வகுப்பு வரை படித்திருக்கிறார்.

சிறுவயதிலேயே நடிப்புத் துறையில் அமோக ஆசையுடைய இவர், பள்ளியில் பயிலும் போதே பள்ளிக்கூட நாடகங்களிலும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு பலரின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றவர். தமது கலை ஆர்வத்துக்கு மூலகாரணமாயிருந்தவை பள்ளிக்கூடக் கலை நிகழ்ச்சிகளும், அதனால் ஏற்பட்ட புகழுமே என்பதை திரு. தங்கராசா வெளியிடுகிறார். திறமை வாய்ந்த நடிகர் என்று பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றதனால் கலை வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர், மேலும் புகழைச் சம்பாதிக்கவே விருப்பங்கொண்டுழைத்துவருகிறார். சிறந்த நடிகனாகவேண்டுமென்ற அவாவினால் பள்ளிப் படிப்புக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, முழுநேர நடிகனாக முயன்றுவருகிறார்.

மக்களுக்கு வேண்டிய நற்கருத்துக்களை நகைச்சுவையுடன் சேர்த்து இலவசமாக வளங்கினால் பெரு மதிப்பு ஏற்படுவதுடன் மக்களுக்கு நன்மையும் பெரிதும் ஏற்படும் என்ற கருத்துடன், கிராமத்து இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சக்தி நாடக மன்றத்தை உருவாக்கினர். இம் மன்றத்துக்கு இளங் கலைப் பட்டதாரியான திரு. ஸ்டீபன் தலைமை தாங்கி வழி காட்டினார். நாடகக் கலையில் பல துறை அம்சங்களையும் சிறப்பிக்கக் கூடிய வல்லுனரான திரு. ஸ்டீபன் திரு. தங்கராசாவின் கலைத் துறை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தார்.

'அனாதை', 'மன்னிப்பு' ஆகிய இரு நகைச் சுவை நாடகங்களையும் தானாகவே எழுதித் தயாரித்து வெற்றி கண்டவர் திரு. தங்கராசா. பலரின் வேண்டுகோளுக்கிணங்க திரு ஸ்டீபன் முன்னின்று 'இலங்கையர்கோன் இராவணேஸ்வரன்' என்ற நாடகத்தைத் தயாரித்தார். இராமன் வேடத்தில் திரு. தங்கராரா தோன்றினார். கட்டணம் அறவிட்டு அரங்கேற்றப்பட்ட இந்நாடகம் மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றதுடன் நல்ல வருமானத்தையும் அளித்து வெற்றியைக் கொடுத்தது.

இலங்கையில் தயாரிக்கப்பட்டு வெளியான முகல் படமான 'தோட்டக்காரி'யிலும் சிறிய பாகம் அளிக்கப்பட்டது இவருக்கு. மென் மேலும் நடிப்புக் கலையில் மேன்மையுற பேரார்வம் கொண்டுள்ள இவ் விளம் கவிஞரை அறிமுகப்படுத்தி வைக்கிறோம்.

# கலாபிமானி...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

போது தூங்கிக் கிடந்தார்களா?'' என்று ஒரு கேள்வியையும் கேட்டுவிட்டுப் பத்திரிகை மௌனமாகி விட்டது!

கொழும்பு ஏழின் நடுமத்தியில் இருந்தவாறு சகலதையும் கேட்டு, புரிந்து, ரசித்துக் கொண்டிருந்த திரு. ராமேஸ்வரா அவர்களுக்கு இது தூக்கிவாரிப் போட்டிருக்க வேண்டும். "கலை ஆர்வமிருந்த இளைஞரே! தங்களார்வம் வளரட்டும். கொழும்பு ஏழு பெருமான்கள் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்களில் வெகு சிலரும் நாடகங்களைக் கண்டு களித்தார்கள். தங்கள் அளவிட முடியாத பண நஷ்டம் என்னைத் துன்பத்திலாழ்த்துகிறது. ஏதோ என்னுலியன்ற ரூ. 100/- காசோலையாக வைத்திருக்கிறேன். இது தங்கள் நாடக ஆர்வத்தைத் தடைபடுத்தாமல் மென்மேலும் ஊக்குவிக்க உதவினால் நல்லது.''

மெய்சிலிர்க்க வைத்த கடிதமும் காசோலையும் என் கண்களைக் கண்ணீரால் நிறைத்தது, அப்போது. இப்போதும் அப்படியே.

சாதாரணமாக கேலி பேசப்படுகின்ற கொழும்புப் பிரமுகர்களில் இப்படியும் ஒருவர் இருந்துவிட்டு, என்னையும் ஊக்குவித்து இன்று திடீரென்று மறைந்தும் விட்டார்.

நாடக விழாவில் நானடைந்த அனுபவத்தால் மீண்டும் தலைதூக்க முடியுமா என்றிருந்த எனக்கு, ராமேஸ்வரா அவர்கள் தான் புத்துயிர் காட்டியவர். இல்லையெனில் அடுத்தடுத்து நானளித்த பல நாடகங்களும், இப்போது நானளிக்கவிருக்கும் "சாணக்கியன்'' நாடகமும் மேடைக்கு வந்திருக்க முடியாது. என்னுடைய ஆர்வமும் எழுச்சி பெற்றிருக்க முடியாது.

ராமேஸ்வரா அவர்களின் தயாளத்தைப் பல கோணங்களில் நின்றும் பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் என் வகையில், கலைத்தாய்க்கு அவரின் அஞ்சலி அளவிட முடியாதது என்றே சொல்வேன்.

கலை இருக்குமட்டும் ராமேஸ்வரா வாழ்வார். அவரின் அடிச்சுவட்டில் இன்னும் பலர் வாழ்வார்கள்.

# 1963-ல்.....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

படங்கள் காலம் கடந்து இலங்கையில் திரையிடப்படுவதால் எமது கருத்துக்களைக் கூறமுடியாத சூழ்நிலை உருவாகிவிடுகிறது. அதுமட்டுமல்லாமல் படங்களில் அவ்வப்போது காணப்படும் கருத்துக்கள் காலத்தால், சூழ்நிலையால் சுவை யற்றுப்போய் விடுகின்றன.

இலங்கையிலும் படங்களை உடனுக்குடன் திரையிடுமாறு இன்றையச் சூழ்நிலையில் சம்பந்தப்பட்டவர்களை வேண்ட முடியாதிருக்கின்றது. புத்தாண்டில் புதிய நல்விருந்துகள் இலங்கை தமிழ்ப்பட ரசிகர்களுக்குக் கிடைக்கும் என்று எண்ணுகிறோம்.

# வீழ்ந்துழன்ற தொழிலாளர்கள்........

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் எழுதி வெளியிட்ட ஐயர், "அழகிய இலங்கை'' 'கதிர்காமம்'' என்னும் நூல்களையும் எழுதி தமிழ் இனத்தவரின் பெருமைக்கு வழி செய்தார்.

இவை தவிர, பல சிறிய அச்சகங்களின் ஆரம்பக் கர்த்தாவாகவும், ஐயர் இருந்திருக்கிறார்.

ஆனந்தா கார்ப்ரேஷன், 'வீரகேசரி' பத்திரிகை ஸ்தாபகர் திரு. பி. பி. ஆர். சுப்ரமணியம் செட்டியார் முதலியவர்களுக்கு உடனிருந்து ஒத்துழைப்பு ஈந்திருக்கிறார். 'வீரகேசரி' பத்திரிகையில் முதலாவது தலையங்கம் எழுதியவரும் நடேசையரே.

### தேசபக்தன்

தினகரன் பத்திரிகை வளர்ச்சிக்கும், ஐயரின் உதவிகள் உபயோகப்பட்டுள்ளன. தினகரனிலும் ஆசிரியராக அவர் சேவை செய்தார்.

ஐயர் தமது சொந்தத்தில் நடத்திய 'தேசபக்தன்' சுதந்திரக் கனலை மூட்டுவதாகவும், விடுதலை இயக்கச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு மக்களை ஊக்குவதாகவுமிருந்தது.

இதில் திரு. எச். நெல்லையாவும் சிலகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

ஐயரவர்கள் மலையகத்தில் தொழிற் சங்கம் ஆரம்பித்த பின் "தொழிலாளி''என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையையும் எழுதி வெளியிட்டதுடன், தோட்ட முதலாளிகளின் ஆணவம் அடங்கும் வாறு "தோட்ட முதலாளிகள் ராஜ்யம்'' என்ற ஆங்கில நூலையும் எழுதினார்.

### பாராளுமன்றத்தில் மலையகப் பிரதிநிதி

மலையக மக்களுக்காக "அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்'' என்ற தொழிற் சங்கத்தை முதலாவதாக இலங்கையில் தொடங்கிய இவர் 1934ல் மலையக மக்களின் முதலாவது பிரதிநிதியாக இலங்கை சட்ட நிருவன சபைக்கும், இலங்கை தேசிய சபைக்கும் பெரும்பாலான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்ட நிருவனப் பிரதிநிதியாக இருந்தபோது மலையகத் தொழிலாளர்களுக்கு இன்னல் விளைவித்த "ஒப்பந்தக் கூலி முறை''யை ஒழிக்க மாபெரும் போராட்டமே நடத்தி வெற்றி பெற்றார்.

இந்தப் போராட்டத்தின் பின்னரே தோட்ட முதலாளிகள் தமது அடக்கு முறைகளைச் சிறிது சிறிதாகக் கைவிடத் தொடங்கினர்.

திரு. நடேசையர் அவர்கள் தனித் தலைவராக மக்களின் புதுமைச் சிற்பியாக இருபத்தாறு ஆண்டுகள் அயராது உழைத்தார். இலங்கைத் தேசிய சபையிலும், சட்ட நிருவன சபையிலும் தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகள் மலையக மக்களின் பிரதிநிதியாக விளங்கினார் என்றால் அவரது மாண்பு விண்ணுயர்ந்து விளங்கியது என்பதையே குறிக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் ஐயரவர்களை வாழ்வளித்த வள்ளலாகவே கருதினர். ஐயரவர்களின் அரசியல் சாணக்கியம் அவரது வெற்றிகளுக்கு மிகவும் உதவின. தொழிலாளர்களின் சேமத்திற்காக கங்காணி [illegible] அதற்காக அகில இலங்கை கங்காணிகள் சங்கத்தை உருவாக்கத் தூண்டினார். கங்காணிகளின் ஒத்துழைப்பையும் பெற்றார், தொழிலாளரின் இன்னல் அகல வழியும் கண்டார். இவரது முயற்சியாலேயே திரு. எஸ். பி. வைத்திலிங்கம் தேசிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் சில காலத்தின் பின் திரு. வைத்திலிங்கமும், நடேசையரும் ஒருவருக்கொருவர் பிரிந்து நிற்க நேரிட்டது.

### தொழிலாளருக்குச் செய்த சேவை

தோட்டத் தொழிலாளரின் சேமத்திற்கும், பாதுகாப்பிற்கும் இவர் அரியபல சேவைகளைச் செய்தார். வயோதிபர்களுக்கும், வேலை செய்யமுடியாத நிலையடைந்தவர்களுக்கும் தோட்ட முதலாளிகள் உதவிப் பணம் கொடுக்கவும், இடவசதிகள் கொடுக்கவும் வற்புறுத்தி வெற்றி கண்டார்.

இலங்கையிலிருந்து இந்தியா செல்ல விரும்பும் தொழிலாளர்களுக்கு இலவசப் பயணக் கட்டளை வழங்க வேண்டுமென்பதிலும் அவர் சாதனை வெற்றி பெற்றது. ஐயரவர்கள் மதத்துவேஷத்தையும் வெறுத்தார். சட்ட நிருவன சபையில் இருந்த போது வருமான வரிச்சட்டத்தை அறிமுகப் படுத்தியவரும் அவரே.

திரு. நடேசையர் இந்து தர்மத்தின் சிறப்பிற்காகப் போராடினார். இவரது சேவைகள் அளப்பரியனவாகவே உள்ளன. ஐயரின் முதல் மனைவியார் திருமதி கோதைநாயகி அம்மையார் காலமானதன் பின் உடுமலை முத்துச் சாமிக் கவிராயரின் பேத்தி திருமதி மீனாட்சியம்மையை மணமுடித்தார். மீனாட்சியம்மையும், நடேசையரும் பல பிரச்சாரக் கூட்டங்களில் சொற்பொழிவுகள் நடத்தியுள்ளனர். மீனாட்சியம்மை சிறந்த பாடகியாகவும் விளங்கினார்.

1940ல் திரு. நடேசையர் திரு. பெரியசுந்தரத்துடன் அட்டன் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தோட்ட முதலாளிகள் நடேசையரின் முன் தலை கவிழ்ந்து நின்றனர். ஐயரின் பொதுச் சேவைகளைக் கண்டு அவருக்கு மரியாதைகள் செய்தனர்.

திரு. நடேசையர் தீவிரமான பேச்சாளர். சட்ட நிருவனசபையில் அவர்நிகழ்த்தியுள்ள வாதங்களில் எளிமையும், பழமொழி உபமானங்களும் நிறைந்திருக்கும். இவர் 1947ல் மஸ்கெலியா தொகுதியில் திரு. மோத்தாவுடன் போட்டியிட்டபின், மீண்டும் எழுத்துலகிலே ஈடுபட்டார்.

'வீரன்' என்ற தினப்பத்திரிகையை நடத்தினார்.

1947ல் 'சுதந்திரன்' தினப் பத்திரிகை ஆரம்பக் கர்த்தாக்களுடன் சேர்ந்து அந்தப் பத்திரிகையில் ஆசிரியராகத் தமது இறுதிக் காலம் வரை பணி புரிந்தார்.

'சுதந்திரன்' பத்திரிகையில் அவர் எழுதிய முதலாவது தலையங்கம் 'நாம்'என்ற மகுடத்துடன் வெளி வந்தது.

திரு. நடேசையர் தமது இறுதிக் காலத்திலும் மலையக மக்களின் எதிர்காலத்தில் அக்கறை மிக்கவராகவே இருந்தார். அவர்களை உண்மையுடன் அழைத்துச் செல்லக் கூடிய தலைவர்கள் உருவாக வில்லையே என்று கவலைப்பட்டார்.

எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், தொழிற் சங்கத்தலைவராகவும், தேசிய சபைப் பிரதிநிதியாகவும், சட்ட நிருவன சபை அங்கத்தவராகவும், மலையக மக்களின் விடுதலை வீரராகவும் திகழ்ந்த திரு. நடேசையர் நோய் வாய்ப்பட்டு 1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ந் திகதி அமரரானார்.

நடேசையரின் மறைவு மலையக மக்களுக்கும், தமிழினத்திற்கும் ஏற்பட்ட மாபெரும் நஷ்டம்.

இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இந்த நாளில் தொழிலாளர் தலைவராக இருக்கவில்லை, என்ற பெருமை மலையக மக்களுக்குண்டு.

ஐயரவர்கள் ஆற்றிய சேவைகளை இக்கால மலையகத் தலைவர்களின் செயல்களுடன் ஒப்பிட்டு நோக்குவோமானால், திரு. நடேசையர் ஒருவரே மலையக மக்களின் உரிமைகளுக்காகத் துணிந்து பலனுள்ள காரியங்களை மலையக மக்களுக்காகச் சாதித்தார் என்பது புலப்படும்.

இன்றைய சூழ்நிலையில் நடேசையர் போன்ற அறிஞர்கள் இருப்பாரேயானால் மலையக மக்கள் ஒருசிலரை ஒப்பந்தக் கூலிகளைப்போல நாடுகடத்தும் திட்டங்களை எதிர்த்துப்பெரும் போராட்டமே நடத்தியிருப்பார். அல்லது பத்து இலட்சம் மலையக மக்களும் இலங்கையையோ அல்லது இந்தியாவையோ தாயகமாக ஆக்கிக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பார். உரிமைகளுடன் தலைநிமிர்ந்து தமிழினம் வாழ நியாயமான போராட்டங்களுக்குப்பேராதரவு அளித்திருப்பார். மலையக மக்களுக்கு இரண்டும் கெட்ட நிலை ஏற்படா வண்ணம் ஆவன செய்திருப்பார்.

### தமிழரசுத் தந்தை கருத்து

இத்தகைய அரிய பண்புகளால் செயற்கரிய பெருஞ் செயல்களைச் சாதித்த அமரர் நடேசைய்யர் அவர்களை மலையக மக்கள் காலத்திற்குக் காலம் நினைவு கூர்ந்து அநீதியான சட்டங்களை எதிர்த்துப் போராடி வெற்றிகாண முன்வரவேண்டும். இது தவிர, இந்தப் பழம் பெரும் எழுத்தாளரைப் பத்திரிகைகளும் நினைவு கூருதல் சிறப்பாகும்.

இவ்வாரம், நான், தமிழினத்தின் துன்பங்களைத் துடைத்துவரும் நமது மதிப்பிற்குரிய அண்ணல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களிடம் ஐயரவர்களைப் பற்றிய அபிப்பிராயம் கேட்டபோது "திரு. நடேசையர் திறமை மிக்க எழுத்தாளர்; சொல்பவைகளை அப்பட்டமாகவும் கண்டிப்பாகவும் சில சமயம் நையாண்டியாகவும் சொல்வதில் சமர்த்தர், சாதனைகளிலும் அப்படியே'' என்று கூறினார்.

# 3000 தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு எதிராக எடுக்கப்படுகின்றன என்று செய்திகள் கிடைத்துள்ளன.

மலையகத்தில் தமிழ்ப் பிள்ளைகளுக்கெதிராக எடுக்கப்படும் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்த அனுமதித்தால், தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலம் இருளடைந்து விடுமென்பதில் ஐயமில்லை.

ஆகவே மலையக மக்கள் ஒன்று கூடி இந்த அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்ச்சி மலையகத்தில் தோன்றியுள்ளது.

அந்த உணர்ச்சியை ஒருமுகப்படுத்திச் செயல்படுத்த வேண்டியது தலைவர்களினதும், ஸ்தாபனங்களினதும் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'புதுமைத் திருடன்' பரிசுப் போட்டி

## பாராட்டுப் பெற்ற கட்டுரைகள்

### (1)

அந்தோ! பயங்கர இருள் சூழ்ந்த நடு ராத்திரி நேரம். இடியும் மின்னலும் ஏற்பட்ட அந்த அகால வேளையில் மனித நடமாட்டம் அற்ற சுடுகாட்டுப் பாதையில் இரு இளைஞர்கள் சென்று கொண்டிருக்கின்றனர். ஒருவன் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். மற்றவன் தோளில் பிரயாணப் பை தொங்கியது. இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டுச் செல்கின்றனர். அப்போது......

சுடுகாட்டில் எரிந்து கொண்டிருந்த பிரேதத்தைப் பார்த்த மூக்குக் கண்ணாடி இளைஞனுக்கு ஏதோ நினைவு தோன்றியது. திடீரென்று பேயைப் பற்றிப் பிரலாபிக்கின்றான். மற்றவன் தான் அதற்குப் பயம் இல்லாதவன் போன்று கதையளக்கின்றான். திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. ஒரே இருள்! இளைஞர்கள் ஒருவாறு தட்டுத் தடுமாறி அங்கே இருந்த ஓர் இடிந்த கட்டிடத்திற்குள் செல்கின்றனர். மீண்டும் பேயைப்பற்றிப் பேசுகின்றனர். அந்தப் பாழ் மண்டபத்தில் முன்பு ஏற்பட்ட ஓர் பயங்கர நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி, "வெள்ளிக்கிழமைகளில் இங்கே ஒருவரும் வருவதில்லை. இன்றும் வெள்ளிக்கிழமை தான்" என்று கூறும் சமயத்தில், எங்கிருந்தோ ஒரு நரியின் ஊளைச் சத்தம் கேட்கின்றது. இளைஞர்கள் நடுங்குகின்றனர். அப்பொழுது ......நேரம் இரண்டு மணி. அங்கே யாரோ அனுங்கும் சத்தமும், பயங்கரமாகச் சிரிக்கும் சத்தமும் கேட்கின்றது. ஒரே அலறல் ஒலி—இளைஞர்கள் சிலையாகின்றனர். அப்போது...... ஒரு விபரிக்க இயலாத, அஞ்சத்தக்க ஓர் இராட்சத உருவம் வாயைப் பிளந்தவாறு தலையை மேலும் கீழும் ஆட்டியபடி இவர்களை நோக்கி வருகிறது.

இளைஞர்கள் என்ன ஆனார்கள்? உண்மையில் அது பிசாசா? பேய் கண்ணுக்கு இப்படித் தோன்றுமா? என் மனம் பரபரப்படைந்தது. நினைக்க அஞ்சத்தக்க, பயங்கர—ஆனால் பரபரப் பூட்டிய கட்டம் இதுதான்.

தி. மதுரம்,
அளவெட்டி.

### (2)

அன்று வெள்ளிக் கிழமை; இரவு 12 மணி; சுடலை பாழ் மண்டபத்தில் இரு இளைஞர்கள் மழைக்கு ஒதுங்கி நின்றார்கள். அந்நேரத்தில் ஓர் இராட்சத உருவம் தோன்றி ஓர் இளைஞனைக் கொலை செய்தது. மற்ற இளைஞன் மழையையும் பொருட்படுத்தாது ஓட்டமெடுத்தான். அடுத்த நாள் கொலையுண்டவனைப் பற்றியே எங்கும் பேச்சாக இருந்தது.

அன்று இரவு 12 மணி; எங்கும் ஒரே கும்மிருட்டு. இடியும் மின்னலும் மழையுமாக இருந்தது. அவ்வேளை மண்டபத்திற்குச் சற்றுத் தூரத்தில் காரொன்று ஓசைப்படாமல் நின்றது. அதிலிருந்து ஒரு முகமூடி அணிந்த உருவம் இறங்கி வந்து மண்டபத்திற்குள் நுழைந்து, ஆடாமல் அசையாமல் நின்றது. அதே நேரத்தில் இருகார்களில் பல உருவங்கள் தோன்றி மண்டபத்தின் பக்கலிலுள்ள பற்றைக்குள் பதுங்கின. சில விநாடியின் பின் மண்டபத்தின் ஒரு மூலையில் மயிர்க் கூச்செறியும் பயங்கரச் சிரிப்பொலி எழுந்தது. அந்த விநாடி மின்விளக்கொளி சிரிப்பொலிப் பக்கம் வீசியது. மறு நிமிடம் முகமூடியின் துப்பாக்கி டுமீல்! டுமீல்!! என்று, உறுமியது. அவ்வளவுதான்; சிரிப்பொலி அடங்கி 'ஐயோ அம்மா!' என்று அலறும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு மூலையில் இருந்து மின்னல் வேகத்தில் முகமூடியை நோக்கி துப்பாக்கிக் குண்டுகள் பறந்தன. முகமூடி தனது புத்தி கூர்மையினால் உடனே நிலத்தில் வீழ்ந்தது. ஒரு கணப் பொழுதில் பற்றைக்குள் இருந்து துப்பாக்கிக் குண்டுகள் வெளிவந்து முகமூடியைத் தாக்கிய உருவத்தின் கைகளை முத்தமிட்டன. அவனும் அலறியபடி நிலத்தில் வீழ்ந்தான்.

சற்று நேரத்தில் சுடலை அல்லோல கல்லோலப்பட்டது. நிலத்தில் படுத்திருந்த முகமூடி உருவம் முகமூடியை அகற்றியபடி முகத்தில் வெற்றிப் புன்னகை தவழ எழுந்தது.

செல்வி ஜெயராணி
சபாபதிப்பிள்ளை,
மல்லாகம்.

### (3)

வாடகைக்காரை அடித்துக் கொண்டு கிளம்பிய கறுப்புக் கண்ணாடிக்கு இருப்புக் கொள்ளவில்லை. வண்டியின் விசையை அதிகரிக்கும் கருவியை காலால் முழுமையும் அமுக்குகிறான். அசுர வேகத்தில் பறந்தது வண்டி. இந்த நேரத்தில், சந்தியில் பொலீஸ் இன்ஸ்பெக்டர்! தப்பவே வழி இல்லை. ஆதாலால்தான் இளைஞன் பயத்துடன் நிறுத்தினான் வண்டியை. வீதியின் இந்தப் பக்கம் திருப்பலாம் என்றால் ஓர் வண்டி; அந்தப் பக்கம் திருப்பலாம் என்றால் மோட்டார் வந்த வேகத்தில் குடை சரிந்து விடும். இளைஞனுக்கே ஆபத்து. எனவே, கதையே முடிந்துவிடும். ஆசிரியருக்கு ஓர் சந்தர்ப்பம் கொடுக்க, இளைஞன் காரை நிறுத்தினான். இல்லாவிட்டால் இன்ஸ்பெக்டருக்கே சந்தேகம் எழுந்து விடும். அதன் நிமித்தம் கூடிய சீக்கிரம் இளைஞன் அகப்பட்டுக் கொள்ளுவான். இளைஞனுக்கு ஓர் துணிவு காற்சட்டைப் பையில் சுழல் துப்பாக்கி உண்டு என்று. இன்ஸ்பெக்டர் ஏதாவது கலாட்டா செய்தால், இடைவழியில் அவரைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்ற தென்பு. ஆனால் உடம்பு இதை நம்பினால்தானே? அவயங்கள் ஆட்டம் போடத் தொடங்கின...தேகம் வியர்த்துக் கொட்டியது. போதாததற்கு இன்ஸ்பெக்டரின் சிரிப்பு வேறு! இளைஞனுக்கு அவனது மார்புத் துடிப்புச் சத்தம் அவனை யாரோ துரத்தி வருவது போன்ற பிரமையை உண்டாக்கியது. பொலீஸ் நிலையத்தை அடைந்ததும் இன்ஸ்பெக்டர் தேநீர் அருந்த அழைத்தது, பலி பீடத்துக்கு மேளதாளத்துடன் அழைத்துச் செல்லும் ஆட்டுக் கடாவை நினைவுறுத்தியது. இளைஞன் மனம், தப்புவதற்குத் தீவிரமாகத் திட்டம் தீட்டியது. சந்தர்ப்பமும் வரவேண்டுமே! இந்த நேரத்தில் தான் இன்ஸ்பெக்டரும் பணியாளும் சைகை மூலம் பேசினர். இளைஞனுக்கும் முரட்டுத் தைரியம். 'நடப்பது நடக்கட்டும்' என்று இருந்தான். தேனீரோடு அந்தக் கண்டம் முடிந்தது. தொலை பேசிச் செய்தி காதில் பாலை வார்த்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினான். அப்போது தான் இளைஞனுக்கு இன்ஸ்பெக்டர் ஓர் ஏமாளி என்பது புரிந்தது. அவர் ஏறி வந்த அந்தக் காரின் இலக்கத்தை அவர் கவனியாததுதான்!

சி. செல்வரதி,
சங்குவேலி.

(சென்ற வாரக் கேள்விகளுக்கு இதோ விடை)

## சிந்தியுங்கள்!

1 கண்புருவம் வியர்வையைக் கண்ணுக்குள் செல்லாமல் தடுக்கிறது. கண்ணிமை கண்ணைப் பாதுகாப்பதோடு, கண்ணை மூடி மூடி அகற்று ஓய்வு கொடுக்கின்றது.

2. பொஸ்பரஸ் என்னும் ஒளி தரும் பொருள் இருப்பதால்.

3. பனா, அத்தி, ஆல்.

4. அலெக்சாந்தர் கிராம் பெல் என்பவரால்.

5. ஆடை வெண்மை யாகலாலும், அது நீரிலும் பாரம் குறைந்ததாலும்.

6. டாக்டர் வில்லியம் ஹார்வி.

7. மார்க்கோனி என்னும் இத்தாலியர்.

8. கலிலியோ.

9. வெப்ப நிலை மாறுவதாலும் பாக்டீரியா என்னும் [illegible]

[illegible] அனுப்பியவர்:

[illegible] கோண்டாவில்.

# புனித ரமழான்

(எழுதுபவர்: ஏ. ஆர். எப்.)

இஸ்லாமிய சன்மார்க்கத்தின் நான்காவது கடமை நோன்பு. மனிதனின் ஆத்மீக வளர்ச்சியை உண்டு பண்ணத்தக்க இக்கடமை புனித ரமழானில் நிறைவேற்றப்படுவதாகும். உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் தோன்றக் கூடிய உள்ளத்தைப் பெற்றவன் மனிதன். அவனுடைய உள்ளத்திலே பற்பல எண்ணங்கள் பிறக்கின்றன. அநேக ஆசைகள் ஊறுகின்றன. எத்தனையோ விதமான உணர்ச்சிகள் எழும்புகின்றன. சில வேளை இவை மோசமாகத் தோன்றும்; வேறு சிலவேளை இவை நல்லதாகத் தெரியும். மனிதன் தனது ஆத்மீக அபிலாஷைகளைச் செப்பனிட்டுச் சீராக்கும்பொருட்டே நோன்பை இறைவன் நமக்குக் கடமையாக்கினான்.

நோன்பு அனுசரிக்கும் ஒருவன், ஒரு மாதகாலம், பகல் முழுதும் பசித்திருப்பான். இவ்வாறு அவன் பசித்திருப்பது, அவனைக் கட்டுப்படுத்திக்கொள்ள உதவுகிறது. கட்டுப்பாடும், ஒழுக்கமுமற்ற மனித வாழ்வு பிரயோசனம் அற்றதாக மாறிவிடுகிறது. எனவேதான், சிறந்த கட்டுப்பாட்டைப் போதிக்கும் நோன்பை நாம் போற்றுகின்றோம். அத்தகைய நோன்பைத் தாங்கி வரும் புனித ரமழானை நாம் வரவேற்கின்றோம். நோன்பு அனுசரிக்கும் பல சந்தர்ப்பங்களில் கட்டுக் கடங்காத தன் உணர்ச்சிகளைக் கூடக் கட்டுப்படுத்திக் கொள்ள ஒருவன் கடமைபட்டுள்ளான். அவ்வாறு செய்வதற்காகவே, நோன்பு அனுசரித்துப் பழகுகிறான்.

எனவே, நோன்பு மனிதனின் பல ஆத்மீக நோய்களுக்கு மருந்தாக இருக்கின்றது. பொறுமையற்றவன், பொறுமையைப் பெறுகிறான். பக்தியற்றவன் பக்தியை அடைகிறான். பசிக்கொடுமை அறியாதவன், அதனை உணர்ந்துகொள்கிறான். இரக்கமற்ற உள்ளத்திலே, கருணை வழிந்தோட வழிபிறக்கின்றது. இத்தனையும் நோன்பு நோற்கும் ஒருவன் அடையும் பயன்களாகும்.

நோன்பின் பலனை விளக்கி இறைவன் தனது திருமறையில் பல இடங்களில் கூறியிருக்கிறான். அவையனைத்தையும், இவ்விடத்தில் கூற முடியாது போயினும், ஒரு வசனத்தையாவது எடுத்துக் காட்டாகத் தருவது பொருத்தமாக இருக்கும்: "விசுவாசிகளே! பயபக்தியை வளர்த்து உங்களைத் தற்பாது காத்துக் கொள்ளுங்கள். அதன் பொருட்டே, நோன்பு உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது" என்று இறைவன் திருகுர்ஆனில் கூறியிருக்கின்றான்.

இத்தகைய அருளுக்குரிய நோன்பு நம்மை எதிர் நோக்கி வந்துள்ளது. புனித ரமழானில் நாம் செய்ய வேண்டிய இக் கடமையை நல்ல முறையிலே செய்வது நாம் ரமழான் மாதத்தைக் கண்ணியப்படுத்தினோம் என்பதற்குச் சிறந்த அறிகுறியாக இருக்க முடியும். ஒரு மனிதனின் வாழ்வில் சுகமும் துக்கமும் சுழலும் சக்கரங்களாக இருக்கின்றன. வாழ்விலே உண்மையான வெற்றியை அடைந்தவன் உள்ளத்தைக் கட்டுப்படுத்தியவனே. ஆகவே, அத்தகைய உளக் கட்டுப்பாட்டைப் படித்துத்தரும் நோன்பை, நாமும் அனுசரித்துப் பயன் பெறுவோமாக.

# இதோ விளக்கம்....

"செட்டிக்கும் பயிர்த்தொழிற்கும் பொருந்தமில்லை." செட்டியார் வாணிபத்தில் சிறந்தவர், எனவே அவர் உழவு செய்ய முடியாது என்று எம்மவர் கூறுவர். அது தவறு. 'செட்டி' என்னும்போது சிக்கனத்தையும், பரபரப்பையும் குறிக்கிறது. இவையிரண்டும் உழவுத் தொழிலுக்கு லாயக்கல்ல என்பதே பழமொழியின் கருத்து.

"கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டாம்." நம்மழகைக் காணத்தான் கண்ணாடி வேண்டும். 'புண்' என்று இங்கே குறிக்கப்படுவது 'பூண்' என்றதே. அது திரிந்து புண்ணாக மாறிவிட்டது. கையில் பூண்வளை போன்றவற்றை அணிந்து அழகுபார்க்க கண்ணாடி வேண்டாம் என்பதே பொருள்.

"நாய் காணின் கல் காணார்." நாயை அடிக்கக் கல்லைத் தேடினால் கல்லைக் காணமுடியாது. உண்மையான கருத்து நாய்ச் சிலையை நாய் என நினைத்துப் பார்த்தால் நாய்தானிருக்கும் கல்லிராது. கல்தான் என்று நினைத்தாலோ நாயிராமல் கல்லாகத்தான் இருக்கும். இதைத்தான் 'நாய் காணின் கல் காணார்' என்றனர் முதியோர்.

அனுப்பியவர்: சானா - சாவன்னா,
ஊவாகட்டவளை.

**அன்புள்ள மருமக்களே!**

பொங்கலும் வந்து போய் விட்டது. நீங்கள் எல்லோரும் ஆனந்தமாகப் பொங்கி மகிழ்ந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

'வளர்மதி'யில் பெரிய கதை, கட்டுரை, கவிதைகளுக்கு இடமில்லை. சிறிய கதை, கட்டுரை, கவிதைகளையே எழுதி அனுப்புங்கள். தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதுங்கள். மையினாலேயே எழுதுங்கள். இந்த விதிகளுக்கடங்காத கட்டுரைகள் பரிசிலனைக்கு எடுக்கப் படமாட்டா.

உங்கள் அன்பின்,
வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ஏழாலையில் இலங்கையர்கோன் இரண்டாவது நினைவு விழா

### கோலாகலமாக நடந்தேறியது

'கலைஞர்களைப் பிறந்த நாடு மதிப்பதில்லை என்பதை இவ்விழா பொய்ப்பித்து விட்டது'' என்று 4-1-64ல் ஏழாலை மேற்கில் கோலாகலமான முறையில் திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இலங்கையர்கோன் 2வது நினைவு விழாவில், உடுவில் எம். பி. திரு. தருமலிங்கம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் பேசுகையில் இலங்கையர்கோனுடைய கதைகளில் மண்வாசனையும் தமிழ்ப் பண்பும் நிறைந்திருந்தன என்று கூறினார்.

விழாச் சபைத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் இலங்கையர்கோன் ஒரு திறமையான 'சிற்பி', என்றார்.

விழாச் சபைக் காரியதரிசி திரு தா. சண்முகநாதன் இலங்கையர்கோன் எமது உள்ளத்தில் என்றும் நிறைந்திருப்பார், என்று சொல்லிவிட்டு இலங்கையர்கோன் தன்மானம் மிகுந்தவர், தனக்கென ஒரு பாதை வகுத்து வாழ்ந்தவர் என்பதற்கு, நகைச் சுவைக் கதைகளை உதாரணமாக வைத்துக்கொண்டு பேசினார்.

திரு. இ. திருநாவுக்கரசு, பண்டிதர் அவர்கள் பேசுகையில் இலங்கையர்கோனுடைய கவிதை நடை வேறு சிறுகதை நடை வேறு நாடக நடை வேறு நேரில் பேசும் பேச்சு நடை வேறு என்று கூறினார்.

திரு. நாவேந்தன் இலங்கையர்கோனுக்கு ஏன் விழா? என்ற தலைப்பில் பேசுகையில், 'இலங்கையர்கோன் எழுத்தாளருக்கு ஒரு வழிகாட்டி. சங்க இலக்கியங்களை இலங்கையர்கோன் நிறையப் படித்தவர். இலக்கியத்திலுள்ள போலி, உண்மைகளை இலங்கையர்கோன் நன்கறிந்தவர்கள்' என்று கூறினார்.

கலைச்செல்வி ஆசிரியர் திரு. சி. சரவணபவன் (சிற்பி) அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் வரவேற்புரையில் வெளிநாடுகளில் எழுத்தாளர்களைப் போற்றுவதுபோல் இங்கில்லை; அதற்காக நாம் வெட்கப்பட வேண்டும் என்றார்.

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை இலங்கையர்கோனுடைய நாடகக் கலைபற்றி ஒரு சிறந்த விமர்சனச் சொற்பெருக்காற்றினார்.

ஏழாலையில் சமயப் பணி புரிந்துவரும் திரு.மு. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு "சித்தாந்தச் செம்மல்" என்றகௌரவப் பட்டத்தை விழாச் சபையின சார்பில் திரு. நா. முத்தையா, ஆத்மஜோதி ஆசிரியர் சூட்டி அவரைப் பற்றி ஒரு சிறந்த சொற்பெருக்காற்றினார். தேவன் யாழ்ப்பாணம் அனைவருக்கும் நன்றி கூறினார். திருமதி இலங்கையர்கோன் பரிசு வழங்கியதும் வசந்தகான சபையாரின் மயான காண்டம் நாடகம் ஆரம்பமாயிற்று, இலங்கையர்கோன் நினைவாக இசைக்கப்பட்ட நினைவு கீதத்துடன் விழா இனிது நிறைவேறியது.

### நல்லூர் தெற்கு சன சமூக நிலையம்

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய பதினைந்தாம் ஆண்டுக் கூட்டம் அதன் தலைவர் திரு. த. இராசரத்தினம் தலைமையில் 29-12—63 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது.

தலைவர் தனது ஆரம்ப உரையில் அப்பகுதியிலுள்ள அங்கத்தவர்களின் ஒற்றுமையால் இச்சன சமூக நிலையம் மென் மேலும் வளர்ச்சியடைவது பாராட்டுக்குரியதென்றும் சென்றநான்கு வருடங்களாக ஒத்துழைத்துத் தம்முடன்பொது சனத்தொண்டில் ஈடுபட்ட வாலிபர்களுக்கும் நன்றி பாராட்டி எதிர்காலத்தில் நிறைவேற விருக்கும் திட்டங்களையும் ஓர் தலைவரைப் புதிதாக நியமித்து நிறைவேற்றும்படி வேண்டிக் கொண்டார்.

செயலாளன் திரு. பொ. புண்ணியசிங்கம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துச் சென்ற நான்கு வருடங்களிலும் இதனோடு இணைந்து செயலாற்றும் இளைஞர் மன்றம், இளம் விவசாயிகள் கழகம், பஞ்சாயத் சபை ஆகியவற்றின் சேவைகளைப் பாராட்டிப் பேசி, இவ் வருடம் புதிய உத்தியோகத்தர்களை நியமித்துத் திட்டங்களை அமுல் செய்யும்படி வேண்டிக் கொண்டார்.

தனதிகாரி திரு.இ. செல்வமாணிக்கராசா தமது வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பித்தார்.

மீண்டும் சென்ற வருடத்திற் கடமையாற்றியோரையே தெரிவு செய்யும் வண்ணம் சபை ஏகமனதாகத் தீர்மானிக்கவே பின்வருவோர் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. த. இராசரத்தினம், துணைத் தலைவர் திரு. சி. வைத்திலிங்கம், செயலாளர்: திரு. பொ. புண்ணியசிங்கம், துணைச் செயலாளர்: திரு. ம. சு. துரைராசா, பொருளாளர்: திரு. இ. செல்வமாணிக்கராசா, உப இணைப் பொருளாளர்கள்: திரு. அ. இரத்தினம், திரு. செ. சிவரெத்தினம், கணக்குப் பரிசோதகர்: திரு.பொ. ஏரம்பு, ஆசிரியர். ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் மு. காசிப்பிள்ளை, க. செல்லத்துரை, க. வேந்திரமூர்த்தி, சிவ. பரமநாதன்.

---

### நல்லூர் பஜனைச் சபை

வெள்ளிக்கிழமை 3-1-64 மாலை 7 மணியளவில் கட்டுடை சீரணி நாகம்மாள் ஆலயத்தில் நல்லூர் பஜனைச் சபையின் ஆதரவில் திரு. தி. கந்தசுவாமியால் பஜனை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பஜனை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இலவச சமய தீட்சையும் அங்கு தை மாதத்தில் அகில இலங்கைப் பொது ஜன சேவை சங்கத்தினரால் நடாத்தப்படும் என்று தெரிகிறது.

### மாதகல் செ. தொமஸ் சனசமூக நிலையம்

---

#### புதிய நிர்வாகிகள்

மாதகல் சென்ற் தொமஸ் சன சமூக நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவில், புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ச. பா. யோசெவ், உபதலைவர்: திரு. தோ. செபஸ்தியாம்பிள்ளை, காரியதரிசி: திரு. அ. லூயிஸ், உப காரியதரிசி: திரு. கி. ம. நீற்றர், தனதிகாரி, திரு. ஆ. அன்ரெனி பர்னன்டோ, விளையாட்டுத் தலைவர்: திரு. தொ. அன்ரெனிபெர்னந்து, நிலையப்பாதுகாவலர்: திரு. கி. ஜேச் மரியதாஸ்.

நிர்வாக சபை அங்கத்தினர்:— திருவாளர்கள்: க. அருளானந்தம், அ. சந்தியோகு, சீ. ஞானப்பிரகாசம், ம. இருதயநாதர்.

சன சமூக நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. இந் நிலையத்துடன் இணைக்கப்பட்ட புதிய கட்டிடத்தின் திறப்பு விழா திரு. சா. ஜே வே. செல்வநாயகத்தினால் திறக்கப்பட்டு, போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. அன்று. பிற்பகல், நிலையத் தலைவர் திரு. ச. பா. யோசெவ் அவர்களின் தலைமையில் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. நிலையக் காரியதரிசியால் வருடாந்த அறிக்கையும் தனதிகாரியால் கணக்கு விபரமும் கூறப்பட்டன. பேச்சாளர்களாகத் திருவாளர் ஜே. எஸ். செல்வநாதர், க. அருளானந்தம், எஸ். ஏ. சேம்பர்லீன், கி. ம. நீற்ரர் ஆகியோர் கலந்து கொண்டனர். பின் தேநீர் விருந்துடனும், விளையாட்டுத் தலைவரின் நன்றியுரையுடனும் விழா முடிவுற்றது.

---

### கலா படிப்பக மன்றம்

கரணவாய் தெற்கு கலா படிப்பக மன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 2-1-64ல் நடைபெற்ற பொழுது தமிழரசுக் கட்சி நடாத்தும் மொழியுரிமைப் போரில் பங்கு பற்றுவதைத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதுவருட நிர்வாகிகளாகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஐ. சிவகுரு, துணைத் தலைவர்: திரு. எம். எஸ். ஜேசுதாசன், செயலாளர்: செல்வன் ஜே. ஜெயக்குமார், பொருளாளர்: செல்வன் கந்தையா நீலகண்டன், ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: செல்வன்கள் வே. மகாலிங்கம், ஜே. உதயக்குமார், செ. மகேந்திரன், கு. குலசோதி, எஸ். இராஜசிங்கம்.

மொழியுரிமைப் போராட்டத்தில் கிராம மக்களுக்குப் பிரசாரம் செய்வதற்காக திரு. ஜே. ஜெயக்குமார், திரு. ஐ. சிவகுரு, திரு. கு. குலசோதி, ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இக் குழுவிற்கு [illegible] கிளைத் தலைவர் திரு. கே. ஜெயக்[illegible] தலைமை வகிப்பார்.

### சகல அர்ச் தமிழ் கலவன் பாடசாலை

சகல அர்ச் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவ சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் 22-12-63 அன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கீழ்க் கண்டோர் நடப்பு வருட (1964) நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. ஜோண் மைக்கல், துணைத் தலைவர்: திரு. செல்வராஜ் தாசன், செயலாளர்: திரு. ஏ. எல். தாஸ், துணைச் செயலாளர்: திரு. சுப சிவம், பொருளாளர்: செல்வி ஜெயமேரி, துணைப் பொருளாளர்: திரு. அந்தோனிராஜ், காப்பாளர்கள்: திரு. கே எஸ். லியோனிஸ் பர்னந்து, திரு. கதிரவேலு, மேற்பார்வையாளர்கள்: திரு. கந்தையா, திரு. ஞானப்பிரகாசம். 17 பேர் கொண்ட ஆட்சிக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

### அருந்ததிய வாலிப முன்னேற்றச் சங்கம்

இலங்கை அருந்ததியர் வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் 1964ம் ஆண்டு நிர்வாகிகளாகச் சங்கப் பரிசோதகர் நியமனத்தின் கீழ் பின் வருவோர் பதவி ஏற்கின்றனர்.

பாதுகாவலர்: திரு. ஆர். சுப்பிரமணியம், ஆலோசகர்: திரு. ஏ. மூர்த்தி, தலைவர்: எம். மணிமுத்து, துணைத் தலைவர்: கி.பொன்னம்பலம், செயலாளர்: க. மனோகரன், பொருளாளர்: என். முனியாண்டி, பரிசோதகர்: ப. கடர்கரை.

## தெளிவு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கும் பழக்கத்தை ஒழித்து விடுவாயாக.'

'சலீம் என்னடா வாய் பிதற்றுகிறாய்.'

திடுக்கிட்டுக் கண் விழிக்கிறேன். பக்கத்தில் தாய் நின்று கொண்டிருக்கிறாள். கண்களைக் கசக்கியவாறு எழும்பி, சுற்றுமுற்றும் பார்க்கிறேன். பொழுது புலர்ந்திருந்தது.

'என்ன சலீம் ஏதோ முணுமுணுத்தாயே. கனவு கண்டாயா?'

'துக்கமான கனவொன்று கண்டேன் உம்மா.' இதைக் கூறும்போது என் தொண்டை துக்கத்தால் கரகரக்கிறது.

'கெதியாய் எழும்பிரு. இன்றைக்குப் பெண் பார்க்கப் போகிறோம்.'

'யாருக்கு.'

உனக்குத்தான், கலியாணத்திற்கு முடிவு கேட்டு காசிம் போடியார் வியவனம் அனுப்பி இருக்கிறார்..' தாயார் பேச்சை முடிக்கவில்லை. நான் குறுக்கிடுகிறேன்.

'எனக்கு இந்தக் கலியாணமே வேண்டாம்.'

'என்ன'—தாயின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிகின்றன.

'நான் கதிஜாவைத்தான் முடித்துக் கொள்ளப் போகிறேன்.' தாயின் பதிலைக் கவனிக்கவில்லை. படுக்கையிலிருந்து எழும்புகிறேன். எனது முடிவைத் தெரிவிப்பதற்காகக் கதிஜாவின் வீட்டை நோக்கி விரைவாக நடக்கிறேன்.

என் இதயம் காற்றைப் போல இலேசாக இருக்கிறது.

## சம்மாந்துறை தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்

"புத்தாண்டு புலர்ந்த இம் முதல் தினம், தமிழ் பேசுகின்ற மக்களுக்குப் பெருந்துக்க தினமாகப் பிறந்திருக்கிறது எல்லோரும் மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டிய இப்புத்தாண்டு தினத்தை ஈழவாழ் தமிழ் பேசும் மக்கள் வேதனையோடு நோக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைக்கு ஆக்கப்பட்டுள்ளார்கள். சிங்களத் திணிப்பு தீவிரப்படுத்தப்படும் இத்துக்க தினத்தில் இத் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் உதயமாவதையிட்டு ஒருவகையில் வீர மகிழ்ச்சி அடைய வேண்டியிருக்கிறது.

எப்போதும் புதிதாக ஆரம்பமாகும் இயக்கங்கள் குதூகலமான முறையில் ஆரம்பிக்கப்படும். ஆனால் இவ்வியக்கம் தமிழ் மக்களின் துயர வெள்ளத்திலிருந்து முளைக்கின்றது. இன்றையப் பொல்லாத துயரத்தையும் மீறி முளைக்கின்ற இவ்வியக்கத்தின் தொடர்ச்சி வீரம் மிகுந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன். இத் தினத்திலிருந்தே தமிழ் மொழியின் பாதுகாப்புக்கான திடசங்கற்பங்களை ஆக்கிக் கொள்ளவேண்டும்."

இவ்வாறு 1-1-64ல் சம்மாந்துறையில் உதயமான தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தை ஸ்தாபித்து வைத்துப் பேசும்போது திரு. யூ. செயின் அவர்கள் குறிப்பிட்டார்.

ஜனுப் எம். எம். முஸ்தபா அவர்கள் பேசுகையில், "எமது இவ்வியக்கம் எம் பகுதியில் சிறந்த முறையில் இயங்கி பொது மக்களின் பேராதரவைப் பெறவேண்டும். தமிழின் நலன் கருதி நாம் உழைப்பதைப் பார்த்து மொழியை அலட்சியம் செய்பவர்கள் வெட்கப்பட வேண்டும். பெற்ற தாயைப் போல், பேசுகின்ற தாய் மொழியையும் மதிக்கவேண்டும்'' என்றார்.

மற்றும், மதியன்பன், எம். மீரா முகையதீன், கலைத் தொண்டன் ஆகியோரும் பேசினர்.

மேற்படி இயக்கத்தின் பதவியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஜனுப் யு. எல். அலியார், செயலாளர்: ஜனுப் எம். எம். முஸ்தபா, பொருளாளர்: ஜனுப் ஐ. எம். இப்ருஹீம், துணைத் தலைவர்: ஜனுப் எம். மீரா முகையதீன், துணைச் செயலாளர்: கலைத் தொண்டன்.

கூட்ட முடிவில் சிங்களமொழி தமிழ் மக்களிடையே கட்டாயமாகத் திணிக்கப்படுவதைக் குறித்து மதிய உணவு உண்ணுமல் மூன்று நிமிடங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இறுதியாகத் தலைவர் ஜனுப் யு. எல். அலியார் அவர்கள் தனது முடிவுரையில், "இந்த இயக்கம் இன்று தொட்டு வலுவாக வளர்ந்து கொண்டு போக வேண்டும். எம்மை நோக்கி வரும் இன்னல்களை முறியடித்து இதற்காக எம் வாழ்வில் சில தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். நாம் ஆற்றுகின்ற இப் பணி, நமது தாய் மொழிக்கு மட்டுமன்றி நம் தாய் நாட்டுக்கும், நம் பிற்கால சந்ததியினருக்கும் பயன்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

கடைசியாச் செயலாளர், அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

இவ்வியக்கம் தமிழ்ச் சேவையை மூலக் கொள்கையாகக் கொண்டு இயங்குமெனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன. 30ம் தேதி மகத்தான வெளியீடு

திருமண வாழ்வுக்குப் பின் பத்மினி நடிக்கும் முதல் தமிழ் சித்திரம்!



ஆயிரக் கணக்கான ரசிகர் களின் ஏக்கத்தைப் போக்க சினிமாஸ் திரைகளில் பவனி வருகிறது.

மாடர்ன் தியேட்டர்ஸ்

# காட்டு ரோஜா

எஸ். எஸ். ராஜேந்திரன், பத்மினி, கே. ஏ. தங்கவேலு, பி. எஸ். சரோஜா, மனோகர், புஷ்பலதா, வி. கே. ராமசாமி, ஜி. வரலக்ஷ்மி மற்றும் பலர் நடிக்கும் புதுமைச் சித்திரம்!



மகத்தான 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 6 திரைகளில்!

எம். ஜி. ஆர்.—பி. சரோஜாதேவி
சுப்பையா—நம்பியார்—ராஜம்மா
அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

சரவண பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

மயிர்க்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள்!
திடீர் திடீரென மாறும் மர்மக் காட்சிகள்!!
கேட்கக் கேட்கத் தெவிட்டாத கானங்கள்!!!
மற்றும் பல நவீன அம்சங்கள் மலிந்த உன்னதச் சித்திரம்



வெற்றிகரமான 2வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) லிபெர்டி (பதுளை)
பிரீதி (அட்டன்) ஆனந்த (கம்பளை) ஜோதி (திருகோணமலை)

சிவாஜி கணேசன்—பத்மினி—ராகினி—டி. ஆர். ராமச்சந்திரன்
நாகையா—ராமராவ்—சாரங்கபாணி—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

# நான் வணங்கும் தெய்வம்

இசையமைப்பு:
கே. வி. மஹாதேவன்

நடனம்:
கமலா லக்ஷ்மண்—அம்பிகா—பத்மினி பிரியதர்சினி—ராகினி


விஞ்ஞான ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்ட ஓர் டாக்டருக்கு உதவ தன்னையே அர்ப்பணிக்கிறாள்.
இதன் விளைவு அவன் ஒரு மிருக குணம் படைத்த மனிதனாக மாறுகிறான் முடிவு? வெள்ளித் திரையில்



சனத்திரள் நிறைந்த தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நெல்சன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை) அசோகமாலா (நீர்கொழும்பு) இம்பீரியல் (மட்டக்களப்பு)

எம். ஜி. ஆர்.
பானுமதி,
வீரப்பா,
ராஜ்ஸ்ரீ, சகுந்தலா,
நடித்த



விஞ்ஞான நவீனம் பற்றிய முதல் தமிழ் படம்!

விறுவிறுக்கும் கத்திச் சண்டைக் காட்சிகள்!

பாடல்கள்! நடனங்கள்!

ஆகியவை ஒருங்கே அமைந்த

# கலை அரசி



கெயிட்டி
சனிக்கிழமை 25ம் திகதி முதல்!
ஜெயராஜ்—ஐபின்—கிருஷ்ணகுமாரி
சந்திரகுமார்—மீனா மும்தாஜ்
நடித்த

# மாய வீரன்

பின்னணி: ஜானகி — ஸ்ரீனிவாஸ் — ராஜலட்சுமி — கே. ராணி

செல்லமஹால்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
எம். ஜி. ராமச்சந்திரன் — சாவித்திரி
நடித்த

# மகாதேவி

(புத்தம் புதிய கொப்பி)

எதிர்பாருங்கள்!
எம். ஜி. ராமசந்திரன், தேவிகா, வீரப்பா
மற்றும் பலர் நடித்த

# ஆனந்த ஜோதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஜனவரி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.